www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
JuDE
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
மே.11-17,1997
ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 204

## ஆடு புலி ஆட்டம் கள நிலவரம்

## ஊடறுப்பை முறியடிக்கும் பாதுகாப்பு இரகசியம்



## பழம்பெரும் நடிகையின் மறுபக்கம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## காணாமல் போகும் பெயர்கள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

தமிழ் மக்களை விடுவிக்கவே
யுத்தம் என்று
அரசாங்கம் கூறிவருவதை
நாம் அறிவோம்!

அரசாங்கம்
வெளிப்படையாகக் கூறாத
ஒரு காரியமும்
நடந்தேறிவருவதாகத் தெரிகிறது!

தமிழ்ப் பிரதேசங்களை
அவற்றின் பாரம்பரியப் பெயர்களில்
இருந்து விடுவிக்கும்
காரியம்தான் அது!

யாழ் குடாநாட்டுக்கு
'யாப்பா பட்டுன'
என்று பெயர் சூட்டப்பட்டது!

சமீபத்தில்- வன்னியில்
பறையனாலங்குளத்திற்கு
'சப்புமல்புர' என்று
புதுப்பெயர் சூட்டப்பட்டுள்ளது!

கடந்த காலங்களில்
திட்டமிட்ட குடியேற்றங்கள்
என்னும் வெள்ளத்தில்
தமிழ்ப் பிரதேசங்களோடு
அவற்றின் பெயர்களும்
அள்ளுண்டு காணாமல் போயின!

கிழக்கு மாகாணத்தில்
தமிழ்- முஸ்லிம் கிராமங்கள் பல
குடியேற்ற வெள்ளத்தால்
காணாமல் போய்விட்டன!

தமிழ் பேசும் மக்களின்
விமோசனத்துக்கான போராட்டத்தில்
நில உரிமை- நிலப்பாதுகாப்பு
என்பதும் மிக முக்கியமான
உயிர் நாடிகளில் ஒன்று!

'சுவர் இருந்தால்தான்
சித்திரம் வரையலாம்.'
தமக்கென்று ஒரு பூமி இருந்தால்தான்
எந்தவொரு இனமும்
தனித்துவத்துடன்
தலைநிமிர்ந்திருக்கலாம்!

இனப்பிரச்சனையைத் தீர்ப்போம்
என்று அரசாங்கம் சொல்கிறது.

ஆனால்- இனப்பிரச்சனை
எத்தகைய காரணங்களால்
கொளுந்துவிட்டெரிகிறதோ
அத்தகைய காரணங்கள்தான்
இன்றும் தொடர்கின்றன!

இனப்பிரச்சனைத் தீர்வு
சிங்கள மக்களுக்கு
பாதகமானதல்ல என்பதை
நிரூபிப்பதிலே காட்டும் கரிசனை
தமிழ் பேசும் மக்களை
திருப்திப்படுத்துவதிலும்
இருக்க வேண்டாமா?

இனப்பிரச்சனை
தீவிரமான காரணங்களை
அரசாங்கம் புரிந்துகொண்டால்,
திருப்தியான தீர்வைக்
காண்பதில் சிக்கல் இருக்காது!

ஆனால்- அரசாங்கம்
எந்தளவுக்குப் புரிந்து
கொண்டிருக்கிறது?

அவ்வாறு புரிந்துகொண்டிருந்தால்
'யாப்பா பட்டுன'
'சப்புமல்புர'
போன்ற பெயர் சூட்டல்களால்
சந்தேக விதைகள் தூவப்பட்டிருக்காது!

சாதாரண சிங்கள மக்கள்
இப்படியெல்லாம்
பெயர் மாற்றுமாறு
ஒருபோதும் கேட்கவில்லை!

ஆனால்- பெயர் மாற்றங்களை
தமிழர் தரப்பில் கண்டிக்கும்போது
அது இனங்களுக்கிடையேயான
விரோதமாக மாறுகின்ற
சாத்தியங்கள் இருக்கின்றன!

ஆனால்-கண்டிக்காமலோ
கண்டு கொள்ளாமலோ
இருக்கக்கூடிய செயல் அல்ல.
எனவே- அரசாங்கத்தின்
இவ்வாறான அணுகுமுறைகள்
இன விரோதங்களை
வளர்த்துவிடுவதாகவே அமைகின்றன!

இனவிரோதங்கள் வளருவதும்
தமிழ் பேசும் மக்களின்
மனங்களைப் புண்படுத்தும்
காரியங்கள் தொடர்வதும்
நம்பிக்கை தரும் சூழலை
கட்டியெழுப்பப் போவதில்லை!

தமிழ் பேசும் மக்களின்
அரசியல் அபிலாசைகளில்
முக்கியமானவை
பாரம்பரிய பிரதேச பாதுகாப்பு!

யுத்தத்தில் பிடிபடும் பகுதிகளை
பெயர் மாற்றும்
படலம் தொடருமானால்,
யுத்தத்தின் நோக்கம்
புலிகளைப் பலவீனப்படுத்துவது
மட்டுமல்ல;
தமிழ் பேசும் மக்களின்
அரசியல் கோரிக்கைகளையும்
பலவீனப்படுத்துவதும்தான்
என்று அர்த்தமாகிவிடும்!

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## என்னை நோக்கி கூப்பிடு....



முகாந்திரம் இல்லாமல் என்னைப் பகைக்கிறார்களே! என் கண் இடைவிடாமல் ஓய்வின்றிச் சொறிகின்றதே! எனக்கேற்பட்ட காயம் பெரிதாயிருக்கின்றதே! என்றெல்லாம் அங்கலாய்க்கும் உள்ளங்கள இப் பாரில் கோடி!

புலம்பல் 3:59-66 கூறுவது போல "கர்த்தாவே, எனக்கு உண்டான அநியாயத்தைக் கண்டீர்; என் நியாயத்தை தீரும். அவர்கள் கைகள் கிரியைகளுக்குத்தக்கதாக அவர்களுக்கு பலனளியும். அவர்களுக்கும் இருதய வேதனைகளை கொடும்!" என்றெல்லாம் புலம்புகிறோம். "நான் இவ்வளவு காலமாக ஜெபிக்கின்றேனே! என்னுடைய ஜெபம் இன்னும் கேட்கப்படவில்லையே?" என்று கேட்கிறோம்.

ஆண்டவர் எல்லாக் காரியத்தையும் நம்முடைய நன்மைக்காகவே செய்வார் என்பதை மறந்துவிடக்கூடாது. நாம் ஒருபோதும் துன்பப்பட அவர்கள் இடங்கொடுக்கமாட்டார். நம்முடைய கண்ணீருக்கெல்லாம் நிச்சயமாகவே முடிவு உண்டு. எம் நம்பிக்கை வீண் போகாது. நீதி 23:18 இதனை கூறுகின்றது.

"நிச்சயமாக முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண் போகாது!"

இடைவிடாத துன்பங்கள், தொல்லைகள், பொய்க் குற்றச் சாட்டுகள்- இவற்றால் வருந்தும் உள்ளங்களே! நிச்சயமாக இதற்கு முடிவு உண்டு. இரக்கமுள்ள தேவன் எங்கள் விண்ணப்பத்தைக் கேட்பார்- எல்லாவற்றையும் அதனதன் காலத்தில் நேர்த்தியாய் செய்து முடிப்பார்.

நாம் செய்ய வேண்டியதென்ன? "என்னை நோக்கிக் கூப்பிடு. அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்!" எரேமியா 33:3 கூறுகின்றது.

நாமும் அவரை நோக்கி கூப்பிடுவோம்.. ஏற்ற காலத்திலே மறு உத்தரவு கொடுப்பார். கலங்காதிருப்போம்.

ஜே.புளோரன்ஸ், அம்பக்கோட்டை, கெங்கல்ல.

## அண்ணல் நபியின் பொன்மொழிகள்

* தான் பெற்ற அறிவின் படி செயற்படாத மனிதனே மறுமை நாளில் எல்லா மனிதர்களிலும் மிக இழிந்த நிலையில் இருப்பான்.
* அடுத்தவர்களைச் சபிப்பவர்கள் மறுமை நாளில் சாட்சிக்காரர்களாகவோ, பிறருக்காகப் பரிந்து பேசுபவர்களாகவோ இருக்க முடியாது.
* ஒரு மனிதன் பிற மனிதனை நோக்கி, 'பாவி' என்றோ அல்லது 'காபிர்' என்றோ ஏசினால்-அத் தன்மைகள் அவனிடம் இல்லாவிட்டால், அந்த ஏச்சு ஏசிய மனிதனுக்கே திரும்பிவிடும்.
* ஓர் அடியான் தன் சகோதரனுக்கு உதவி செய்து கொண்டிருக்கும் காலமெல்லாம் இறைவன் அவ்வடியானுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறான்.
* ஒருவனுக்குப் பொருளும், தானியமும் குவிவது செல்வமல்ல; 'போதும்' என்ற மனப்பாங்கே செல்வமாகும்.
* சிக்கனமாகச் செலவு செய்வது சம்பாதிப்பதில் அரைவாசி; மக்களோடு நல்ல முறையில் பேசி மகிழ்வது புத்தியின் அரைவாசி; நல்ல முறையில் வினவுவது அறிவின் அரைவாசியாகும்.
* ஒருவன், தான் பிறரிடமிருந்து கேட்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்காமல் அதைப் போய் அடுத்தவரிடம் கூறினால், அதுவே அவன் பொய்யனாவதற்குப் போதுமானதாகும்.
* உடலில் ஒரு துண்டு மாமிசப் பிண்டம் உண்டு. அது சீராகிவிட்டால் உடல் முழுவதும் சீராகி விடும். அது சீர் கெட்டுவிட்டால் உடல் முழுவதும் சீர் கெட்டுவிடும். அதுவே உள்ளமாகும்.
* அண்டை அயலான் பசித்திருக்க, தான் மட்டும் வயிறு புடைக்க உண்டு புசிப்பவன் உண்மை விசுவாசி அல்ல.

தொகுப்பு: ஏறாவூர், ஏயாரெம் றிஸ்வான்.

## கவிதைப் போட்டி இல.201



### பரிசுக்குரிய கவிதை

**இன்றும்**

வானத்தையும் தாண்டிவிட்ட
விஞ்ஞான காலத்திலும்
வாழ்விடத்தை தாண்டிச் செல்லும்
வனவாச இடம்பெயர்வில்
கைகொடுத்து உதவியது
கற்கால வாகனம்தான்.

க. உதயகுமார்-கொழும்பு-13.

**இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:**

**மறக்காது**

மாட்டு வண்டியிலே
பயணிக்கும் போதும்
பயந்தோடி வரும் போது
விட்டுக்குள் விட்டு வந்த
உன் புகைப்பட ஞாபகம்
மறக்காது கண்மணியே!

இ- நவ்:.பர்-முதூர்.

**பொறாமை**

காணாமல் போகாத-
இடைநடுவே உடையாத
உள்நாட்டு வாகனம்....
ஜாக்கிரதை
'புக்காரா' கண்டால்
பொறாமைப் படும்!

பா.கணேசன்-
பண்டியதாழ்வு,யாழ்ப்பாணம்.

**நாயாக.....**

நீ தேடும் நிழல் உனக்கு
நிச்சயம் கிடைத்திருக்கும்.
நம்மவராய் பிறக்காமல்
நாயாகப் பிறந்திருந்தால்...

அ.சந்தியாகோ-
அசோகா வித்தியாலயம்,கண்டி.

**வ-ப**

'யாழ்ப்பாணம்
வழமைக்குத் திரும்பிவிட்டது!'
மன்னிக்கவும்...!
ஒரு எழுத்தில் தவறு.
'வ' என்பதை
'ப' என்று மாற்றிக் கொள்ளுக!

செல்வி. ஜீவஜோதி-
மட்/துறைநீலாவணை.

**யாழ்**

விஞ்ஞானம் விண்ணை
முட்டுது;
அஞ்ஞானம் மனக்கதவை
தட்டுது;
நாங்கள் இன்னும்...!

சுபா வரன்-கண்டி.

**இடம் பெயர்வு**

இடம் பெயர்ந்த போதும்
மறவாமல் பின் தொடரும்
நன்றியுள்ள ஜீவன்!
மனிதமும்
இடம் பெயர்ந்ததோ
நாலுகால் ஜீவனிடம்?!

செல்வி அ.புஸ்பராணி-
பதுளை.

**துணை**

கார்களில்
பயணித்த காலம் போயாச்சு;
கால்களால் பயணிக்கவும்
கண்ணிவெடி பயமுமாச்சு!
ஐந்தறிவு ஜீவனை
அன்புடனே வளர்த்ததனால்
இழுத்துச் செல்லும் துணையாச்சு!

க.வெற்றிவேல்-தெஹிவளை.

**உத்தரவாதம்?**

பத்திரமான
பயணத்துக்கு உத்தரவாதம்;
இவர்கள் இருப்பது
வடக்கு-கிழக்காக
இல்லாதிருந்தால் மட்டும்!


என்.சிவகுமார்-வவுனியா.

**திருப்பம்**

பாதை மாறியதால்,
மீண்டும்
புறப்பட்ட இடத்திற்கே
வாழ்க்கை திரும்பியது!
அதுதான்
பழமை முகம் காட்டுகிறது!

அ.கண்மணி-பசறை.

## கவிதைப் போட்டி இல.204



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 17.05.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.204
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

அன்பான முரசே!

எப்படி நலமா? நீ தாங்கி வரும் அம்சங்கள் யாவும் வெரி சூப்பர்... கனவு மெய்ப்பட வேண்டும் தொடர்கதை மற்றும் பூலானின் தொடர், காயத்ரி, ரசிகனின் இலக்கிய நயம் என்பன என் மனதைத் தொட்டன.

என் முரசே! என் மேல் கோபப்பட வேண்டாம்! வாரா வாரம் உன் நலத்தை என்னால் விசாரிக்க முடியாது. ஏன் என்றால் நான் கடல் கடந்து இருப்பதால்.

செல்வி. கலா சாமிநாதன், சுரா, குவைத்.

அன்புடன் முரசுக்கு!

நான் எழுதும் முதல் கடிதம் இது முரசே!

உன்னை நான் சில மாதங்களாகவே படிக்கிறேன் ஏன் என்றால் முன்பு, தமிழ் தேசத்தில் உன்னை கண்ணால்கூட கண்டதில்லை. பின்பு நீ உலாவும் பகுதிக்குள் நான் வந்ததும் என்னால் உலாவர முடியவில்லை. அதனால் உன்னை என்னால் காணமுடியவில்லை. இப்பொழுது கிழமைதோறும் உன் வரவை எண்ணிக் காத்திருக்கிறேன். உன்னை படித்துக் கொண்டிருக்கும்போது அந்நியநாட்டில் அகதிமுத்திரையில் அடிமையாக வாழ்கிறோம் எனும் குற்ற உணர்வு நீங்கி, தாயகத்தில் இருப்பது போல் தோன்றும்.

வவுனியா ரகு, ஜெர்மன்.

ஆசிரியர் அவர்களுக்கு,

கடந்த ஆறு மாதங்களாக முரசை வாசித்து வருகிறேன். முரசில் மலரும் அனைத்து மலர்களுக்கும் நல்லொரு மணமுண்டு. இவற்றில் எனக்கு மிகவும் பிடித்தமானது, ரசிகனின் இலக்கிய நயம். முரசைக் கையில் எடுத்ததும் முதலில் பார்ப்பதும் அதைத்தான். வள்ளுவரின் குறளுக்கான விளக்கத்தை தரும் பாணியே தனி. கவிதை நடையை உரைநடையிற் கலந்து, பாமர மக்களுக்கும் விளங்கக் கூடிய எளிய நடையில் அமைத்துள்ளார்.

எனது சிறு விருப்பமொன்றை இக்கடிதத்தின் மூலமாக உங்களுக்குத் தெரிவிக்கவிரும்புகிறேன். என்னவெனில், இலக்கிய நயத்தின் அனைத்துப் பிரதிகளையும் எனக்கு அனுப்பிவைப்பீர்களா?

சி. குகதாசன், கனடா.

*சிரமம்தான்! தங்களுக்கு தபால் மூலம் பதில் அனுப்பப்பட்டுள்ளது.* ஆ.ர்.

அன்பு முரசுக்கு!

பிரிட்டிஷ் அமைச்சர் லியாம் பொக்ஸின் மூக்கு இங்கு நுழைந்த மர்மத்தை புட்டு வைத்த பெருமை முரசுக்கே சேரும். பொக்ஸின் முயற்சியை விழுந்து விழுந்து பாராட்டியதோடு அல்லாமல், தாங்களும் ஏமாந்து, எம்மையும் ஏமாற்றினார்களா? அல்லது தெரிந்தே ஏமாற்றினார்களா பாராட்டிய அரசியல்வாதிகள்? வெட்கம்! வெட்கம்! இவ்வளவுதானா இவர்களது அரசியல் ஞானம்? இல்லாத ஒன்றுக்கு என்னென்ன பேரோ?

எஸ்.எம். அழகராசா, பாண்டிருப்பு.

## வெட்கம்-வெட்கம்

இந்தியப் படையினரின் அத்துமீறல்கள் நியாயப்படுத்த இயலாதவையே. இந்திய அரசு இங்கு தலையிட்ட நோக்கத்தில் சொந்த நலன் இல்லையென்று சொல்லவும் முடியாதுதான். ஆனால் இந்திய மக்களும் எம்மவரை வெறுக்கும் அளவுக்கு ராஜீவ் கொலைவரை சென்றிருக்க வேண்டுமா? என்பதே எனது கேள்வியாகும். விடுதலைப்புலிகள் இழைத்த பாரிய தவறு அதுதான் என்பதே என் தீர்க்கமான கருத்தாகும். முரசும் இதனை ஏற்று முன்னர் கருத்து வெளியிட்டதாக ஞாபகம்.

சா. ஜேசுதாசன், பிரான்ஸ்.

எவ்வித தளம்பலும் இல்லாமல் 'முரசு' தரும் அரசியல் விமர்சனங்கள் அருமை. சமீபத்தில் கிளம்பிய ஊகங்கள், வதந்திகளால் குழம்பிப் போனபோது 'முரசு' வந்து உண்மை உரைத்தது. என்ன இது 'முரசு' மட்டும் முற்றிலும் மாறாய் விமர்சிக்கிறதே என்று நினைக்கையில், அடுத்த வாரமே 'முரசு' கணித்ததுபோல் நிலமைகள் மாறியதைக் கண்டோம்.

என். சுலைஹால், கல்முனை.

சினிமா உலக சங்கதிகளை சாறு பிழிந்துதரும் முரசாருக்கு முதுகில் நாலு 'ஷொட்' போட வேண்டும். ஜூலியா சூப்பர் ஜொள்ளய்யா!

என். ரமணன், மாத்தளை.

ரூபராணி, ஜெயமணி இருவரும் தரும் சிறுகதைகள் நன்றாய் உள்ளன. காலத்தின் வெளியீடுகளாகவும் அமைகின்றன.

ஆர். ஜெயசீலன், கொழும்பு-11.

### புதையல்

'அந்த நாள் ஞாபகம்' எங்குதான் தேடிப்பிடிக்கிறீர்கள் புதையல்களை? அனைத்துப் புகைப்படங்களும் பாதுகாக்கப் படவேண்டியவையே. முரசை வெட்டுகிறேனே என்ற கவலை ஒரு புறம் இருந்தாலும், அந்தப் படங்களை வெட்டி ஒட்டி சேகரிக்க வேண்டியிருக்கிறது.

செல்வி இ. உதயா, மன்னார்.

அன்பின் முரசே!

நீ வாரா வாரம் சுமந்து வரும் 'கொள்ளை ராணி பூலான் தேவி' மிகவும் சிறப்பாக செல்கின்றது. காயத்ரி தொடர் கதையும் வீறு நடை போடுகின்றது. மற்றும் சினிவிசிட், சிறுகதைகள், சிந்தியா கேள்வி பதில் என்பன வெகுஜோர். என்றும் உன்பணி தொடர எனது நல்வாழ்த்துக்கள்.

ஐ.எஸ். ஜெலீலா-நிந்தவூர்-03.

என் இனிய முரசே!



நீ தாங்கி வரும் அரசியல் தகவல்கள் உண்மைகளை வெளிப்படுகின்றன. பூலான் தொடர் ஜெள்ளுடன் கவர்கிறது எழுதிய காயத்ரி மற்றும் இலக்கியநயம் சூப்பர். கந்த சாமியாரின் கற்பனை அருமையாக இருந்தது.

தர்மலிங்கம் அனுரேகா,
ஆரையம்பதி-2.

**மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவுசெய்யப்பட முடிந்தவர்கள்:**

* சிவலிங்கம் சுகந்தி, செட்டிபாளையம்.
* அ. காசிம், அக்கரைப்பற்று-06.
* என்.கே. வேணி, பலாங்கொடை.
* பத்மினி பிரசன்னா, மட்டக்களப்பு.
* கோ. சங்கரலிங்கம், திருப்பழுகாமம்.
* திருமதி மீனா சண்முகநாதன், மாளிகாவத்தை.
* அப்துல் முனாஃப், கொட்டாரமுல்லை.
* எஸ். சந்தியா, எஸ். வித்தியா, மன்னம்பிட்டி.
* வே. ராஜா, புப்புரஸ்ஸ.
* ப. சங்கர், கொழும்பு.
* ஏ.எஸ். ஆதிமூலம், தெல்தோட்டை.
* சண்முகம் மனோகரன், அப்புத்தளை.
* கே. யாழினி, குறுமண்வெளி.
* நித்தியன், வவுனியா.
* கே. ரவி, கொழும்பு-06.
* எல். மசூர், காத்தான்குடி.
* கே. கோகிலம், கந்தெகெதர.
* மா. சத்தியேந்திரன், ஜெர்மன்.



படிப்பகம்

www.padippakam.com

# "விடுதலைப் புலிகளுக்கு எதிரான சதி!"
## "ஆதாரமற்ற செய்திகள் கட்டவிழ்ப்பு!"

விடுதலைப் புலிகளின் சர்வதேச பிரசாரத்தை முறியடிக்க அரசும், அதன் ஏஜண்டுகளும் மேற்கொண்ட முயற்சி தோல்வி கண்டுள்ளதாக புலிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசுடன் புலிகள் இரகசியமாகப் பேச்சில் ஈடுபட்டிருப்பது போலவும், ஆளும் தரப்புக்கும், எதிர்க்கட்சிக்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்த விரும்பியது போலவும் வெளியான வதந்திகள் தொடர்வாகவே புலிகள் அவ்வாறு தெரிவித்துள்ளனர்.

சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் திசை திருப்ப இலங்கை அரசும், அதன் பிரசார ஏஜண்டுகளும் செய்த சதி முயற்சியே அதுவாகும். என்று புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிக்காவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கண்டுள்ள உடன்பாடானது தமிழ் மக்களுக்கு எதிரான பேரினவாத சக்திகளின் ஒற்றுமையே. தமிழ் மக்களின் தேசியப் போராட்டத்தை ஒடுக்கவும், அப்போராட்டத்திற்கு ஆதரவாக வளர்ந்து வரும் சர்வதேச ஆதரவைச் சீர்குலைக்கவுமே இந்த ஒற்றுமை ஏற்பட்டுள்ளது.

இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வை முன்வைத்துள்ள சிறீலங்கா அரசு, சர்வதேச சமூகம் முன்பாக சமாதான வேடம் போட்டுள்ளது என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

"சரணடைவு இல்லாத சமாதான முயற்சிகளுக்கு புலிகள் எப்போதும் தயாராகவே இருக்கிறார்கள். தமிழ் மக்களின் கழுத்தை நெரித்துக் கொண்டு அரை குறைத் தீர்வை வழங்குவதற்காகவே அரசாங்கம் புலிகளை ஒடுக்க முனைகிறது. தமிழர்களின் அரசியல் இராணுவ பலத்தை நசுக்க இராணுவத்தீர்வில் நாட்டம் காட்டுகிறது.

அதேவேளையில், தமிழ் மக்களை உள ரீதியில் சோர்வடையச் செய்யவும், விடுதலைப் புலிகள் பலவீனமாகிவிட்டதாகத் தெரிவிக்கவும் சிறீலங்கா அரசும், அதன் பிரசார ஏஜண்டுகளும் ஆதாரமற்ற செய்திகளைப் பரப்புரை செய்து வருகின்றனர்" என்று புலிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# யாழில் வெறிச்சோடிய காவலரண்கள்!
## "மீளமுடியாத பொறி!"- புலிகள் எச்சரிக்கை!

வன்னியில் படை நடவடிக்கைக்காக யாழ் குடாநாட்டில் இருந்தும் பெருமளவான படையினர் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இதனால் யாழ் குடாநாட்டில் நெருக்கமாக அமைக்கப்பட்டிருந்த காவலரண்களில் படையினரைக் காணமுடியவில்லை.

முன்னர் வவுனியா- மன்னார் தரைப் பாதைத் திறப்புக்கான 'எடிபல' இராணுவ நடவடிக்கையின்போதும் யாழ் குடாநாட்டில் இருந்து படையினர் கொண்டு செல்லப்பட்டனர். அப்போதும் காவலரண்கள் பல வெறிச்சோடிக் காணப்பட்டன. 'எடிபல' முடிந்தவுடன் அங்கு சென்ற படையினர் மறுபடி யாழ் திரும்பினார்கள்.

"காவலரண்களின் எண்ணிக்கை குறைந்தாலும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பாதிப்பு எதுவும் ஏற்படமாட்டாது. படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள யாழ் நகருக்குள் புலிகள் திரண்டுவந்து தாக்க முடியாது. பாதுகாப்புச் சுவர் இருப்பதால் புலிகளின் பாரிய ஊடுருவல் பற்றியும் கவலை கொள்ளத் தேவையில்லை!" என்று யாழ்ப்பாணத்திலுள்ள படை உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காவலரண்கள் குறைக்கப்பட்டதால் படையினரின் சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் தீவரமாகலாம் என்று கருதப்படுகிறது.

### திருமலையில் புலிகள்

திருக்கோணமலை மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதனையடுத்து முகாம்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் உஷார்படுத்தப்பட்டுள்ளன.

வன்னியில் படை குவிப்பு தீவிரமாக உள்ளதால் வேறு முனை ஒன்றில் புலிகள் பாரிய பாய்ச்சலில் ஈடுபடலாம் என்று எதிர்பார்க்கப்பட்டு வருகிறது.

தலைநகரான கொழும்பிலும் தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

"வவுனியா நகருக்குள் புலிகள் பெருமளவில் ஊடுருவி உள்ளனர். பாதுகாப்பு ஏற்பாடுகள் இறுக்கமாக இருப்பதால் அவர்களால் குறிப்பிடத்தக்க தாக்குதல்களை நடத்த இயலாமல் இருக்கிறது," என்று வவுனியா பொலிஸ் வட்டாரங்கள் கூறியுள்ளன. வவுனியா நகரில் பதட்டத்தை ஏற்படுத்த புலிகள் தொடர்ந்து முயற்சிப்பர் என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

இதேவேளை, வவுனியா நகரில் இராணுவ உளவுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் 29.04.97 அன்று சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

"வன்னியில் படை நடவடிக்கை எமது பிரதான தளப்பகுதியை நோக்கி மேற்கொள்ளப்படுமானால், படையினர் பாரிய விலை கொடுக்க வேண்டியிருக்கும்.

படையினரை மீள முடியாத பொறிக்குள் சிக்கவைக்க எம்மால் முடியும்!" என்று புலிகள் வன்னியில் தெரிவித்துள்ளனர்.

### வன்னியில் விபத்து

வன்னியில் படை நடவடிக்கையை எதிர்பார்த்து புலிகள் பலத்த தயாரிப்புக்களில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 04.05.97 அன்று வெடி குண்டுகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் பலியாகியுள்ளனர்.

லெப்டினண்ட் வீரவன் (செல்வச்சந்திரன் தர்மரத்தினம், யாழ்ப்பாணம்), இரண்டாம் லெப்டினன்ட் குஞ்சன் (சிவானந்தன் சிவக்குமார்) ஆகியோரே வன்னி வெடி விபத்தில் பலியானவர்களாவர்.

## அதிரடிப் படைக்கு 10 ஆயிரம் பேர்!
### மூடப்பட்ட முகாம்கள் திறக்கப்படுமா?

பொலிஸ் துறையின் ஓர் அங்கமான அதிரடிப் படை (எஸ்.ரி.எஃப்)ப் பிரிவுக்கு மேலும் 10,000 பேரைச் சேர்த்துக் கொள்ள பொலிஸ் துறைக்கு அரசாங்கம் அனுமதி அளித்திருக்கிறது.

இந்தச் சிறப்புப் பிரிவின் பலத்தை அதிகரிக்க வேண்டும் என்று பல வருடங்களாக அரசாங்கத்தை அதிகாரிகள் வற்புறுத்தி வந்தனர். ஆனால் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களிலேயே விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்புப் பணியிலீடுபட்டு வந்தனர். இவ்விரு மாவட்டங்களிலும் இப்பிரிவினருக்கென அமைக்கப்பட்டிருந்த முகாம்களில் படைவீரர்களுக்குப் பற்றாக் குறை இருந்து வந்தது.

கடந்த வருடம் அம்பாறை மாவட்டத்திலிருந்த புலுக்குணாவை முகாம் புலிகளால் நிர்மூலமாக்கப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களிலிருந்த அதிரடிப்படை முகாம்கள் பல மூடப்பட்டன.

புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுவோரைக் கொண்டு, மூடப்பட்ட முகாம்களை மீண்டும் திறப்பதே அரசின் நோக்கமாகும்.

'எனினும் குறிப்பிட்ட எண்ணிக்கையானோரை சேர்த்துக்கொள்வது சிரமம்,' என்றும் கருதப்படுகிறது. படைகளில் சேருவதற்கு முன்வருவோர் எண்ணிக்கை குறைந்து வருவதே அதற்கு காரணமாகும்.

### அஸ்தி கரைக்கத் தடை?

திருக்கோணமலை கடலில் இந்துக்கள் அஸ்தி கரைப்பதைத் தடுக்க வேண்டும் என்கிறார் திருமலை அரச அதிபர். திருக்கோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் தனது கோரிக்கையை அவர் முன்வைத்திருக்கிறார்.

கடலில் அஸ்தியைக் கரைப்பதால் கடல் நீர் அசுத்தமாகிறதாம். அதுதான் திருமலை அரச அதிபரின் தீராத கவலையாம்.

"திருமலை அரச அதிபரின் இத்தகைய போக்குகள் புதியவை அல்ல. ஆனால் இவ்வாறான அரச அதிபரை திருமலையில் தொடர்ந்து வைத்திருப்பது மூலம் இனவாத நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன," என்று ஓர் இந்து நிறுவன பிரதிநிதி தெரிவித்தார்.

## "விடுதலைப் புலிகளுக்கு தடை வேண்டும்!"
### அமெரிக்காவிடம் கோரினார் அமைச்சர் பீரிஸ்

எல்.ரி.ரி.ஈ.யை அமெரிக்க அரசாங்கம் அந்நாட்டில் தடை செய்யவேண்டும் என்று சிறிலங்கா அரசின் சார்பாக நிதி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், கிளிண்டன் நிர்வாகத்தைக் கேட்டுள்ளார். எல்.ரி.ரி.ஈ. ஒரு பயங்கரவாத இயக்கம் என்பதால் அதனைத் தடை செய்ய வேண்டும் என்றும் அதற்கான நியாயபூர்வமான அத்தாட்சிகளையும் அமெரிக்க அதிகாரிகளிடம் தான் கையளித்திருப்பதாகவும், அந்நாட்டிலிருந்து திரும்பிய அமைச்சர் பீரிஸ் ஆங்கிலத் தினசரி ஒன்றுக்கு கூறியிருக்கிறார்.

"எல்.ரி.ரி.ஈ. இயக்கம் தன்னுடைய நடவடிக்கைகளுக்காக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏராளமான பண உதவிகளைப் பெற்று வருகிறது. இதனால் தான் அவ்வியக்கத்தின் தலைவர் பிரபாகரன் சமாதானமான முறையில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட விரும்பாதிருக்கிறார். ஆகவே இவ்வியக்கத்துக்கு நிதிவந்து சேரும் வழிகளைக் கண்டறிந்து, அவற்றைத் தடுக்கவும் அமெரிக்க அரசாங்கம் உதவி புரிய வேண்டும்" என்றும் அமைச்சர் பீரிஸ் கோரிக்கை விடுத்திருப்பதாகவும் தெரிகிறது.

### பலியான பொதுமக்கள்!

வவுனியாவில் உள்ள படை நிலைகள் மீது புலிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக வவுனியாவில் இருந்து படையினர் ஷெல் தாக்குதல் நடத்தினர். புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் தரையிலிருந்து நடத்தப்பட்டன, அதேவேளை, விமானப்படை விமானங்களும் குண்டுத் தாக்குதல் நடத்தின.

இத் தாக்குதல்களில் மூன்று பொது மக்கள் பலியாகினர். யாழ்ப்பாணம் சுன்னாகத்திலிருந்து இடம்பெயர்ந்து சென்று கனகராயன் குளத்தில் வசிப்பவரான வைரவி திருநாவுக்கரசு (48), மாங்குளத்தைச் சேர்ந்த லொறிச் சாரதியான பஞ்சலிங்கம், யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை ப.நோ.கூ.சங்க லொறிக் கிளீனரான கருப்பையா ஆகியோரே பலியானவர்களாவர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நாலு சகோதரிகள் மற்றும் புளியங்குளம் சந்தி கமலா உணவக உரிமையாளர் திருமதி கமலா, துரை ரகுவண்ணன், ஆறுமுகம் ஆனந்த நடராஜா ஆகியோர் படுகாயமடைந்தனர்.

## நாலு உளவு விமானங்கள் நாசம்
### கொழும்பு ஆங்கில ஏடு தகவல்!

கடந்த மே முதலாம் திகதி தன்னியக்க உளவு விமானம் ஒன்று வன்னிப் பகுதியில் காணாமல் போனது தெரிந்ததே. ஏற்கனவே கடந்த ஜனவரி 6ம் திகதியும் தன்னியக்க உளவு விமானம் ஒன்று காணாமல் போயிருந்தது. இதுவரை இரண்டு தன்னியக்க உளவு விமானங்களே காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் நான்கு தன்னியக்க உளவு விமானங்களை இலங்கை விமானப்படை இதுவரை இழந்துள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார ஏடு தகவல் வெளியிட்டுள்ளது.

இரண்டு தன்னியக்க உளவு விமானங்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது அநுராதபுரத்தில் விழுந்து நொறுங்கியதாக அத் தகவல் கூறுகிறது. கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் ஒன்றும், இந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் ஒன்றுமாக அந்த விபத்துக்கள் ஏற்பட்டன என்று அத் தகவல் மேலும் தெரிவிக்கிறது.

இஸ்ரேலிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட தன்னியக்க உளவு விமானங்கள் பயிற்சியின்போதே காலை வாரிவிட்டிருந்தன. அவ்வாறு இருந்தும் இஸ்ரேலிடம் தொடர்ந்தும் அதே விமானங்கள் வாங்கப்பட்டது ஏன்? என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்ட ஈழப்போரின் பின்னர் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்தபடி இதுவரை விமானப்படையினர் 18 விமானங்களையும் ஹெலிக்கொப்டர்களையும் இழந்துள்ளனர். அநுராதபுரத்தில் விழுந்து நொறுங்கிய இரண்டு உளவு விமானங்களையும் சேர்த்தால் தொகை 20 ஆக உயர்கிறது.

## மன்னாருக்குள் செல்ல மூன்று நாட்கள்!
### மினி இராணுவ முகாம்கள் நிறுவப்படுகின்றன

(மன்னார் நிருபர்)

மன்னார் பெருநிலப் பகுதியிலுள்ள இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் இருந்து மன்னார் நகருக்கு வந்து செல்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

கடந்த 03.05.97 அன்று மட்டும் சுமார் ஆயிரத்தி நூறு பேர், 13 பஸ்கள் ஒரு லொறி ஆகியவற்றின் மூலம் உயிலங்குளத்திலிருந்து மன்னார் வந்தனர்.

இப்பகுதி மக்களுக்காக முன்பு விடத்தல் தீவுப் படகுச் சேவை நடைபெற்றது. தற்போது இச் சேவை நிறுத்தப்பட்டு, பரப்பாங்கண்டல் வரையான பஸ்சேவை நடைபெறுகிறது.

விடத்தல் தீவு, மடு போன்ற பிரதேசங்களிலிருந்து வரும் பயணிகள் உயிலங்குளம், அடம்பன் சந்திக்கு சற்றுத் தூரத்திலுள்ள வழியாக உள்ளே வர அனுமதிக்கப்படுகின்றனர். முன்பு படகுச்சேவை நடைபெற்ற செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் மட்டுமே பயணிகள் வர அனுமதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு வரும் பயணிகள் தம்முடன் ஓரளவு பொருட்களைக் கொண்டு செல்வதால், இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் பொருட்களின் விலைகளும் சற்றுக் குறைந்துள்ளன. முன்பு படகுச் சேவை நடைபெற்றபோது 300-400 பயணிகள்வரையே மன்னார் வந்தனர். தற்போது இத் தொகை மும்மடங்காகியுள்ளதால் நகரில் சன நடமாட்டமும் அதிகரித்துள்ளது.

இதேவேளை மன்னார்த்தீவிலுள்ள கரிசல், நடுக்குடா ஆகிய இடங்களில் மினி இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு அப்பகுதியில் ரோந்துப் பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

## யாழில் துப்பாக்கிச் சூடுகள்!
### வீசிய கைக்குண்டு வெடிக்கவில்லை!

யாழ்ப்பாணத்தில் கோண்டாவில் வடக்கில் 02.05.97 அன்று துப்பாக்கிச் சமர் நடைபெற்றது. படையினருக்கும், புலிகளுக்கும் இடையே நடைபெற்ற இச் சமரில் இருதரப்புக்கும் எவ்வித சேதமும் இல்லை. பொதுமக்கள் இருவர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் ஒருவரான பாண் வியாபாரி வல்லி சின்னராசா (வயது 59) ஆபத்தான நிலையில் யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட 28-30 வயது மதிக்கத்தக்க ஒருவரது சடலம் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டு யாழ் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது.

03.05.97 அன்று யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடம் அருகே புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கைக்குண்டொன்றை அவர்களில் ஒருவர் வீசினார். ஆயினும் அது வெடிக்கவில்லை. படையினரின் துப்பாக்கிச் சூட்டில் பத்மராசா சுதர்சினி (20) என்னும் பெண் ஒருவரும் காயமடைந்தார்.

இருபாலை விதானையார் ஒழுங்கையில் படையினரின் காப்பரண் பகுதியில் மிதிவெடியில் சிக்கிய ஒருவர் இடது காலை இழந்துள்ளார். தேங்காய் பறிக்கச் சென்ற கந்தையா செல்வரத்தினம் (58) என்பவரே காலை இழந்தவராவார்.

## செய் காணிகள் புலிகளால் பகிர்ந்தளிப்பு!

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் புலிகள் இயக்கத்தினர் தமது ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்திருக்கும் செய்கை பண்ணப்படாத காணிகளை செய்கையில் ஈடுபடுவோருக்குப் பகிர்ந்தளித்து வருவதாக அறிய வருகிறது.

புலிகளின் ஆளுகைக்குள் உள்ள பகுதிகளில் அமைந்திருக்கும்- செய்கை பண்ணப்படாமல் தரிசு நிலங்களாகவுள்ள காணிகளின் சொந்தக்காரர்கள் நகரப்பகுதிகளில்- படையினரின் கண்காணிப்பின் கீழ் உள்ள பகுதிகளில் சீவித்து வருகிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சில நிலச் சொந்தக்காரர்கள் பெருந்தொகையான காணிகளைக் கொண்டிருந்தும் அவை நீண்ட காலமாகச் செய்கை பண்ணப்படவில்லை. காணிகள் செய்கை பண்ணப்படாததால் தங்களுக்குக் கிரமமாக வந்து சேர வேண்டிய வரி வசூலிப்பும் கிடைக்கவில்லை. இதனாலேயே புலிகள் இயக்கத்தினர் இவ்விதம் செய்கைக்காகக் காணிகளைப் பகிர்ந்தளிப்பதாகக் கூறுப்படுகிறது.

தற்சமயம், நெற்காணிகளிலிருந்து சாகுபடி செய்யப்படும் ஒவ்வொரு நெல் மூட்டைக்கும் 15/= ரூபாவைப் புலிகள் இயக்கத்தினர் வரியாக அறவிடுகின்றனர்.

இது ஒரு புறமிருக்க- கடந்த பல வருடகாலமாக மட்டக்களப்பு மாவட்டதின் பல ஒதுக்குப்புறக் கிராமங்களிலிருந்து போரினாலும், சமூகக் குழப்பங்களினாலும் இடம் பெயர்ந்த மக்கள் நகரப்பகுதிக்கு வந்து குடியேறி காணிகளை வாங்குவதாலும் மட்டக்களப்பில் பெரும் காணித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு சிறு பரப்புக் காணிகளுக்கும் அதிகளவு மவுசு காணப்படுகிறது. வெறுமனே கிடந்த அரச மற்றும் தனியார் காணிகளில் பலர் அத்துமீறியும் குடியேறி வருகிறார்கள்.

## போக்குவரத்து நெருக்கடி சற்றுத் தளர்வு!
### வாகனங்கள் நேரகாலத்துடன் செல்ல அனுமதி!

(ஏறாவூர் நிருபர்)

கிழக்கு மாகாணத்தில்- குறிப்பாக மட்டக்களப்பு, கல்முனை, வாழைச்சேனை, ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி போன்ற பகுதி மக்கள் இதுவரை காலமும் எதிர்நோக்கிய போக்குவரத்து நெருக்கடி தற்சமயம் ஓரளவு குறைந்துள்ளது.

வழக்கமாக இப்பகுதிகளிலிருந்து நாட்டின் இதர பகுதிகளுக்குச் செல்லும் வாகனங்களும், இது போன்று நாட்டின் வேறு பகுதிகளில் இருந்து இப் பகுதிகளுக்குச் செல்லும் வாகனங்களும் ஓட்டமாவடியிலும் வெலிக்கந்தையிலும் தடைப்படுத்தி வைக்கப்பட்டு பகல் ஒரு மணிக்குப் பின்னரே செல்ல அனுமதிக்கப்படுவதுண்டு. ஆனால் இப்பொழுது காலை ஒன்பது அல்லது பத்து மணியளவில் பொதுப் போக்குவரத்திற்காக கொழும்பு-மட்டக்களப்பு நெடுஞ்சாலை நேரகாலத்துடனே திறந்து விடப்படுகிறது. இதனால் இதுவரைகாலமும் பயணிகள் அனுபவித்து வந்த சொல்லொண்ணாத் துன்பங்களும் நெருக்கடிகளும் ஓரளவு குறைந்துள்ளன.

ஓட்டமாவடியிலிருந்து வெலிக்கந்தை வரைக்கும் உள்ள 15 மைல் தூரம் வரையான காடுகள் வீதியின் இரு மருங்கிலும் கண்ணுக்கெட்டிய தூரம்வரை அழிக்கப்பட்டுள்ளதனால் படையினர் வீதிப் பாதுகாப்பை வழங்க நேரகாலத்துடனேயே செல்கின்றனர். இதுவே வாகனங்கள் முன்னதாகவே இவ்வீதியால் செல்வதற்கு அனுமதிக்கும் காரணமாகும்.

இதனிடையே பெரிய தடை முகாமாகவிருந்த புனாணையில் இதுவரை காலமும் அம்முகாமைச் சுற்றிய சேறும் சகதியும் நிறைந்த உப பாதையாலேயே வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டன. ஆனால் இப்பொழுது பிரதான வீதியால் நேராகச் செல்வதற்கு அனுமதிக்கப்படுகிறது. இதுபோலவே வெலிக்கந்தை-பிள்ளையாரடியிலும் வாகனங்கள் நேராகச் செல்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.

இத்தகைய மாற்றங்கள்- இதுபோன்ற கஷ்டங்கள் நிறைந்த மேலும் பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டால்-நாளாந்தம் பயணம் செய்யும் கிழக்கு மாகாணத்தின் ஆயிரக்கணக்கான பயணிகளுக்கும் வாகனக்காரர்களுக்கும் பெரும் ஆறுதலாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

## புதிய இராணுவப் படையணிகள்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்ட காலமாக நிலை கொண்டிருந்த பழைய இராணுவ காலாட்படை அணிகள் அனைத்தும் சமீபத்தில் விலக்கிக் கொள்ளப்பட்டு அதற்குப் பதிலாகப் புதிதாகப் பயிற்சிபெற்ற இளம் காலாட் படை அணியினர் அந்தந்த இடங்களில் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து ஏற்கனவே விலக்கிக் கொள்ளப்பட்டுள்ள படையணியினர் நீண்ட காலமாக பொதுமக்களுக்கு நன்கு பரிச்சயமாகியிருந்தனர். ஆனால் தற்போது சோதனைச் சாவடிகளில் நிலைகொண்டுள்ள புது முகங்களான இளம் படையணியினர் பொதுமக்களுக்கு மிகுந்த அசௌகரியத்தை உண்டு பண்ணுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விலக்கிக் கொள்ளப்பட்டுள்ள பழைய, சிரேஷ்ட படையணியினர் வன்னிப் பகுதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் படை நகர்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

புதிதாக நிலைகொண்டுள்ள படையணியினர் சமீபத்தில் பயிற்சி முடித்து வெளியேறியவர்களாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# மாநகர ஆணையாளரின் புறக்கணிப்பு!
## வரியிறுப்பாளர் பொது நலக்குழு கவலை!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாநகரப் பகுதியில் நிலவும் பல பிரச்சனைகள் குறித்துக் கலந்தாலோசிப்பதற்கு வாய்ப்பான சந்தர்ப்பமொன்றை ஏற்பாடு செய்து தருமாறு மட்டக்களப்பு மாநகர ஆணையாளரை, மட்டக்களப்பு மாநகர வரியிறுப்பாளர் பொதுநலக்குழு கடிதம் மூலம் கேட்டிருந்தது. அக்கடிதம் கடந்த 09.04.97 அன்று மாநகர ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

அதற்கேற்ப கடந்த 25.04.97 அன்று பி.ப. 3.30 மணிக்குக் குறிப்பிட்ட பிரச்சனைகள் தொடர்பாகக் கலந்துரையாடும் பொருட்டு சந்திக்க விரும்புவதாக மாநகர ஆணையாளர் தனது 16.04.97 ஆம் திகதிய கடிதத்தின்மூலம் வரியிறுப்பாளர் பொது நலக் குழுவிற்கு அறிவித்திருந்தார்.

அதனையடுத்து வரியிறுப்பாளர் பொது நலக்குழுவிலுள்ள பல உயரதிகாரிகள், மாநகர ஆணையாளர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறித்த சந்திப்பிற்காகச் சென்றபொழுது மாநகர ஆணையாளர் அந்தப் பக்கமே முகம் காட்டவில்லை. இப்பொழுது சந்திக்க முடியாதிருப்பதாக அலுவலகப் பியோன் மூலம் செய்தி அனுப்பிவிட்டு, அலட்சியமாக இருந்துவிட்டார் என்று பொது நலக்குழுவைச் சேர்ந்த எஸ்.சந்திரா முரசுக்குத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரப் பகுதியில் நிலவும் சுற்றுச் சூழல் சுகாதாரச் சீர்கேடுகளையும், பொதுச் சந்தையில் காணப்படும் குறைபாடுகள், பொது நூலகம், மற்றும் இது குறித்த முக்கியமான பல பிரச்சனைகளைத் தாம் ஆராயத் திட்டமிட்டிருந்ததாக இக்குழுவினர் தெரிவிக்கிறார்கள். மாநகர மக்களின் நலன் கருதித் தாம் எடுத்துக் கொண்ட முயற்சியை மாநகர ஆணையாளர் உதாசீனஞ் செய்தது கவலைக்குரியது என்று வருத்தம் தெரிவிக்கப்படுகிறது.

# "மன்னார் மக்களுக்கு புதிய வாழ்வு!"
## படையினரின் பிரசுரத்தில் தெரிவிப்பு

(மன்னார் நிருபர்)

"எல்.ரி.ரி.ஈ. இயக்கம் செயற்பட்டு வந்த பிரதேசமான மன்னார் மாவட்டத்தின் மடு, அடம்பன், பள்ளமாறு, நானாட்டான் போன்ற பிரதேச வாழ் மக்களுக்கு, எடிபல இராணுவ நடவடிக்கையின் பின்னர் புதியதொரு வாழ்வு உதித்துள்ளது."

இவ்வாறு கடந்த வாரம் மன்னார் நகரில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரம் ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன் படையினரால் மேற்கொள்ளப்பட்ட எடிபல இராணுவ நடவடிக்கையின் பின்னர் இப் பகுதி மக்கள் துன்ப வாழ்விலிருந்து விடுபட்டுள்ளதாகவும் தமது விவசாயம், வியாபாரம், மீன்பிடி போன்றவற்றில் சுதந்திரமாக ஈடுபட்டுவருவதாகவும் இப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாகக் கைப்பற்றப்பட்ட பிரதேசத்தில் விவசாய நடவடிக்கையிலீடுபடுவதற்குத் தேவையான சகலதையும் பெற்றுக்கொடுக்கவும் மீன் பிடி உபகரணங்கள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச மக்கள் அனுபவித்து வந்த துன்பம் நிறைந்த வாழ்வில் இருந்து விடுபட்டு, எல்.ரி.ரி.ஈ. இயக்கத்திற்கு வழங்கி வந்த கப்பம், வரி என்பவற்றை வழங்காது தமது வாழ்வைச் சுதந்திரமாக மேற்கொண்டு செல்லக் கூடிய காலம் தற்போது அவர்களுக்குக் கிடைத்துள்ளதென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை என அப்பிரசுரத்தில் இறுதியாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. படையினராலேயே இப்பிரசுரம் வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது.

# மறு ஒளிபரப்பு தமிழ்ப் படங்கள்!
## அரச தொலைக்காட்சிகளின் அலட்சியம்

அரச கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சி நிறுவனங்களான ரூபவாகினியும், சுயாதீன தொலைக் காட்சியும் தமிழ் நிகழ்ச்சிகள் என்று பெயருக்குத்தான் ஒளிபரப்புகின்றன.

ரூபவாகினி தமிழ்ச் சேவைக்கு புதிய பொறுப்பாளர் நியமிக்கப்பட்டும் எவ்வித பயனும் இருப்பதாகத் தெரியவில்லை. மாற்றங்கள் எதுவும் காணப்படவும் இல்லை. புதிய பொறுப்பாளர் என்ன செய்கிறார்? வழக்கம் போல நாற்காலி அலங்கரிப்புத்தானா?

புதிய நிகழ்ச்சிகள்தான் தரமாகச் செய்ய முடியவில்லையென்றால், தமிழ்ப் படங்களை யாவது ஒழுங்காக, தரமான படங்களாக ஒளிபரப்பலாம் அல்லவா?

ஒளிபரப்பாகும் படங்களைத் தெரிவு செய்ய ஒரு குழு இருப்பதாக அறிகிறோம். அக் குழுவில் உள்ளவர்கள் தரமற்ற படங்களுக்கு சிபாரிசு செய்து, அதன்மூலம் பல வழிகளில் பயன்பெறுவதாக அறியமுடிகிறது. குறிப்பிட்ட குழுவினரின் பெயர்களை முரசு வெளியிடவேண்டும்! அப்போதுதான் சமூக அக்கறையுள்ள(?!) அவர்கள் பற்றி மக்களும் அறிய முடியும்.

பிற்போக்குத்தனமான கருத்துக்களை நியாயப்படுத்தும் படங்களும் ஒன்றுதான்; நீலப்படங்களும் ஒன்றுதான் என்பதை அரசு தொலைக்காட்சி அறியாமல் இருக்கலாமா?

சமீபத்தில் (30.04.97) அன்று சுயாதீன தொலைக்காட்சியில் 'பாண்டி நாட்டு தங்கம்' என்றொரு திரைப்படம் ஒளிபரப்பானது. ஏற்கனவே 'காட்சியும் கானமும்' என்ற நிகழ்ச்சியில் அத் திரைப்படத்தின் பல பகுதிகளைக் காண்பித்துவிட்டனர். பின்னர் ஏன் அத் திரைப்படத்தை ஒளிபரப்பினார்கள்? அப்படி அரச தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் அளவுக்கு அத் திரைப்படத்தில் உள்ள புதுமை என்ன?

அது ஜனரஞ்சகப் படமும் அல்ல; புதுமையான படமும் அல்ல. தமிழ்நாட்டில் வெளியாகி படு தோல்வி கண்ட படம்.

ஒளிபரப்பான படங்களை ஒளிபரப்புவது, அல்லது குப்பைகளுக்குள் குப்பையாகத் தேடி எடுத்து நேயர்களை வதைப்பது– இதுதான் சுயாதீன தொலைக்காட்சிக்கு வழக்கமாகிவிட்டது.

இனிமேலாவது தரமான படங்களை ஒளிபரப்பி தமிழுக்காக வழங்கப்பட்டுள்ள குறைந்த நேரத்தையாவது நிறைவாகப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சி.கஜேந்திரன், கொழும்பு–05.

# தொலைந்தது துர்நாற்றம்
## உறுப்பினருக்குப் பாராட்டு

(கண்டி நிருபர்)

கண்டி யட்டிநுவர வீதி ஒழுங்கையில் பல வருடங்கள் துர்நாற்றம் வீசிய பாரிய குப்பை கூழங்களின் தொகுதி அவ்விடத்திலிருந்தும் அகற்றப்பட்டது. கண்டி மாநகரசபையின் புதிய உறுப்பினர் திரு.பாஸ்கரனின் முயற்சி காரணமாகவே இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

இந்த ஒழுங்கை உட்பட கண்டி நகரின் பல ஒதுக்குப்புறங்களிலும் சுகாதாரத்திற்கு கேடுகள் அடிக்கடி எதிர்கொள்வதையிட்டு நகரவாசிகள் பெரும் பாதிப்புக்கு உட்பட்டிருந்ததை முரசு பல சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியிருந்தது.

முரசில் வந்த செய்தியை ஆதாரங் காட்டி பலர் திரு.பாஸ்கரனிடம் அது பற்றிய கவலையைத் தெரிவித்து வந்தனர்.

திரு.பாஸ்கரன் நகர மேயர் திரு.எச். துனுவிலயின் கவனத்திற்கு இதனை நேரடியாகக் கொண்டுவந்த பின்னர், திரு.பாஸ்கரனின் சொந்த முயற்சியால் ஒரு சில மணித்தியாலங்களில் மலைபோல குவிந்து பழுதுபட்டிருந்த குப்பை கூழங்கள் அங்கிருந்தும் அகற்றப்பட்டன. அவர் எடுத்த முயற்சியின் பிரதி பலனைக் கண்டறிய அவ்விடத்திற்கு மேயரும் உதவி மேயர் ஜனாப் ராஸிக் உட்பட மற்றைய உறுப்பினர்களும் விஜயம் செய்து நிலமையைப் பார்வையிட்ட பின்னர் திருப்தியும் அடைந்தனர். இந்த நடவடிக்கை குறித்து அங்கு குழுமிய மக்களும் மாநகர சபை புதிய நிருவாகத்தை வெகுவாகப் பாராட்டினர்.

# இயங்காத உப அலுவலகம்

(திருமலை நிருபர்)

சேருவிலைப் பிரதேச சபையைச் சேர்ந்த ஈச்சிலம்பற்றைக் கிராமத்தில் உள்ள பிரதேசசபை உப அலுவலகம் பல மாதங்களாக இயக்கமின்றிக் கிடக்கிறது.

சேருவிலைப் பிரதேச சபைக்குட்பட்ட ஒரேயொரு தமிழ்ப்பிரிவான ஈச்சிலம்பற்றை, ஒன்பது கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட பல கிராமங்களை உள்ளடக்கிய ஒரு பகுதியாகும்.

இங்கு பணியாற்றிய தமிழ் உத்தியோகத்தர் மாற்றலாகிச் சென்றதையடுத்து அந்த இடம் தமிழ் பேசும் உத்தியோகத்தரொருவரால் நிரப்பப்பட்டபோதிலும் மேற்படி உத்தியோகத்தர் சேருவிலையிலேயே பணியாற்றுகிறார்.

ஈச்சிலம்பற்றை அலுவலகத்தில் பணியாற்ற வேண்டியவர் ஒரு தடவை கூட அங்கு வராததால் அந்த அலுவலகம் இயக்கமின்றிப் போய்விட்டது.

போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையில், ஆபத்து நிறைந்த பிரதேசங்களூடாக சுமார் ஆறு மைல்கள் கடந்து சேருவிலை வந்து தங்கள் கருமங்களைக் கவனிக்க வேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர்.

உப அலுவலகம் இயங்காதபடியால் மக்களது தேவைகள் புறக்கணிக்கப்படுவதுடன் அந்தப்பணி அபிவிருத்தி வேலைகளும் முடங்கிப்போய்க் கிடப்பதாகக் கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

# சொற்ப நேரம் - கொச்சைத் தமிழ்?

தொலைக்காட்சி, வானொலி என்பனவற்றில் கிரிக்கெட் பற்றிய நேர்முக வர்ணனை இடம் பெறுவது நாமறிந்ததே. இந்த நேர்முக வர்ணனை சிங்கள, ஆங்கில மொழிகளில் மிகச் சிறந்த முறையில் செய்யப்படுகின்றது. ஆனால், தமிழில் நேர்முக வர்ணனையோ, பெரும்பான்மை இன அறிவிப்பாளர் மனமிரங்கி வழங்கும் சலுகை போல, யாராவது ஒருவர் ஆட்ட மிழந்தால் மாத்திரமே சொல்லப்படுகின்றது.

தமிழில் நேர்முக வர்ணனை செய்யும் அறிவிப்பாளர்கள் எங்கு தமிழ் படித்தார்களோ தெரியாது. அப்படியானதொரு குழப்பத் தமிழ். அதனைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களுக்குச் சகிக்க முடியவில்லை. ஆகவே, தமிழில் கிரிக்கெட் பற்றிய நேரடி வர்ணனை வளர்ச்சிபெற வேண்டுமானால் கூடிய நேரம் ஒதுக்குவதுடன், சிறந்த தமிழ் பேசும் அறிவிப்பாளர்களை நியமிக்கவும் வேண்டும். சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

சோ.ஸ்ரீதரன், பொகவந்தலாவ.


விளம்பரப் பகுதி



முதலாவது பிறந்த தின வாழ்த்து
09-05-1997
பாத்திமா ஸப்னா சமீம்

அக்கரைப்பற்று முதலாம் குறிச்சியைச் சேர்ந்த முகம்மட் சமீம்-சபைதா தம்பதியினரின் செல்வப் புதல்வி பாத்திமா ஸப்னா தனது முதலாவது பிறந்த நாளை தமது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடினார். இவரை அன்பு வாப்பா, உம்மா, வாப்பம்மா, உம்மம்மா, மாமாமார்கள், மாமிமார்கள், பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள், மச்சான்மார்கள், மச்சிமார்கள், காக்காமார்கள், ராத்தாமார்கள், குவைத்திலிருக்கும் பெரியப்பா, மாமா, மாமி, உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் சீரும் சிறப்பும் பெற்று பெரு வாழ்வு வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

பதுளையில் COMPUTER புலமைப்பரிசில்

1. Certified Software in Engineering Technology
   - Introduction to computers
   - DOS Ver 6.2
   - Dbase III+
   - Data Communication
   - Lotus 123
   - Windows '95
   - Excel
   - Tamil Wordprocessing
2. Diploma in Computer Studies
   - IIntroduction to Computers
   - DOS Ver 6.2
   - Dbase III+
   - Data Communication
   - Lotus 123
   - Wordperfect

மேற்காணும் இரு பாட நெறிகளுக்கான புலமைப்பரிசில்கள் மாணாக்கர்கட்கு வழங்கப் படவுள்ளது
மேலதிக விபரங்கட்கு நேரில் தொடர்புகொள்க :

MANCOMM Computer Center
No. 71B New Passara Rd.
Viharagoda, Badulla
Tel: 055 3053

ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 225/=,125/=
தங்க பஸ்பம் கலந்தது 1025/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 925=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

வகுப்புகள்

பெப்ரிக் பெயின்டிங், கொஸ்டியூம் ஜுவலறி, நிப் பெயின்டிங் வகுப்புக்கள்
No:19, ஹம்டன் லேன்
(இராசவள்ளி லேனுக்கு அண்மையில்)
கொழும்பு- 06 இல் நடைபெறுகின்றன.
தொலைபேசி: 591905, 334985

வீடு விற்பனைக்கு

புத்தளம் வான் வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இரட்டை வீடுகள்.
தொடர்பு கொள்க :
M.H.M.ரியாஸ்
40,2ம் குறுக்குத் தெரு.
புத்தளம்.
தொலைபேசி:
032/65370அல்லது
575586(கொழும்பு)



33 வருடமாக நற்பெயரைத் தன்னகத்தே கொண்டுள்ளது எமது நிறுவனம். வாடிக்கையாளர்களிடம் அவர்களது குறைகளைக் கண்ட மாத்திரமே எடுத்துக்கூறி அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவே செயல்படுகிறோம்.

மலையாள மாந்திரீகம்

எந்த மாதக் கடைசியிலும் கொழும்பில் ஸ்ரீ துர்க்கை அம்மன் பூஜையில் கலந்து நிவர்த்தி பெறலாம். காலை 09 மணி முதல் மாலை 6 மணி வரை.

தொடர்புகளுக்கு:-
P.K.SAMY ASSOCIATE (PVT) LTD.
ஸ்ரீ துர்கா தேவி ஆலயம் (மாந்திரீக பிரிவு)
உலக மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி
பி.கே. சாமி (J.D.G.A.N.)JP
NO.162, MAY FIELD ROAD
KOTAHENA, COLOMBO-13
தொலைபேசி வரிசைகள்:
342463-344831-344832-431137-07841571
ஃபக்ஸ் இல–342464
பேஜர் சென்டர் இல– 588407
தொடர்பு கொண்டு இல– 972
இனைக் கேட்கவும்.

வெளிநாட்டில் உள்ளவர்கள்
COMPUTER INTERNET. NO.....
E/MAIL/SAMY 1.2 @ SLT.LK,
WWW LGO SLT.LK.

நேரில் சந்திக்க–
காலை 9 முதல் 12 வரை
மாலை 3 முதல் 6.30 வரை
அப்பாயின்ட்மெண்ட் பெற்று வரவும்.
வெள்ளிக்கிழமை விடுமுறை.

SPOKEN ENGLISH
தபால் மூலம் கல்வி

மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க தபால் மூலம் கற்றுத் தரப்படும். விபரங்களுக்கு முத்திரை ஒட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE(PVT) LTD.
P.O.BOX-162, COLOMBO.

காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

சந்திரன்
144 2/1 காலிவீதி, வெள்ளவத்தை,
கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

UNION
யூனியன் மோட்டிஸ்
கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks,
(English Origin)
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

கனடாவின் ரொறன்ரோ மாநகரில்
மனவெளி கலையாற்றுக் குழு வழங்கும்

நான்காவது
அரங்காடல்

ஒரே மேடையில் ஆறு நாடகங்கள்


க.பாலேந்திராவின் நெறியாள்கையில்
லண்டன் தமிழ் அவைக்காற்றுக் கலைக் கழகத்தின்
- முகமில்லாத மனிதர்கள்
- ஆற்றைக் கடத்தல்
- துன்பக் கேணியிலே
- மன்னிக்கவும்

சாந்திநாதனின் நெறியாள்கையில்
- இரு துயரங்கள்

ராஜன்–செல்வன் நெறியாள்கையில்
- தண்டனை

காலம்: மே 24.1997
மாலை 6.00 மணி

இடம்:
Birchmount Park C.I.,
3663, Danforth Ave,
(Birchmount & Danforth Ave)



கட்டணம்:
பத்து டொலர்கள் மட்டுமே

தொடர்புகளுக்கு: (416) 755 8470, (416) 269 1701

இலவச பிள்ளைப் பராமரிப்பு வசதிகளும் உண்டு




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# போர் முறையில் மாறிவரும் உத்திகள்

வன்னியில் இம்முறை புதிய தந்திரம் ஒன்றைப் படையினர் மேற்கொண்டனர்.

படை நகர்வுகளை இரகசியமாக மேற்கொண்டு, படைகளை ஒன்று குவிப்பதுதான் வழக்கமாகக் கையாளப்படும் முறையாகும். அவ்வாறு ஒன்று குவிக்கப்பட்ட செய்தியை புலிகள் அறிந்து தயாராக முன்பாக படை நடவடிக்கையும் விரைவாக மேற்கொள்ளப்படும்.

ஆனால் இம்முறை வன்னியில் கள நிலைமை தலைகீழாக இருந்தது.

கடந்த மூன்று வாரங்களாகவே படையினர் வவுனியாவில் கொண்டு சென்று இறக்கப்பட்டுக் கொண்டிருந்தனர்.

கனரக வாகனங்கள், உழவு இயந்திரங்கள், ஆம்புலன்ஸ் வண்டிகள், மோட்டார் சைக்கிள் என்று வாகனங்கள் ஒரு புறமும், யாழ்ப்பாண முகாம்களில் இருந்தும், கொழும்பில் இருந்தும் கொண்டு செல்லப்பட்ட படையினர் மறு புறமுமாக படைக் குவிப்பு வெகு நிதானமாகவும், பகிரங்கமாகவும் நடந்து கொண்டிருந்தது.

**புலிகளுக்கு போதிய தகவல்கள் கிடைக்கக் கூடியதாகவும், அவ்வாறு தகவல் கிடைத்ததும் புலிகள் தயாராகி களத்தில் இறங்கிக் காத்திருக்கும் வகையிலும் கால அவகாசம் வழங்கும் விதமாகவே படையினரின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன.**

மேலோட்டமாகப் பார்த்தால் எதிரி தயாராக சந்தர்ப்பம் வழங்கும் படையினரின் நடவடிக்கை வியப்பாகத் தோன்றலாம்.

ஆனால் உண்மையில் கச்சிதமான ஒரு திட்டத்தோடுதான் படையினர் அவ்வாறு செய்திருக்கிறார்கள்.

குளத்தை குழப்பி மீன்பிடிக்கும் தந்திரத்தை ஒத்ததுதான் படையினரின் நடவடிக்கை.

படை நடவடிக்கை பற்றிய செய்திகள் அறிந்ததும் புலிகளின் அணிகள் வன்னியில் எந்தெந்த முனைகளில் ஒன்று குவிகின்றன? அவற்றின் பலம் என்ன? எவ்வாறான தயாரிப்புக்களில் ஈடுபடுகிறார்கள்? போன்றவற்றை நாடிபிடித்தறியும் தந்திரத்தில்தான் படையினர் ஈடுபட்டனர்.

அவ்வாறு நாடிபிடித்தறிந்துவிட்டு அதற்கேற்ப படை நடவடிக்கையின் பாதையையும், பலப்பிரயோக அளவையும் தீர்மானிக்கவே திட்டமிட்டனர்.

'படைகளை குவித்துவிட்டு புலிகளின் நடவடிக்கைகளைப் படையினர் நோட்டமிடுகின்றனர்; அதுதான் படை நடவடிக்கை தாமதமாகிறது' என்று கடந்த வார முரசு செய்தி வெளியிட்டிருந்தது அல்லவா.

மே முதலாம் திகதி காணாமல்போன தன்னியக்க உளவு விமானம் பற்றிய செய்தி முரசுக்கு கிடைத்த தகவலை உறுதி செய்வதாக அமைந்தது.

தரையில் படைக்குவிப்பை மேற்கொண்டபடியே இரண்டுவிதமான உளவு நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டனர்.

ஒன்று, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து வன்னிக்கு வருபவர்களிடம் புலிகளின் தயாரிப்புக்கள் பற்றிய தகவல்களை திரட்டுதல்.

இரண்டாவது வழி, உளவுவிமானம் மற்றும் விமானப்படை விமானங்கள் மூலம் வானிலிருந்து புலிகளின் நடமாட்டங்களைப் பற்றிய, தயாரிப்புக்களை பற்றிய தகவல்களை பெறுதல்.

ஏப்ரல் 30ம் திகதி அன்று தன்னியக்க உளவு விமானம் வன்னிப் பகுதியின் மேலாக பலமுறை பறந்து தகவல்களை திரட்டியது.

மேதினக் கொண்டாட்டங்கள் கொழும்பில் முடிந்த கையோடு நடவடிக்கை ஆரம்பிக்கலாம் என்று படையினர் திட்டமிட்டிருந்ததாகத் தகவல் ஒன்று கூறுகிறது.

மேதினக் கூட்டத்தில் யுத்த வெற்றி குறித்து ஜனாதிபதி பேசுவார். அவர் பேசியபின்னர் அதே சூட்டோடு படைகள் வன்னியில் நடவடிக்கையில் இறங்குவதுதான் திட்டமாம்.

அதனால் வானிலிருந்து உளவு பார்த்து புலிகளின் நகர்வுகளை அறிந்து கொள்ளும் கடைசிக்கட்ட ஏற்பாடுகள் வேகமாக நடந்தன.

மே முதலாம் திகதி தன்னியக்க உளவு விமானம் வன்னிப் பகுதியின் மேலாக தன் மூக்கை நீட்டி மோப்பம் பிடித்துக் கொண்டிருந்தது.

அநுராதபுரத்திலுள்ள கட்டுப்பாட்டு அறையிலிருந்து அந்த விமானம் இயக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

மே முதலாம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி.

தரையில் இருந்து எட்டாயிரம் அடி தூரத்தில் விமானம் பறந்து கொண்டிருந்தது.

விமானத்தின் மூக்கில் இருந்த சக்தி வாய்ந்த கமரா தன் கண்களில்பட்ட தரைக் காட்சிகளை படம் பிடித்துக் கொண்டிருக்க, படம் பிடிக்கப்பட்ட காட்சிகள் அநுராதபுரத்தில் கட்டுப்பாட்டு அறையில் உள்ள கம்பியூட்டர் திரையில் தெரிந்து கொண்டிருந்தன.

நேரம் ஒன்பது மணியைத் தாண்டிய போது கட்டுப்பாட்டு அறையின் கம்பியூட்டர் திரை மௌனித்தது. விமானத்துடன் இருந்த தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டன.

இலங்கை விமானப்படை தனது மற்றுமொரு தன்னியக்க உளவு விமானத்தை இழந்தது.

உளவு விமான இழப்பு ஏற்படுத்திய அதிர்ச்சியால் மே முதலாம் திகதி அதிஷ்டமில்லாத நாள் என்று நினைத்தோ என்னவோ படை நடவடிக்கை பின்போடப்பட்டது.

கொழும்பில் சொல்லிவைத்தாற்போல இரவு நேரங்களில் மழை பெய்வது வாடிக்கையானதும் படை நடவடிக்கை தாமதமானதுக்கு மற்றொரு காரணம்.

வெளிச்சம் இருக்கும்போதே விமான ஓடுபாதையில் விமானத்தை இறக்க முடியாமல் விமானிகள் திண்டாடுகிறார்கள். பாதை தெரியவில்லை என்கிறார்கள். அன்ரனோவ் ஒன்று அவ்வாறுதான் விபத்தாக இருந்து மயிரிழையில் தப்பியது.

எனவே மழை இருட்டில் இரவு நேர விமானப் பயணம் கடினமாகவே இருக்கும். போர் தொடங்கினால் இரவு பகலாக விமானங்கள் சேவையில் ஈடுபட்டே ஆகவேண்டும். காயமடைந்த படைவீரர்களை கொண்டு செல்வது, புலிகள் திடீர் தாக்குதலில் ஈடுபட்டால் உதவிக்கு விரைவது போன்ற பல காரியங்களை விமானப் படையினர்தான் செய்தாக வேண்டும்.

**எனவே வான்நிலையையும் அவதானித்தே படைகள் தம் நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டியுள்ளது. ஆனாலும் வான்நிலை மட்டும்தான் படை நடவடிக்கைகள் தாமதமாக ஒரே ஒரு காரணம் என்று கூறுவதற்கில்லை.**

படை நடவடிக்கையை எதிர்பார்த்து காத்திருந்த புலிகளிடம் சோர்வு ஏற்படும் போது, அவர்கள் எதிர்பாராத தருணத்தில் களத்தில் இறங்கவும் படையினர் இப்போது நினைப்பதாக தெரிகிறது.

ஆனால் படையினர் நினைப்பதைப் போல அல்லாமல் புலிகள் 24 மணிநேரமும் விழிப்பாக இருக்கக்கூடிய அளவுக்கு வேலைகள் இருக்கின்றன.

படைக்குவிப்புக்கு முன்னரே வவுனியா-கிளிநொச்சி பாதையில் புலிகள் உஷாராகவே இருந்து வருகின்றனர்.


இரவு நேரங்களில் படைகளின் நிலைகளுக்கு அருகே வந்து படையினரின் நடமாட்டங்கள் தொடர்பான தகவல்களை துருவி எடுத்துக்கொண்டு செல்கிறார்கள் புலிகளின் உளவுப் பிரிவினர்.

வவுனியாவில் இருந்து படையினர் புறப்பட முன்னரே அவர்களை அச்சுறுத்த அங்குள்ள காவலரண்கள் புலிகளின் கெரில்லாக்களால் தாக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா விமானப்படை தளம்மீதும் ஆட்டிலெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

**எதிரி எம்மைத் தேடி வரமுன்னர் நாம் எதிரியைத் தேடிச் செல்ல வேண்டும் என்பது போர் உத்திகளில் ஒன்று. புலிகளும் அந்த உத்திகளின்படியே முந்திக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.**

கடந்த காலத்தில் யாழ் குடாநாடு



# ஊடறுப்பைத் தடுக்கும் பாதுகாப்பு அரண்கள்!

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, படையினர் நடவடிக்கைகளுக்கு தயாரான போது, படை முகாம்களை நோக்கி புலிகள் மோட்டார் தாக்குதல்களில் ஈடுபதுவதுண்டு.

பலாலி விமான தளம் நோக்கியும் மோட்டார் ஷெல்கள் ஏவப்பட்டன.

ஆனாலும் ஒரு குறிப்பிட்ட கட்டத்தின் பின்னர் முந்திக் கொள்ளும் தாக்குதல்கள் புலிகளுக்கு பயன் அளிக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்ட பின்னர் புலிகள் பல்வேறு உத்திகளை பிரயோகித்தனர்.

**படையினர் தாக்குதல் யுத்தம் ஒன்றுக்கு துணியாதளவுக்கு அவர்களை தற்காப்பு கட்டத்தில் வைத்திருக்கப் புலிகள் மேற்கொண்ட உத்திகள் பயனளிக்கவில்லை. 'சூரியக் கதிர்' தாக்குதல் யுத்தம் மூலம் படையினர் யாழ் குடாநாட்டை கைப்பற்றினார்கள்.**

தற்போது வன்னியிலும் படையினரை தற்காப்பு நிலைக்குள் வைத்திருக்கவே புலிகள் விரும்புகின்றனர்.

ஆனால் காவலரண்களை தாக்குவது மூலமோ, அல்லது விமானத் தளத்தை நோக்கி ஆட்டிலெறிகளை ஏவுவது மூலமோ படையினரை கட்டுப்படுத்த முடியும் என்று நினைப்பது சரியாகாது.

வேண்டுமானால் ஒரு அச்சுறுத்தலாக இத் தாக்குதல்கள் அமையலாமே தவிர, படையினரின் வன்னி நடவடிக்கையை முற்றாக தடுத்து நிறுத்துவதற்கு போதுமானதல்ல.

அப்படி தடுத்து நிறுத்த வேண்டுமானால் வன்னியில் நிலை கொண்டுள்ள படையினர்மீது ஏதாவது ஒரு முனையில் பாரிய அழித்தொழிப்பு யுத்தத்தை புலிகள் நடத்தியாக வேண்டும்.

ஆனையிறவு, பரந்தன் முகாம்கள்மீது ஊடுருவி தாக்கியது போன்ற அதிரடி அழித்தொழிப்பு நடத்த வேண்டியிருக்கும்.

அதற்கேற்ற கெரில்லா பலம் புலிகளிடம் இருந்தாலும், அவ்வாறான ஒரு யுத்தத்தில் தமது தரப்புக்கு ஏற்படும் உயிர் இழப்புக்களையும் புலிகள் அலட்சியம் செய்யக் கூடிய நேரமல்ல இது.

ஆனால் புலிகள் பாரிய அழித்தொழிப்பு யுத்தத்தில் ஈடுபடலாம் என்ற அச்சம் படைத் தரப்பினருக்கு இருக்கிறது. அதனால் தான் புலிகளை வ்ன்னியில் தாக்குதலுக்கு தயாராகாமல் தடுக்கும் வியூகங்களை வகுத்துக் கொண்டிருக்கின்றனர்.

எதிரியை முந்திக் கொள்வது, அச்சமூட்டுவது, திசை திருப்புவது போன்ற உத்திகள் தற்காலிகமாகவே பயன் தரக் கூடியவை. எதிரியை குறிப்பிட்ட பிரதேசத்தில் இருந்து அழித்தொழிப்பது மூலம் மட்டுமே வெற்றி உறுதியாகும். இப்பிரதேசத்தின் பாதுகாப்பும் உத்தரவாதமாகும். அதுதான் யுத்த விதி.

**இந்த விடயத்தில் தற்போதைக்கு புலிகளும் வெல்லப்போவதில்லை. படையினரும் வெல்லப்போவதில்லை. அதனால் நீண்ட கால கெரில்லாப் போர் என்ற கட்டத்துக்குள் போர் சுழன்று கொண்டிருக்கும்.**

வன்னியை புலிகள் பாதுகாக்க வேண்டுமானால் அங்கு படையினரை முற்றாக அழித்தொழிக்கவேண்டும். இல்லாவிட்டால் படையினர் பகுதி பகுதியாக தம் நடவடிக்கைகளை விஸ்தரித்துக் கொண்டே இருப்பர்.

**அதுபோல வன்னியை படையினர் பூரணமாக கைப்பற்ற வேண்டுமானால் புலிகளை முற்றாக ஒழித்துக்கட்ட வேண்டும். அது சாத்தியப்படப் போவதில்லை. எனவே புலிகள் கெரில்லாத் தாக்குதல்களை தொடுத்துக் கொண்டே இருப்பர். கெரில்லாப் போரில் புலிகளை படையினரால் கட்டுப்படுத்த முடியப் போவதில்லை. வெற்றி பெறவே முடியாத ஆடு புலி ஆட்டம் இது.**

இதில் வெற்றி பெற வேண்டுமானால் புலிகளுக்கு ஆட்பலமும், கனரக ஆயுத பலமும் அவசியம். அதாவது பிறிதொரு நாட்டின் பின்பலம் கண்டிப்பாகத் தேவை.

**அதாவது கெரில்லாப் போர் முறையில் இருந்து மரபுப்போர் முறைக்கு புலிகள் மாறிச் செல்வதற்கு பின்பலமும்,ஆயுத தளபாட விநியோகமும் கண்டிப்பாகத் தேவை.**

அதனைப் பெறும் உபாயங்களிலும், முயற்சிகளிலும்தான் சர்வதேச அரங்கில் புலிகள் இப்போது கவனம் செலுத்துகின்றனர்.

இன்றைய நிலையில் வன்னிப் போர் முனையில் பூகோள நிலையை சாதகமாக வைத்தே புலிகள் தமது பதிலடிகளை நடத்திக் கொண்டிருப்பர். பூகோள நிலை சாதகமற்ற பகுதிகளில் மரபுப்போர் முறையிலான முன்னேற்றம் மூலம் படையினர் நிலைகொள்ள முடியும்.

நீண்ட நிலப்பரப்பில் படையினர் நிலைகொள்ள முடியுமா? என்றொரு கேள்வி முன்னர் இருந்தது.

**ஆனால் படையினர் தற்போது கடைப்பிடிக்கும் புதிய உத்தி குறிப்பிட்ட ஆள்பலத்தை வைத்துக் கொண்டே புலிகளின் ஊடறுப்பை தடுக்கக் கூடியதாக இருக்கிறது.**

அதுதான் பாதுகாப்பு சுவர் கட்டும் உத்தி. நீண்ட நிலப்பரப்பில் அங்குலத்திற்கு அங்குலம் படைகளை நிறுத்தினால்தான் அப்பகுதியை பாதுகாக்க முடியும் என்ற பழைய முறையை படையினர் கைவிட்டுள்ளனர்.

கைப்பற்றிய பகுதிகளுக்குள் புலிகள் ஊடுருவ முடியாதபடி பாதுகாப்பு சுவர்களை (அணைக்கட்டுப் போன்று) நீளமாக அமைத்து விடுகின்றனர். இதனை 'பண்ட்' என்று அழைக்கின்றனர்.

**யாழ்ப்பாணத்திலும் நீண்ட 'பண்ட்' அமைக்கப்பட்டுள்ளது. யாழ் நகருக்குள் செல்வதாயின் குறிப்பிட்ட சில பாதைகள் ஊடாக மட்டுமே செல்ல முடியும். அங்கு படையினரின் நிலைகள் இருக்கும்.**

**அதுபோல வவுனியா- மன்னார் பாதையிலும் புலிகள் ஊடறுக்க முடியாதபடி 'பண்ட்' அமைக்கப்பட்டுள்ளது.**

'பண்ட்'இனை நீளமாக போட்டுவிட்டு இடைக்கிடையே காவலரண் போட்டு கண்காணித்தபடி இருப்பதுதான் புதிய பாதுகாப்பு தந்திரம்.

பண்டை உடைத்து புலிகள் உள்ளே புகுந்தால் காவலரணில் இருந்து கண்டுபிடித்து விடலாம். தாக்கலாம்.

பாரிய தாக்குதல் மூலம் 'பண்ட்' இனை உடைத்து புலிகள் பிரவேசிக்கலாம். ஆனால் சில சிறு குழுக்களாக உள்ளே புகுந்து படையினரை தொடர்ச்சியாக தாக்கி தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கும் கெரில்லா உத்திகளை மேற்கொள்ள முடியாது.

**படைபலத்தை பெருமளவில் நிறுத்தித்தான் குறிப்பிட்ட பிரதேசத்தை படையினர் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும் என்ற நிலை தற்போது இல்லை.**

'பண்ட்' இனைக் கட்டும் உத்தியை படையினர் கையாண்டிருக்காவிட்டால் யாழ்ப்பாணத்தில் பல முனைகளுக்கு ஊடாக புலிகள் ஊடறுத்து படையினரை தாக்கியிருப்பர். அதுபோல மன்னார்-வவுனியா பாதையிலும் படையினர் நிலை கொண்டிருப்பது கடினமாக இருந்திருக்கும்.

எனவே நீண்ட நிலப்பரப்பில் நிலை கொள்ளும் படையினரை சிறுகச் சிறுக அழித்தொழிப்பது என்ற தந்திரத்தை புலிகள் மேற்கொள்வது தற்போது சிரமமாக மாறி இருக்கிறது.

**ஒவ்வொரு தாக்குதலையும் பலத்த சிரமம் மத்தியில், பாரிய பலப்பிரயோகம் மூலமாகவே மேற்கொள்ள வேண்டிய நிலையில் புலிகள் தமது கெரில்லா போரை தொடரவேண்டியதாகிவிட்டது.**

உள்ளே புகுந்து அடித்துவிட்டு வேகமாக தப்பிச்செல்ல இருக்கக்கூடிய பாதைகளை 'பண்ட்' இனைக் கட்டி படையினர் தடுத்து விடுகின்றனர்.

படையினர் தமது தந்திரங்களையும் உத்திகளையும் மாற்றிக்கொண்டு போர் வியூகங்களை முன்னெடுக்கத் தொடங்கியிருப்பதால், புலிகளும் தமது கெரில்லா தந்திரங்களை புதிய போர் சூழலுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளவே செய்வர். இனிவரும் காலங்கள் அந்த மாற்றங்களை பிரதிபலிக்கலாம்.

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



**யாழ் மாணவர்களை** வைத்து தெற்கில் சுற்றுலா நடத்துகினம். எக்கச் சக்கமாக செலவு செய்யப்படுகுதாம். பலத்த உபசரிப்பாம். எல்லாத்தையும் கேள்விப்பட்டு காது குளிர்ந்து போச்சு. செய்திகள் படிச்சு கண்களும் குளிர்ந்து போச்சு. அந்த நேரம் பார்த்து கரடியாக வந்தார் ஒரு நண்பர். "இங்கே சுற்றுலா நடத்துகிறது சரிதான். வவுனியா முகாமில் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் மாட்டுப்பட்டு நிற்கிறார். பொறியியல் பீடத்துக்குத் தெரிவானவர் அந்த மாணவர். தெரிவான விடயங்கள் அடங்கிய கடிதம் யாழ் முகவரிக்கு போயிருக்கவேணும். அதனால் முகாமில் முறையிட்டும் முறைப்புத்தான் பதிலாகக் கிடைக்குதே தவிர வெளியே போக அனுமதி கிடைக்கவில்லை. நல்லாப் படிச்சவைக்கு சுற்றுலா காட்டட்டும்; நல்லாப் படிக்க நினைக்கிறவையையும் திறந்துவிடலாமல்லோ? இல்லாட்டி உதெல்லாம் ஷோக் காட்டுறமாதிரித்தான் நினைக்கவேணும்!" என்டார் நண்பர்.

**திருவானமலை** நகரத்தின் தலைவராக இன்னும் சில காலத்துக்கு மட்டும் அழைக்கப்படப்போகிறவர் அவர். ஒரு பத்திரிகைக்கு அமர்க்களமாகப் பேட்டி கொடுத்திருக்கிறார். தனது கடந்தகால சரித்திரத்தில் அவர் சொல்லாமல் விட்டிருப்பவை எக்கச்சக்கம். சாம்பிளுக்கு ஒன்று தருகிறேன். அரச நிறுவனம் ஒன்றில் கூட்டான கட்சியின் சங்கரியார் தயவில் 77ல் வேலை வாய்ப்புப் பெற்ற சூரர். உரம், கிருமிநாசினி போன்றவற்றை மாயமாய் மறையவைத்து சாதனை படைத்தவர். அவரது சாதனையைக் கண்டு பொறாமைப்பட்டோ என்னவோ வேலையில் இருந்து நீக்கி வீட்டுக்கு அனுப்பினவையாம். இவ்வளவு திறமையான மனுசன் அரசியலுக்குத்தான் இலாய்க்கு எண்டு நினைக்கினமாக்கும்.

**கிழக்கின் சிங்கத்தார்தான்** கூட்டான கட்சிக்குத் தலைவராகத் தகுதியுடையவராம். கொழும்பில் இருந்து பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்துக் கொண்டிருப்பவை வெறும் வாயை மெல்லுகிற ஆட்கள்தானாம். கிழக்கில் கூட்டான கட்சி வட்டாரங்களில் பரவலாக பேசப்படும் விவகாரம் அதுதான். "ராசமான துரையரை ஏமாற்றியது மாதிரி எங்கள் சிங்கத்தையும் கொழும்புத் தலைமை ஏமாற்ற முடியாது." எண்டு சொல்லுகினம்.

**தலைநகர ஹோட்டல்** ஒன்றில் வெளிநாட்டுப் பிரமுகரின் மகன் சுட்டுக் கொல்லப்பட்ட சமாச்சாரத்தில் பாதுகாப்புக்குப் பிரதிப் பொறுப்பானவரின் மகனை சம்பந்தப்படுத்தி செய்திகள் கசிந்திருக்குது. தலைநகர ஆங்கில வார ஏடான 'லீடர்'தான் தலைப்புச் செய்தி போட்டது. குறிப்பிட்டவரை சுட்டவர் தப்பிச் சென்றது மைந்தனின் காரில்தான் எண்டும் தகவல் போட்டிருக்கினம். எல்லாம் மேலிடத்து விவகாரம். மூச்!

**யாழிலும்** போய் இறங்கியது பாதி; இறங்காதது பாதி எண்ட நிலையிலேயே வரி, வட்டி, திறை கேட்கத் தொடங்கியிருக்கினமாம் தமிழ் கட்சியினராகிய கழகத்தார். யாழில் ஒரு வர்த்தகரிடம் பணம் கேட்டார்கள். அவர் கொடுக்காததால் வவுனியாவில் உள்ள அவரது உறவினரைக் கடத்தி வைத்திருக்கிறார்களாம். அது தொடர்பாக பேச தொலைபேசியில் தொடர்பு கொண்ட உறவினருக்கும் அந்த இயக்க முக்கிய பிரமுகருக்கும் இடையே ருசிகரமான உரையாடல் நடந்ததாம். உதாரணத்திற்கு ஒரு துளி: உறவினர் தன்னை யார் என்று அறிமுகம் செய்த பின்னா பிரமுகர் காட்டமான குரலில்: "என்ன விஷயம்?" "பிரச்சனைபற்றிப் பேசவேணும்!" "எந்தப் பிரச்சனை என்றால்... நாட்டுப் பிரச்சனை பற்றியோ அரசியல் தீர்வுப் பிரச்சனை பற்றியோ- எதைப் பற்றி?" "எனக்கு ஏன் அந்தப் பிரச்சனைகளை, என் உறவினர் பற்றிப் பேசவேண்டும். இங்கே அவருடைய மனுசி, பிள்ளைகள் அந்தரப்படுகுதுகள்!" "...பதியும் புருஷன் இல்லாமல்தானே இருக்கிறா!" என்று ஒரு மேலிடப் பெயரைக் குறிப்பிட்டுக் கேலி செய்தாராம் பிரமுகர். எல்லாம் சரி, பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகுது, என்பது இதுதானோ?

**வன்னியில்** போர் மேக மூட்டம். வவுனியா அகதிகள் முகாம் பிடுங்குப்பாடுகள். இவற்றின் மத்தியில் வவுனியாவில் ஜில் ஜில் நட்சத்திர நிகழ்ச்சி நடக்கப்போகும் போஸ்டர்களும் கண்ணில் படுகின்றனவாம்!

**இந்த வாரமும்** ஒரு குறும் மற்றும் குறும்புக் கவிதை. தமிழக இதழ் ஒன்றில் படித்த ஞாபகம்.

"எளிதில்
தீப்பற்றும் பொருட்களை
ஏற்றக்கூடாதாம்–
பேருந்தில் வாசகம்.
காதலர்களே..!
தயது செய்து
கீழே இறங்குங்கள்!"



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர்

128

# 'வீடியோ டெக்' கொடுத்தால் விடுதலை கிடைக்கும்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அற்புதன் எழுதுவது

## காணாமல் போனோர்

மறுபுறம் கைதாகி காணாமல் போனவர்கள் பட்டியலும் நீண்டுகொண்டிருந்தது.

யாழ்ப்பாணம் அரியாலையில் பொன்னையா காந்தரூபன் என்பவர் கைதுசெய்யப்பட்டார். இந்தியப் படையினரின் ஜீப்பைக் கண்டதும் பயத்தில் ஓடியதுதான் காந்தரூபன் செய்த குற்றம்.

காந்தரூபனைப் பிடித்துச் சென்ற இந்தியப் படையினர் கூறிய தகவல்தான் ஆச்சரியமானது.

காந்தரூபன் ஒரு புலி என்றும், அவனிடமிருந்து இரண்டு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், பின்னர் அவனது வீட்டில் இருந்தும் பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் கூறினார்கள் இந்தியப் படையினர்.

அவர்கள் அப்படிக் கூறியதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

காந்தரூபனைப் பிடித்துச் சென்றவுடன் அவர் ஒரு புலியாக இருக்கலாம்; அதுதான் தம்மைக் கண்டதும் ஓடியிருக்கிறான் என்று நினைத்து அவனை சித்திரவதை செய்தனர்.

சித்திரவதை தாங்காமல் காந்தரூபன் செத்துப்போனார். அதனால்தான் காந்தரூபனை ஒரு புலியாகக் காட்ட கடுமையான சிரத்தை எடுத்துக் கொண்டனர்.

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் நடைபெற்ற சம்பவங்களில் ஒன்று இது:

அன்னபூரணம் என்ற தாயாருக்கு மூன்று ஆண் பிள்ளைகள். மூத்தவர் இரவீந்திரன். அவருக்கு அடுத்தவர்களான சுதாகரனும், பிரபாகரனும் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள்.

யாரோ தகவல் கொடுத்துவிட்டனர்.

அன்னபூரணம் வீட்டுக்குள் புகுந்த இந்தியப் படையினர் மூத்தவன் இரவீந்திரனைப் பிடித்துக் கொண்டு போனார்கள்.

"உன் தம்பிகள் இருவரும் எங்கே இருக்கிறார்கள்?" என்று கேட்டு இரவீந்திரனை சித்திரவதை செய்தனர்.

சித்திரவதை தாங்காமல் துடிதுடித்த இரவீந்திரன் இறந்து போனார்.

பாவம் அன்னபூரணம். மூத்த மகனை இந்தியப் படையினரின் சித்திரவதைக்குப் பலிகொடுத்தார். அதன் பின்னர் இளைய மகன் சுதாகரன் இந்தியப் படைச் சுற்றிவளைப்பில் சயனைட் விழுங்கி மரணமானார். அடுத்தவனான பிரபாகரன் இந்தியப்படையோடு நடைபெற்ற மோதலில் பலியானார்.

மூன்று பிள்ளைகளையும் பறி கொடுத்து நின்றார் அன்னபூரணம் என்ற அந்தத் தாய்.

## கைதுகள்

**1987ம்** ஆண்டு இறுதியிலும் 1988ன் ஆரம்பப் பகுதியிலும் இந்தியப் படையினரால் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களும், பெண்களும் கைது செய்யப்பட்டனர்.

தகவல்களின் அடிப்படையிலும், சந்தேகத்தின் அடிப்படையிலும் கைது செய்யப்பட்டவர்கள் ஒரு பிரிவினர்.

இன்னொரு பிரிவினர், இந்தியப் படையினரின் தேவைகளுக்காகக் கைது செய்யப்பட்டனர்.

அது என்ன தேவை? இந்தியப் படையினரிடம் பிடிபட்ட தமது பிள்ளைகளை மீட்க, பணமாகவும் பொருளாகவும் கொடுக்கவும் பெற்றோர்கள் தயாராக இருந்தனர்.

பணமாக வாங்குவதைவிட பொருளாக வாங்குவதில்தான் இந்தியப் படையினர் ஆர்வம் காட்டினார்கள்.

வீடியோ டெக், ரேடியோக்கள், ரேப் ரெக்கோடர்கள், நகைகள் போன்றவற்றைப் பெற்றுக்கொண்டு, தம்மால் கைது செய்யப்பட்ட அப்பாவி இளைஞர்களை விடுவித்தனர்.

இவ்வாறு ருசிகண்டதால் புலிகளாக இருக்க முடியாது என்று தமக்கு நன்கு தெரிந்தும்கூட, பல இளைஞர்களை அவர்கள் கைது செய்தனர். அதே நேரத்தில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் சிலரும் இந்தியப் படையினரின் பலவீனத்தைப் பயன்படுத்தி விடுதலையாகிச் சென்றனர்.

டெக்கையோ, விலை உயர்ந்த நகையையோ கொடுத்துவிட்டு நைசாக விடுபட்டுச் செல்வது புலிகள் இயக்க உறுப்பினர்களுக்குப் பெரிய காரியமல்ல.

## தடுப்பு முகாம்கள்

இந்தியப் படையினரின் தடுப்பு முகாம்களுக்குள் இருந்தவர்களும் பயங்கரமான சித்திரவதைகளை அனுபவித்தனர்.

தலை கீழாகக் கட்டித் தொங்க விடுதல், மின்சாரம் செலுத்துதல், கண்களுக்குள் மிளகாய்த்தூள் போடுதல் போன்ற கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளானார்கள்.

தடுப்பு முகாம்களில் இருந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள், உளவியல் ரீதியான சித்திரவதைகளையும் அனுபவித்தனர்.

உள்ளே இருக்கும் அந்த உறுப்பினர்களை அழைத்து விசாரிக்கும் படை அதிகாரிகள், புலிகள் இயக்கத் தலைவர்களை கெட்ட வார்த்தைகளால் திட்டுவார்கள். "புலிகளை ஒழித்துக் கட்டத்தான் வந்திருக்கிறோம்! உங்களை அழித்துவிட்டுதான் இங்கிருந்து செல்லுவோம்!" என்றும் சூளுரைப்பார்கள்.

இந்தியப்படையின் தடுப்பு முகாமில் இருந்த புலிகள் இயக்கப் பிரமுகரான நடேசன் (இன்றைய தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர்) தன் அனுபவம் பற்றி ஒருமுறை கூறியது இது:

"வெளியே நடப்பதைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு எங்களுக்கு மிகக் குறைவு. பத்திரிகைகளும் கொடுக்கப்படுவதில்லை.

அவ்வப்போது இந்தியப் படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டு உள்ளே வருபவர்கள் மூலம்தான் ஓரளவு செய்திகளை அறிந்து கொள்ள முடிந்தது. இந்திய இராணுவ அதிகாரிகள் பெரும்பாலானோர் எங்களை மிக மோசமாகவும், கேவலமாகவும் நடத்தினார்கள்.

காரணமேயில்லாமல் நாங்கள் இருக்கும் இடத்திற்கு வந்து எங்கள் தலைவர் பிரபாகரனைப்பற்றி மரியாதைக் குறைவான வார்த்தைகளால் திட்டுவார்கள்.

கேரளாவைச் சேர்ந்த ஓர் அதிகாரி ஒருநாள் என்னை அழைத்து, "இந்தியாவில் நெடுமாறன், வீரமணி ஆகிய இரண்டே இரண்டு பேர்தான் உங்களுக்காக......... கொண்டிருக்கிறார்கள். அவர்களைவிட்டால் உங்களுக்கு வேறு நாதி கிடையாது" என்று ஆபாசமான வார்த்தைகளால் திட்டினார். சில நேரங்களில் எங்கள் எல்லோரையும் சுட்டுத் தள்ளப்போவதாகவும் அதிகாரிகள் மிரட்டுவார்கள்.

இந்திய இராணுவ அதிகாரிகளில் சில நல்லவர்களும் இருந்தார்கள். எங்கள் அனைவராலும் 'மாமா' என்று அன்புடன் அழைக்கப்பட்ட ஒரு அதிகாரி இருந்தார்.

பார்ப்பதற்கு பூதம்போலத் தோற்றமளித்த அவர் மனிதாபிமானம் நிறைந்தவராக இருந்தார். அவர் தென்னாட்டுக்காரர். ஓரளவு தமிழ் பேசத் தெரிந்தவர். எங்களை அவர் அன்போடும் பரிவோடும் நடத்தினார்.

எமது சிறைவாசத்தின் பிற்பகுதியில் வெளியே நடக்கும் முக்கியமான செய்திகளை அவர்தான் சொல்லுவார். அவர் வரும் வேளையை நாங்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். எங்களைப் பார்க்க எங்கள் மனைவி மக்கள் வந்தால் அந்தச் செய்திகளையெல்லாம் முன்கூட்டியே எங்களுக்குத் தெரிவிப்பார்.

அவரைப்போன்ற அதிகாரிகள், "இந்தப் போர் தேவையற்ற ஒன்று. தமிழர்கள் நமக்கு எதிரிகள் அல்லர். நம்முடைய நண்பர்கள். அவர்களை எதற்காக எதிர்த்துப் போரிடவேண்டும்?" என்று வருத்தப்பட்டு பேசுவார்.

## படையினர் வருத்தம்

சில நேரங்களில் எங்களுக்குக் காவலாக இருக்கும் இந்திய இராணுவ வீரர்களுடனும் நான் பேசிப்பார்ப்பது உண்டு. அப்பொழுது அவர்களும் இந்தப் போரை விரும்பவில்லை என்பது எனக்குப் புரிந்தது.

இராணுவ அதிகாரிகள் குடித்துவிட்டுக் கூத்தடிப்பதையும், இந்தியாவிலுள்ள தங்கள் குடும்பத்தினருடன் மணிக்கணக்கில் தொலை பேசி மூலம் பேசுவது பற்றியும், அதேவேளையில் தாமோ மாதக் கணக்காகியும்கூட தங்கள் குடும்பத்தினருக்கு கடிதம் எழுதமுடியாமல் இருப்பது பற்றியும் இந்தியச் சிப்பாய்கள் எம்மிடம் அங்கலாய்ப்பதுமுண்டு.

விடுதலைப் புலிகளைப் பற்றிய அச்சமும், மதிப்பும் அவர்களிடம் குடிகொண்டிருப்பதை நாங்கள் பார்த்தோம். எங்கள் தலைவர் பிரபாகரனை மதிப்புக்குரிய மாபெரும் தளபதியாக இந்தியச் சிப்பாய்கள் போற்றுவதை என்னால் உணரமுடிந்தது.

இந்தியப் படையில் அதிகாரிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையே பெரும் இடைவெளி இருப்பதை நான் பார்த்தேன். அதிகாரிகளுக்கு என்று தனியான உணவு விடுதிகளும் இருந்தன. உணவிலும் வேறுபாடு இருந்தது. இந்த ஏற்றத் தாழ்வைப் பற்றியெல்லாம் இந்தியச் சிப்பாய்கள் எங்களிடம் புலம்புவதுமுண்டு.

'விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அத்தகைய ஏற்றத் தாழ்வு கிடையாது. விடுதலைப் புலிகள் என்ன உணவு உண்ணுகிறார்களோ, அதைத்தான் பிரபாகரனும் உண்ணுகிறார். மற்றத் தளபதிகளும் அப்படியே. சில சமயங்களில் தம் தோழர்களுக்கு உணவைப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு தலைவர் பிரபாகரன் பட்டினி கிடந்த நாட்களும் உண்டு, என்று நான் அவர்களுக்குக் கூறினேன். அதனைக் கேட்டதும் அவர்கள் பேராச்சரியம் அடைந்தனர். நான் சொல்லுவதை நம்ப முடியாமல் என்னைத் திகைப்புடன் பார்த்தார்கள்." இவ்வாறு நடேசன் தன் அனுபவத்தைக் கூறியிருந்தார்.

## கைதிகள் விடுதலை

இந்தியப் படையினருடன் நடைபெற்ற யுத்தத்தில் ஆரம்பக் கட்டத்தில் இந்தியப்படை வீரர்கள் 18 பேர் புலிகளால் பிடிக்கப்பட்டனர்.

# புலிகள் விடுவித்த இந்தியப் படையினர்



வன்னிக்காட்டில் அவர்களை சிறை வைத்திருந்தனர் புலிகள்.

ஆனால் இந்தியப் படையினர் தமது பிரசாரத்தில் வேறுவிதமாகக் கூறினார்கள்.

**"தம்மிடமிருந்த 18 இந்தியப் படையினரையும் புலிகள் டயர் போட்டுக் கொளுத்தி விட்டனர்" என்று பிரசாரம் செய்தனர்.**

அந்தப் பிரசாரத்தை முறியடிக்கப் புலிகள் திட்டமிட்டனர்.

1987ம் ஆண்டு நவம்பர் மாதம் சர்வதேசப் பத்திரிகையாளர்கள் முன்பாக 18 இந்தியப் படையினரையும் விடுவித்தனர் புலிகள்.

இந்தியப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள யாழ்ப்பாணத்திற்குள் அந்த கைதிகளைக் கொண்டுவந்து சேர்த்தவர் மாத்தையா. எப்படி உள்ளே வந்தனர் என்பது பத்திரிகையாளர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

கைதிகள் விடுவிக்கப்பட்ட இடத்தில் இந்தியப் படை அதிகாரிகளும் இருந்தனர்.

விடுவிக்கப்பட்ட கைதிகளிடம் கேள்விகள் எதுவும் கேட்கக்கூடாது என்று பத்திரிகையாளர்களைத் தடுத்தனர் இந்திய அதிகாரிகள்.

மாத்தையா விடவில்லை.

"நாங்கள் இவர்களைச் சித்திரவதை செய்தோமா என்று கேளுங்கள்?" என்று பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

விடுதலையான படையினரில் ஒருவரான வாமன் சிட்டி என்பவர்: "புலிகள் எங்களை மிக நன்றாகவே நடத்தினார்கள். எங்களை சித்திரவதை செய்யவில்லை" என்று கூறினார்.

உடனே மாத்தையா மற்றொரு காரியம் செய்தார்.

தன்னிடமிருந்த புகைப்படங்களை அங்கு வந்திருந்த பத்திரிகையாளர்களிடம் விநியோகித்தார்.

இந்தியப் படையினரின் படுகொலைகள் பற்றிய புகைப்படங்களே அவை.

பத்திரிகையாளர்களுக்கு ஏக குஷி பாய்ந்து பாய்ந்து புகைப்படங்களை வாங்கிக் கொண்டனர்.

இந்தியப் படை அதிகாரிகள் அதனை எதிர்பார்க்கவில்லை. செய்வதறியாது திகைத்துப் போய் நின்றனர்.

புகைப்படங்களை கொடுத்துவிட்டு கையசைத்தபடியே புலிகளும் மாத்தையாவும் மின்னல் வேகத்தில் சென்றுவிட்டனர்.

அதன் பின்னர்தான் இந்தியப் படை அதிகாரிகள் பத்திரிகையாளர்களிடம் தங்கள் வேலையைக் காட்டினார்கள்.

புகைப்படங்களை எங்களிடம் தாருங்கள். அப்படித் தராவிட்டால் இனிமேல் இப்படியான நிகழ்ச்சிகளுக்கு உங்களை அழைத்து வரமாட்டோம்" என்று கூறினார்கள். அதனால் பத்திரிகையாளர்கள் தம்மிடமிருந்த புகைப்படங்களை திருப்பிக் கொடுத்து விட்டனர்.

(தொடர்ந்து வரும்)

# "எம்.ஜி.ஆரின் கண்கள் அப்போது கசிந்தன"

தமிழக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர் விடுதலைப் புலிகளுக்கு பெரும் உதவிகள் செய்திருக்கிறார். அவை பற்றி அரசியல் தொடரில் விபரிக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் தற்போதும் புலிகளின் தீவிர ஆதரவாளராக இருக்கும் தமிழ் தேசியக் கட்சித் தலைவர் பழ-நெடுமாறன் நினைவு கூர்ந்துள்ள சில சம்பவங்கள் இவை:

1987ம் ஆண்டு மே நாளில் தமிழர்களுக்கு மகிழ்ச்சி தரும் செய்தியை எம்.ஜி.ஆர் அறிவித்தார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு நாலு கோடி ரூபாய்களும் (இலங்கைப்பெறுமதியில் கிட்டத்தட்ட எட்டுக் கோடி ரூபாய்கள்) புலிகளின் தோழமை இயக்கமான ஈரோஸ் இயக்கத்திற்கு ஒரு கோடி ரூபாய்களும் கொடுப்பதாக அவர் அறிவித்த செய்தி பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியது.

இலங்கை அரசு கண்டனம் செய்தது. தமிழ் நாட்டில் உள்ள சில பத்திரிகைகளும் எம்.ஜி.ஆரைக் கண்டித்தன. 'றோ' உளவு அமைப்பு ஆத்திரமடைந்தது. தடுத்து நிறுத்த முயற்சி செய்தது.

நானும், வீரமணியும் எம்.ஜி.ஆரின் நடவடிக்கையை வரவேற்று அறிக்கை கொடுத்தோம்.

நாலு கோடி ரூபாய் மட்டுமன்றி அதற்கு முன்னும் பின்னுமாக தனது இறுதிக் காலம் வரை மேலும் பல கோடி ரூபாய்களை எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளுக்கு வாரி வாரி வழங்கினார். ஆனால் அதைக் குறித்து அவர் ஒருபோதும் விளம்பரம் தேடிக் கொண்டதில்லை.

1987 ஆகஸ்ட் நாலாம் திகதி எம்.ஜி.ஆர் அவர்களை அவருடைய தோட்டத்தில் நானும் வீரமணியும் சந்தித்தோம்.

மிக நீண்ட நாட்களுக்குப் பின்னர் அவரைச் சந்தித்ததால், அவருடைய உடல் நிலையைப் பார்த்துப் பதறிப்போனோம். அவரும் உணர்ச்சிவசப்பட்டார்.

"என்ன விடயம்?" எனச் சைகையின் மூலம் அவர் கேட்டபொழுது விபரங்களைக் கூறினேன். இலங்கை-இந்திய ஒப்பந்தம் பற்றிய எங்கள் ஐயங்களை எடுத்து விளக்கினோம்.

இறுதியாக அவரிடம் பின்வருமாறு கூறினேன்.

"கால் நூற்றாண்டு காலத்திற்கு மேல் தமிழ்த் திரைப்படத் துறையில் கொடி கட்டிப் பறந்திருக்கிறீர்கள். இது மட்டும் வரலாற்றில் நிலையான இடத்தை உங்களுக்குப் பெற்றுக்கொடுத்துவிடாது. உங்களுக்கு முன்பும் பல நடிகர்கள் திரையுலகில் அழியாத புகழ் பெற்றிருக்கிறார்கள். உங்களுக்குப் பின்பும் எத்தனையோ பேர் திரையுலகில் மின்னக்கூடும்.

உங்களுக்கு முன்பாகப் பலர் முதலமைச்சர்களாக இருந்திருக்கிறார்கள். உங்களுக்குப் பின்பும் பல முதலமைச்சர்கள் அரசோச்சுவார்கள். ஆனால் உங்களுக்கு முன்போ, பின்போ முதலமைச்சர்களாக இருந்தவர்களுக்கோ, இருக்கப்போகிறவர்களுக்கோ கிடைக்காத வாய்ப்பு உங்களுக்கு மட்டுமே கிடைத்திருக்கிறது.

உங்கள் காலத்தில் ஈழத் தமிழர்கள் விடுதலை பெறப் போராடினார்கள். நீங்கள் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து தமிழீழம் அமையக் காரணமாக இருந்தீர்கள் என்பதுதான் தமிழர் வரலாற்றில் என்றும் அழியாத இடத்தை உங்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் இதைச் சொல்லவே வந்தேன்" என்றேன்.

நான் பேசப் பேச அவர் உணர்ச்சி வசப்பட்டார். ஏதோ பதில் கூற முயன்றார். அவரால் முடியவில்லை. எனது கைகளை இழுத்து அவருடைய நெஞ்சில் வைத்துக் கொண்டு தன் கைகளால் நெஞ்சில் தட்டிக்காட்டினார்.

அவ்வாறு செய்யும்போது அவருடைய கண்கள் கசிந்தன. எனக்கும் வீரமணிக்கும் கண்கள் பனித்தன.



அவர் என்ன சொல்ல முயன்றார் என்பது எங்களுக்கு முழுமையாக விளங்கா விட்டாலும், ஓரளவு புரிந்தது.

பின்னர் சிற்றுண்டி கொண்டுவரச் சொல்லி, அவரும் எங்களுடன் உண்டார்.

எம்.ஜி.ஆர் மறைந்தபோது பிரபாகரன் அனுப்பிவைத்த செய்தி இது:

ஈழத்தில் தமிழினம் அநாதையாக ஆதரவின்றித் தவித்துக் கொண்டிருக்கையில் உதவிக்கரம் நீட்டி உறுதுணையாய் நின்ற புரட்சித் தலைவனே!

தமிழீழப் போராட்டத்திற்கு ஆதரவும் ஊக்கமும் கொடுத்த செயல்வீரனே! தங்கள் இழப்பு வேதனைச் சகதியில் சிக்கிக் கிடக்கும் தமிழீழ மக்களின் மார்பில் தீமூட்டுவது போலுள்ளது."



படிப்பகம்

www.padippakam.com

அலசுவது– இராஜதந்திரி

# குட்டை உடைக்கிறார் ரணில்!

## 'இணக்கம்' என்ற போர்வையில் இருதரப்புத் தந்திரம்

இலங்கையின் மத்திய வங்கி மீது புலிகள் நடத்திய பெருந்தாக்குதல் அவ்வங்கிக் கட்டிடத்தை நிலைதளரச் செய்ததுடன், அங்கு பணிபுரிந்த சுமார் 50 ஊழியர்களையும் பலிகொண்டிருந்தது.

இத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டு ஒரு வருடகாலம் பூர்த்தியான நிலையில் நாட்டின் பொருளாதார நிலபரம் குறித்து மத்திய வங்கி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

'முழுப் பூசணியை சோற்றில் மறைக்க முடியாது' என்பது போலவே இந்த அறிக்கை அமைந்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது அமைச்சர்களும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் யுத்தம் செய்வதை நியாயப்படுத்தியே தமது பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளனர்.

ஆனால் இலங்கையில் ஒட்டு மொத்தமாக அனைத்து வளர்ச்சியையும் மழுங்கடிப்பதாகவே யுத்தம் விளங்கி நிற்கின்றது.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் ஓர் அருவிபோல ஆரம்பித்த யுத்தம் இன்று ஒரு பெரும் பிரவாகமாகவே கரைபுரண்டு ஓடுகிறது. இந்த யுத்தத்தில் இதுவரை ஏற்பட்டுள்ள இழப்புக்கள் எண்ணிலடங்காதவை;

அரசியல் தீர்வு, அரசியல் அமைப்பு என்பவைபற்றி ஆட்சியாளர்கள் அதிகம் பேசிக் கொள்ளலாம். ஆனால் வடக்கு–கிழக்கு யுத்தம் ஒரு முடிவுக்கு வராதவரை எவ்விதத்திலும் அரசியல் தீர்வு முயற்சிகள் வெற்றிதரப் போவதில்லை.

அண்மையில் பிலிப்பைன்ஸ் நாட்டுக்குச் சென்று திரும்பிய இலங்கையின் 23 பேரடங்கிய பாராளுமன்றக் குழுவும்– யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டியதன் தேவையை வலியுறுத்தியுள்ளது.

வடக்கு–கிழக்கில் போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி சமாதானத்தைக் காண முன்வரவேண்டுமெனவும் பிலிப்பைன்ஸ் சென்ற இலங்கை எம்.பி.க்கள் கூறியுள்ளனர்.

**இலங்கையில் ஒரு நீடித்த பெரும் உள்நாட்டு யுத்தத்துக்கு ஒருபுறம் புலிகளும், மறுபுறம் அரசுமே காரணமாக இருந்து வருகின்றனர். எனவே இவ்விருதரப்பினரும் போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகளுக்கு முன்வராத பட்சத்தில் யுத்தம் மேலும் நீடிக்குமென்றே நம்பமுடியும்.**

கடந்த ஆண்டில் பாரிய படையெடுப்புடன் யாழ் குடாநாட்டினுள் ஆயுதப் படையினர் பிரவேசித்தனர். இப்படையெடுப்பு மூலம் புலிகளின் முக்கிய முகாம்கள், தளங்கள் என்பன யாழ் குடாநாட்டினுள் வீழ்ச்சிகண்டன.

புலிகளும் தமது தரப்பில் பெருமளவு இழப்புகளைத் தவிர்க்கும் விதத்தில் குடாநாட்டினுள் இருந்து வாபஸாகிச் சென்றிருந்தனர். தற்போது புலிகளின் தளங்கள், முகாம்கள் என்பன வன்னிக்காடுகளுக்குள்ளும், கிழக்கிலங்கைப் பிரதேசத்திலுமே இருந்து வருகின்றன.

'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு யாழ் குடாநாட்டினுள் படையினர் பிரவேசித்தபோது, அவர்கள் தரப்பில் எதிர்பார்த்ததைவிட குறைந்தளவில் இழப்புகளே ஏட்பட்டன.

ஏனெனில் புலிகள் பெரிதும் பின் வாங்கிச் செல்வதிலேயே ஆர்வங்காட்டியிருந்தனர். ஆனால் யாழ் குடாநாட்டைப் படையினர் கைப்பற்றியுள்ள போதிலும், கடந்த ஒரு வருடகாலத்தில் வடக்கிலும், கிழக்கிலுமாக இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட படையினர் புலிகளினால் வேட்டையாடப்பட்டுள்ளனர்.

இவற்றில் முல்லைத்தீவு, பரந்தன் முகாம்கள் மீது இடம்பெற்ற தாக்குதல்களின்போதும், கிழக்கில் புலுக்குணாவ, மாவடிவேம்பு, வவுணதீவு, சீனக்குடா விமானத் தளம் போன்ற முகாம்கள் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் போது படையினருக்கு ஏற்பட்ட இழப்புகள் பாரியவையாகும்.



வடக்கே யாழ் குடாநாட்டைக் கைப்பற்றியதை, ஒரு முக்கிய வெற்றியாகப் படையினர் கருதலாம். ஆனால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் முயற்சியில் இழந்த படையினரைவிட பெருமளவு படை வீரர்களை, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் இராணுவம் பறிகொடுத்துள்ளது.

இதன் மூலம் புலிகளின் பலம் நிரூபிக்கப்பட்டுள்ளதுடன், யுத்தம் நீடிக்க வேண்டுமா? அல்லது அந்த யுத்தம் நிராகரிக்கப்படவேண்டுமா? என்பதையும் தீர்மானிக்க வேண்டிய சூழ்நிலை தோன்றியுள்ளது.

அடுத்த கட்ட நடவடிக்கையாக வன்னிப் பகுதிகளுக்குள் ஊடுருவுவதையே படையினர் நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

இதுவோர் முழு அளவிலான 'கெரில்லா' யுத்தமாகவே இருக்குமென்று எதிர்ப்பார்க்க முடியும்.

ஏற்கனவே வன்னியில் மாங்குளம், முல்லைத்தீவு முகாம்கள் உட்பட படைமுகாம்களை அழித்துத் தமது கெரில்லா யுத்த முறைகளைப் புலிகள் நிரூபித்துள்ளனர். புதிய படை நகர்வுகளை எதிர்பார்த்து அவர்களும் வன்னியில் மோதல்களுக்குத் தயாராகி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, வன்னியில் ஒரு யுத்தம் மூழும்பட்சத்தில் அதுவோர் 'காட்டுத் தீ'யாகவே தொடர்ந்து எரிய ஆரம்பிக்குமென்பதே வெளிப்படை.

**கானக கெரில்லா யுத்தமும், அதற்கு எதிரான யுத்தமும் ஒரு நீண்ட அழிவுப்பாதையை நோக்கியதாகவே இருக்கும். முடிவில்லாத இந்த யுத்தத்தினால் உயிரழிவும், பொருள் விரயமும் ஒரு தொடர் கதையாகவே இருக்கும்.**

கடந்த கால நிலபரங்களை எடுத்து ஆராய்ந்து, நாடு பொருளாதார ரீதியாக வீழ்ச்சி நிலையில் செல்வதை இலங்கையின் மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

இந்த எச்சரிக்கை ஆட்சியாளர்களின் கவனத்தையே பெரிதும் ஈர்க்கவேண்டியதாக இருக்கின்றது.

அண்மையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகள் தொடர்பாக ஒரு இணக்கம் கண்டதாக செய்திகள் வந்தன. பரபரப்பாகவும் பேசப்பட்டது.

அந்த இணக்கப்பாடு தொடர்பாக 'முரசு' மட்டுமே தெளிவான கண்ணோட்டங்களை வெளியிட்டு வந்தது. கடந்த மேதினத்தன்று ஐ.தே.கட்சிக் கூட்டத்தில் ரணில் ஆற்றியுள்ள உரை முரசு வெளியிட்ட கருத்தை மிகத் துல்லியமாக உறுதி செய்வதாக அமைந்துள்ளது. அதுமட்டுமன்றி இணக்கம் காணப்பட்ட பின்னணி பற்றிய குட்டை உடைப்பதாகவும் உள்ளது.

**"எல்.ரி.ரி.ஈ.யினருக்கும் அரசுக்கும் இடையிலான இரகசிய பேச்சு எதுவும் ஏற்படாமல் தடுக்கவே ஜனாதிபதியுடன் நான் இணக்கம் கண்டேன். இந்த இணக்கம் ஒரு வெளிச் சட்டகமே தவிர உள்ளே எதுவுமே கிடையாது!"** என்று தெரிவித்துள்ளார் திரு. ரணில் விக்கிரமசிங்க.

இனப்பிரச்சினைத் தீர்வில் தென்னிலங்கை அரசியல் கட்சிகள் ஒருவர்மீது ஒருவர் பாரத்தைப் போட்டுவிட்டும், பழி சொல்லியும் தப்பித்துக் கொள்ளும் தந்திரத்தையே தொடர்ந்து கையாண்டு வருகின்றனர்.

அதே தந்திரமே தற்போதும் தொடர்கிறது. ஆனால் முன்னர் எதிரும் புதிருமாக, நிற்பதாக பகிரங்கமாகக் காட்டிக் கொண்டனர். தற்போது 'இணக்கமாக செயற்படத் தயார்' என்று இனிப்பாகப் பேசிக்கொண்டு அத் தந்திரத்தை தொடர்கின்றனர்.

அரசும்–புலிகளும் இரகசியமாகப் பேசினால் அரசு புலிகளுக்கு அள்ளிக் கொடுத்துவிடும் என்பதுபோலவும், அதனைத் தடுத்து நாட்டைக்காக்கவே தந்திரமான காரியமாகவே இணக்கமாக செயற்படத் தயார் என்று முன்வந்துபோலவுமே ரணிலின் பேச்சு அமைந்துள்ளது.

விடுதலைப் புலிகளோடு அரசாங்கம் பேசட்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி கூறிவருவதுகூட ஒரு தந்திரமான கோஷம் என்று சந்தேகிக்கப்பட்டதையும் ரணிலின் பேச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

அரசாங்கம் போரில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது கடுமையாக விமர்சிப்பதைவிட புலிகளோடு பேச்சில் ஈடுபடுவதால் உருவாகும் சாதக பாதகங்களை விமர்சிப்பது சுலபமான காரியம் என்பது எதிர்க்கட்சியின் தந்திரமாக காணப்படுகிறது.

ஐ.தே.க. ஆட்சிக் காலத்தைவிட தற்போதைய ஆட்சிக் காலத்தில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் தீவிரம் பெற்றுள்ளது என்று சிங்கள மக்கள் கருதுவதும் ஐ.தே.கட்சியினர் இன்றைய போரை வெறுக்க காரணமாக அமைந்துள்ளது. அதனைவிடுத்து ஐ.தே.கட்சி தலைமை தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகள்பால் கரிசனம் கொண்டுள்ளது என்று நினைக்கத்தக்க தன்மைகள் எவையும் காணப்படவில்லை.

கடந்தவாரம் மேதினப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோது, **"வடக்கு–கிழக்குப் பிரச்சினை தீர்க்கப்படாதவரை அபிவிருத்தி, சுபீட்சம் என்பவற்றை உண்மையில் எய்திவிட முடியாது"** என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார்.



ஆனால் மறுபுறத்தே நாட்டின் சுபீட்சம் அபிவிருத்தி என்பவற்றை மழுங்கடித்து வரும் யுத்தத்தை தீர்த்து வைப்பதில் மனமில்லாதவர்களாக ஆட்சியாளர்கள் இருக்கின்றனர்.

**அத்துடன் தமிழ் மக்கள் எத்தகைய உரிமைகள், நியாயங்களைக் கோரி நிற்கிறார்களோ, அவற்றையெல்லாம் உதாசீனப்படுத்தும் நோக்கிலும் ஆட்சியாளர்கள் நடந்து கொள்கின்றனர்.**

**அண்மையில் வன்னிப்பகுதியில் தமிழ்ப் பிரதேசமான பறையனாலங்குளம் 'சப்புமல்புர' என்று பெயர் மாற்றஞ் செய்யப்பட்டது இதற்கு நல்ல உதாரணமாகும்.**

இச்சம்பவம் அரசைப் பெறுத்தவரை ஒரு சிறிய விடயமாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் ஒரு செயலாகவே இது அமைந்துள்ளது.

உரிமைகளைக் கோரி நிற்கும் அதேசமயம், தமது பிரதேச பரம்பலும் பாதுகாக்கப்படவேண்டுமென்ற அவாவையே தமிழ் மக்கள் கொண்டுள்ளார்கள்.

வடக்கு–கிழக்கின் பெரும்பாலான பகுதிகளில் அகதிகளாகத் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்துள்ளனர். இந்நிலையில் அம்மக்களின் வதிவிடயங்களைச் சூறையாடும் ஒரு நடவடிக்கையாகவுமே பெயர் மாற்றம், புதிய இராணுவ முகாம்களை நிறுவுதல் போன்றவை அமைந்துள்ளன.

வடக்கு–கிழக்கில் பாதுகாப்பு என்ற ரீதியில் அமைக்கப்பட்டுள்ள சிறிதும், பெரிதுமான படை முகாம்கள், ஓர் இன அழிப்புக்கான நடவடிக்கையாக விளங்குகின்றதென்றே தமிழ் மக்கள் கருதுகின்றனர்.

அண்மையில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் அடங்கிய குழுவொன்று யாழ்ப்பாணம் சென்றுள்ளது.

அங்கு இராணுவ முகாமொன்றை அண்டிய இடமொன்றில் அப்பத்திரிகையாளர்கள் குழு ஓரிரவைக் கழித்துள்ளது. அச்சமயம் அங்கிருந்து ஒரு நெடுந்தூர ஆட்டிலறிப் பீராங்கியின் ஷெல் ஒன்று ஏவப்பட்டுள்ளது. எங்கே இந்த ஷெல் ஏவப்படுகின்றது என பத்திரிகையாளர் ஒருவர், அதனை ஏவிய படைவீரரிடம் கேட்டுள்ளார். அதற்கு அவர் "ஓர் அனுமானத்தின் பேரில் அதனை ஏவியுள்ளோம். இலக்காகக் குறிக்கப்பட்ட பகுதியில் எல்.ரி.ரி.ஈ.யினர் இருக்கலாம்" என்று பதிலளித்துள்ளார்.

எனவே அதுவோர் கண்மூடித்தனமான தாக்குதல் என்பதையே அப்பத்திரிகையாளரால் அப்போது உணர்ந்து கொள்ளமுடிந்தது.

நேர்மையான அரசியல் அணுகுமுறைகளுக்கு யுத்தம் என்பது எப்போதும் தடைக்கல்லாகவே இருக்கும்; அவ்வாறே இருந்தும் வந்துள்ளது.

ஏனெனில், **'யுத்தமொன்று ஏற்படும்போது உண்மையே அதற்கு முதலில் இரையாகின்றது'** என்று அறிஞர் ஒருவர் முன்பொரு தடவை கூறியிருந்தார்.

இந்நிலையில் உண்மையாகவும், நேர்மையாகவும் அரசியல் தீர்வொன்றை எட்ட விரும்பினால் யுத்தத்தை நிறுத்தி அரசியல் கோதாவைப் பலப்படுத்த வேண்டியதே அவசியமானதாகின்றது.

இந்த அவசியத் தன்மையை அரசு மட்டுமல்ல, எல்.ரி.ரி.ஈ.யினரும் உணரும்பட்சத்திலேயே உண்மையானதொரு தீர்வை உருவாக்க முடியும்.

# ஃபொக்ஸாம் பொக்ஸ்

பிரிட்டன் தேர்தலில் கன்சர்வேட்டிவ் கட்சி படுதோல்வி கண்டிருக்கிறது. இத்தோல்வி திடீரென்று ஏற்பட்டதல்ல. தனது தோல்விக்கான அறிகுறிகள் கன்சர்வேட்டிவ் கட்சிக்கும் முன்கூட்டியே நன்கு தெரிந்தே இருந்தது.

தோல்வியில் இருந்து தப்பிக்கொள்ளும் கடைசி முயற்சியாக கன்சர்வேட்டிவ் கட்சி பல முயற்சிகளில் ஈடுபட்டது.

கடல் நடுவே விழுந்த மனிதன் கைக்கு ஒரு துரும்பு கிடைத்தாலும் பற்றிப்பிடிப்பது மாதிரி கன்சர்வேட்டிவ் கட்சியும் தனது பிரசாரத்திற்கு அனுகூலமான எந்தவொரு வாய்ப்பையும் தவறவிடவில்லை.



இலங்கையில் ஆளும் தரப்பு, எதிர்த் தரப்பு இணக்கம் காண ஃபொக்ஸ் செய்த முயற்சியும், உடனடியாக அதனை பிரிட்டிஷ் அரசு வரவேற்று விடுத்த செய்தியும் கூட கன்சர்வேட்டிவ் கட்சியின் பிரசார நடவடிக்கைகளில் ஒரு அம்சமாகியது.

இதற்கிடையே நடந்த ஒரு கூத்தையும் சொல்ல வேண்டும். ஃபொக்ஸின் முயற்சியை புலிகளோடு தொடர்புபடுத்தி சில செய்தி நிறுவனங்கள் கயிறுதிரித்தன. பிரிட்டனிலும் அச் செய்தி வெளியானதும் கதிகலங்கிப் போனது கன்சர்வேட்டிவ் கட்சி.

பிரிட்டன் வாக்காளர்களில் ஆசியநாட்டவரான வாக்காளர்கள்மீதும் கன்சர்வேட்டிவ் கட்சி கண்வைத்திருந்தது. ஆசிய நாட்டு மக்கள் மீதான தன் அக்கறையை காட்டும் ஒரு அடையாளமாக இலங்கையில் இரு கட்சிகளை இணக்கம் காணவைத்த செய்தியையும் பயன்படுத்தியது.

இந்த நிலையில்தான் புலிகளுக்கும் ஃபொக்சுக்கும் உறவு இருப்பதாக வதந்திகள் கிளம்பின.

பிரிட்டனில் ஆசிய நாட்டு வாக்காளர்களில் கணிசமானோர் இந்தியர்கள். ராஜீவ் காந்திகொலை காரணமாக புலிகள்மீது இந்தியர்கள் அனுதாபமாக இருக்கமாட்டார்கள். அதனால் ஃபொக்ஸ் புலிகளின் நண்பர் என்று கருதப்பட்டால் இந்திய வாக்காளர்கள் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு வாக்களிக்காமல் போகலாம் என்று நினைத்தனர்.

அதனால்தான் புலிகளோடு பேசவும் இல்லை. புலிகளுக்கும் இதற்கும் தொடர்பும் இல்லை. இலங்கையில் ஆளும் தரப்பையும், எதிர்த்தரப்பையும் இணக்கத்துக்கு கொண்டு வந்தது மட்டுமே ஃபொக்ஸ் செய்த காரியம் என்று பிரிட்டிஷ் அரசு விழுந்தடித்து அறிக்கை விட்டது.

இலண்டனிலுள்ள இந்துக் கோவில்களுக்கு எல்லாம் பிரிட்டிஷ் அந்நாள் பிரதமர் மேஜர் விசிட் அடித்தார். பிரசாதம் சாப்பிட்டார். இதெல்லாம் பழைய கதை. எப்படி முயன்றும் வரலாறு காணாத தோல்விகண்டு விட்டது கன்சர்வேட்டிவ் கட்சி.

ஃபொக்ஸ் ஒரு சமாதானப் பிரியர் போலவும், கைமாறு கருதாமல் உதவ வந்தவர் போலவும் சில விமர்சகர்கள் ஒரு தோற்றத்தை உருவாக்கிக் காட்டுகிறார்கள்.

ஃபொக்ஸுக்கு இலங்கையின் ஆளும் தரப் பும், எதிர்த்தரப்பும் வேண்டுமானால் நன்றி சொல்லலாம். ஏனெனில் அரசின் இமேஜை காப்பாற்றவும், சர்வதேச மத்தியஸ்தம் ஏற்படாமல் தடுக்கவும், அரசியல் தீர்வு இழுத்தடிக்கப்படுவதை நியாயப்படுத்தவும் பொக்ஸ் புண்ணியத்தில் 'இணக்கப்பாடு' என்ற பிரசார ஆயுதம் அரசுக்கு கிடைத்தது.

அதேபோல எதிர்க்கட்சிக்கும் நல்ல பிள்ளையாக வேஷம் கட்டிக்கொண்டிருக்க ஒருசந்தர்ப்பமாக, நல்ல பிரசாரமாக 'இணக்கப்பாடு' பற்றிய செய்திகள் அமைந்தன.

ஆனால் தமிழர் தரப்புக்கு...? வெண்ணெய் திரண்டபோது தாழி உடைந்த கதைதான். சர்வதேச மத்தியஸ்தம் பற்றிய கோரிக்கை நியாயம்தான் என்று ஒரு அபிப்பிராயம் உருவாகியபோது இங்கேயே தீர்க்கலாம், இரு தரப்பும் இணக்கமாகிவிட்டது என்பதுபோன்ற போலித் தோற்றப்பாடு உருவாகிவிட்டது.

ஆக, ஃபொக்ஸின் முயற்சியால் தமிழ் பேசும் மக்களுக்கு இலாபம் ஒன்றுமில்லை. ஆனால் ஃபொக்ஸை தமிழ்பேசும் விமர்சகர்கள் சிலர்தான் தலைக்கு மேல் தூக்கிவைத்துக் கொண்டு ஆடினார்கள் என்பதுதான் வேடிக்கை.

இப்போது கன்சர்வேட்டிவ் கட்சி தோற்றுவிட்டது? இனிப் ஃபொக்ஸின் முயற்சி என்னாகும் என்று சில விமர்சகர்கள் தங்கள் தலையை உடைக்கிறார்கள்.

## 'இந்து'வின் கற்பனை

அதைப்பற்றி கவலைப்பட வேண்டியது ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும்தான். ஏதோ ஃபொக்ஸ் தமிழர் தரப்புக்காக வாதாட வந்ததுபோல தமிழ் விமர்சகர்கள் ஏன் அலட்டிக் கொள்கிறார்கள்?

ஃபொக்ஸுக்கு பொழுது போகாவிட்டால் இனிமேலும் அவர் ஆளும் தரப்புக்கும், எதிர்த்தரப்புக்கும் இடையே மத்தியஸ்தர் போல செயற்பட்டுவிட்டு போகலாம். அதனால் இனப்பிரச்சனை தீர்வுக்கு பயனேதும் கிட்டப்போவதில்லை.

□□□

சமீபத்தில் 'இந்து' பத்திரிகையில் இலங்கை பற்றிய ஒரு கட்டுரை வெளியாகி இருந்தது. இலங்கை இனப்பிரச்சனை பற்றிய கற்பனையான ஊகங்களும், செய்திகளும் கிளம்பிவருவதற்கு உதாரணமான கட்டுரை அது.

கனடிய உயர் அதிகாரிகளைச் சந்தித்த தமிழ்க் கட்சிகள் ஃபொக்ஸின் முயற்சி பற்றிய பெறுபேறுகளை அவரிடம் விளக்கினவாம். அப்படித்தான் 'இந்து' எழுதியுள்ளது. இதில் வேடிக்கை என்ன தெரியுமா? மிஸ்டர் ஃபொக்ஸ் தமிழ்க் கட்சிகள் எதனையும் சந்திக்கவும் இல்லை. ஃபொக்ஸ் என்ன செய்தார் என்று தமிழ்க் கட்சிகளுக்கே பத்திரிகைகள் வாயிலாகத்தான் தெரியும்.

அதுமட்டுமல்ல கனடிய உயர் அதிகாரியுடனான சந்திப்பில் ஃபொக்ஸின் முயற்சி பற்றி தமிழ்க் கட்சிகள் வாய் திறக்கவில்லை. கனடிய உயர் அதிகாரியும் அது பற்றி பிரஸ்தாபிக்கவில்லை.

நடந்தது இதுதான். ஏப்ரல் 29ல் கொழும்பில் கனடிய உயரதிகாரியான ஜேம்ஸ் ரொய்ட்டர் என்பவரை தமிழ்க் கட்சிகள் சந்தித்தன. சமாதானத் தீர்வுக்கு புலிகள் வருவார்களா? இல்லையா? இலங்கை அரசு நியாயமாக நடந்து கொள்ளுமா? என்பவை பற்றியே கலந்துரையாடப்பட்டது. வவுனியா அகதி முகாம் நிலை தொடர்பாகவும் தமிழ்க் கட்சிகள் பிரஸ்தாபித்தன. அப்படியிருக்க உண்மைக்கு முற்றிலும் மாறான தகவலுடன் 'இந்து'வின் கண்ணோட்டம் வெளியாகியிருந்தது.

அதே கட்டுரையில் தமிழ் ஈழத்தைக் கைவிடத் தயார் என்று பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றின் ஊடாக இலங்கை அரசுக்கு புலிகள் தகவல் அனுப்பியதாகவும் கூறப்பட்டிருந்தது. அதுவும் கலப்படமில்லாத கற்பனைதான்.

இலங்கை அரசு நியாயமாக நடந்து கொள்ள முற்படுகிறது என்பதை வெளிக் காட்டுவதில் 'இந்து' அக்கறை காட்டுவதும் இலங்கை பற்றிய அதன் கண்ணோட்டங்களில் பளிச் எனத் தெரிகிறது. இதே இந்துதான் ஒரு காலத்தில் புலிகளை தூக்கி தோளில் வைத்து ஆடியது என்பது நினைவுக்கு வராமல் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி

பாகம் 02


பூலான்

பூலான்தேவி 43

தருவது ரசிகன்

மகேஷ்பூருக்குப் புறப்படுவதாகச் சொன்னதும் பூலானின் முகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை ஒரு குழந்தைத்தனமான ஆர்வத்தோடு கவனித்தான் மல்லா.

ஸ்ரீராம், லாலா ராம் இருவரும் விடுதலையாகி வந்தநாளில் இருந்தே பூலான் களையிழந்து காணப்படுவதை மல்லா கவனித்தே வந்தான்.

ஸ்ரீராமும், லாலா ராமும் தங்கள் குடும்பத்தினரைப் பார்க்கச் சென்றிருந்த இச் சந்தர்ப்பத்தில் பூலானை மகிழ்ச்சிப் படுத்த விரும்பினான் மல்லா.

அதனால்தான் பூலானின் பழி வாங்கும் படலத்தை ஆரம்பித்துவைக்க மகேஷ்பூருக்கு அவளை அழைத்துச் செல்ல முடிவு செய்தான்.

பூலான் அவசரப்பட்டதால் அன்றிரவே மகேஷ்பூருக்குப் புறப்பட தன் ஆட்களுக்கு மல்லா உத்தரவிட்டான்.

காட்டுப்பாதையூடாகவே அவர்கள் நடந்து சென்றனர். லெப்டினன்ட்களான பரத் சிங்கும், மாது சிங்கும் தங்கள் துப்பாக்கிகளோடு முன்னால் வழிகாட்டிச் செல்ல ஏனையோர் பின்தொடர்ந்தனர்.

திடீரென்று பயங்கரமான சத்தம் ஒன்று இருளைக் கிழிப்பதுபோல எழுந்தது.

அது சிறுத்தையின் உறுமல் சத்தம் என்று பூலானிடம் கூறிய மல்லா, தன் ஆட்கள் அனைவரையும் எச்சரித்தான்.

"சிறுத்தை எங்காவது பதுங்கியிருந்து எம்மீது பாயலாம். ஜாக்கிரதை!" என்று சொல்லியபடியே நாற்புறமும் நோக்கியவன், "பூலான் என் பக்கத்திலேயே வா!" என்றபடி நிதானமாக அடியெடுத்து வைத்து முன்னே சென்று கொண்டிருந்தான்.

"மல்லாஜி! பந்தங்களைக் கொளுத்திக் கொள்வோமா?" என்று கேட்டான் மாதுசிங்.

"வேண்டாம் பொலிஸ்காரர்கள் எங்காவது பதுங்கியிருந்தால் எம்மை இனம் கண்டுகொள்வார்கள்!" என்ற மல்லாவிடம், "இந்தக் காட்டுக்குள் இந்த நேரத்தில் பதுங்கியிருக்கும் துணிச்சல் அந்த நாய்களுக்கு இருக்காது மல்லாஜி. அப்படியே இருந்தாலும் சிறுத்தையின் சத்தம் கேட்டதும் ஈசல்கள்போல பறந்திருப்பார்கள்." என்று மாதுசிங் சொன்னதைக் கேட்டு ரசித்ததுச் சிரித்தான் மல்லா.

பொலிஸ்காரர்கள் என்றதுமே மல்லாவுக்கு எப்போதுமே ஒரு இகழ்ச்சிதான். 'பொலிஸ்' என்ற வார்த்தையைக் கேட்டாலே அவன் முகத்தில் வெறுப்பின் சாயங்கள் தோன்றுவதை அவனது ஆட்களும், பூலானும் கண்டிருக்கின்றனர்.

சில நாட்களுக்கு முன்னர் மல்லா பொலிஸ்காரர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான். அதனை அனுப்புவதற்கு முன்னர் பூலானிடம் படித்துக் காண்பித்தான்.

"ஏய் பொலிஸ் நாய்களே! உங்களுக்கு துணிச்சல் இருந்தால் இந்த விக்கிரம் மல்லாவுடன் மோதிப்பாருங்கள். அப்பாவிகளுடன் விளையாடாதீர்கள். அப்படி விளையாடினால் அதன் விளைவை இந்த மல்லா மூலம் சந்திக்கத் தயாராக இருங்கள்!

தைரியமுள்ள
விக்கிரம் மல்லா."

"ஏன் இது?" என்று கேட்டாள் பூலான்.

அஸ்டா கிராமத்துக்கு விக்கிரம் மல்லா கோஷ்டியினர் சென்று வந்ததை பொலிஸார் அறிந்துகொண்டனர். அதனால் அக்கிராமத்துக்குள் புகுந்து மல்லாவுக்கு உதவி செய்பவர்கள் என்று கூறி நாலு ஐந்து பேரைப் பிடித்துச் சென்றார்களாம். கிராம ஆட்கள் பலரையும் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். பெண்களுடன் வம்பு செய்திருக்கிறார்கள். மார்புகளைப் பிடித்துத் திருகி, சட்டைகளைக் கிழித்து ஆட்டம் போட்டுவிட்டுப் போய் இருக்கிறார்கள்.

அச்செய்தி எட்டியதும் மல்லா கொதித்துப்போனான். செய்தி கொண்டு வந்தவனிடம் பணம் கொடுத்து அனுப்பினான். பொலிசார் பிடித்துச் சென்றவர்களின் குடும்பத்தினருக்கு உதவத்தான் அந்தப் பணம் கொடுக்கப்பட்டது.

அதன் பின்னர்தான் மல்லா பொலிசாருக்கு அக் கடிதத்தை எழுதினான். மல்லா அப்படிச் செய்வதுதான் சரி; அதுதான் வீரம், என்று பூலானும் நினைத்துக் கொண்டாள்.

இப்போதும் மாது சிங் பொலிஸாரைக் கிண்டல் செய்ததைக் கேட்டு மல்லா விழுந்து விழுந்து நகைப்பதைப் பார்க்க பூலானுக்கு அவன் வீரத்தின்மீது, ஆண்மையின்மீது வியப்பு வளர்ந்தது.

"பந்தங்களைக் கொளுத்தலாம்!" என்று மல்லா உத்தரவிட்டான்.

மகேஷ்பூர் கிராமம் நெருங்கியதும் காட்டுக்குள் முகாம் அமைக்குமாறு உத்தரவிட்ட மல்லா, எல்லோரையும் அங்கே தங்கவைத்துவிட்டு, தன்னுடன் பரத் சிங்கையும், மேலும் மூன்றுபேரையும் மட்டுமே வருமாறு கூறினான். பூலானுடன் சேர்த்து ஆறுபேர் மட்டுமே மகேஷ்பூருக்குள் சென்றனர்.

கிராமம் முழுக்க நிசப்தமாக, பின்னிரவின் ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்தது. கிராமத்துக்குப் புதியவர்களாக- காக்கி உடைகளுடன், கைகளில் துப்பாக்கிகளுடன் வந்த அவர்களைக் கண்டதும் நாய்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஆரம்பித்து- விடாமல் குரைக்கத் தொடங்கின.

இருட்டில் புத்திலால் வீட்டை உடனடியாகக் கண்டுபிடிக்கச் சிரமமாக இருந்தாலும் இறுதியில் கண்டுபிடித்து "அதோ அதுதான் அந்த நாயின் வீடு!" என்றாள்.

பரத் சிங்கைப் பார்த்து மல்லா கண்களால் உத்தரவிட, அவன் சென்று கதவைத் தட்டினான்.

உள்ளே இருந்து சத்தமே இல்லை. பூலான் கதவருகே சென்று தன் காலால் கதவில் எட்டி உதைத்தாள்.

**கடந்த வாரம்**

**மகேஷ்பூர் கிராமத்துக்கு செல்லப்போவதாகக் கூறுகிறான் விக்கிரம் மல்லா. பூலான் மகிழ்கிறாள். சிறுவயதில் பூலானை மணந்த புத்திலால் அங்குதான் இருந்தான். பழிவாங்கும் வெறியுடன் தயாராகிறாள் பூலான். இனி....**

"யாரது?" என்று உள்ளேயிருந்து பெண் குரல் ஒன்று பயமாகக் கேட்க, அது புத்திலாலின் மனைவி வித்யாதான் என்று குரலில் இருந்தே இனம்கண்டுகொண்ட பூலான்; "உன் சக்களத்தி; வந்து கதவைத் திறவடி வாடி!" என்றாள் பயமுறுத்தும் குரலில்.

உள்ளே இருந்து சிறிது நேர இடைவெளியின் பின்னர் கதவு திறக்கப்பட்டது.

கதவு திறந்ததுதான் தாமதம் பூலான் பாய்ந்து வித்யாவின் கழுத்தை தன் கையொன்றால் பிடித்து அழுத்தி "எங்கேயடி புத்திலால்? எங்கேயடி அந்த நாய்?" என்றாள்.

வித்யா முன்னர் இருந்ததுபோல் அல்லாமல் உடல் மெலிந்து, முகத்தில் இருந்த தசை காணாமல் போனது மாதிரி பூஞ்சையாகத் தோற்றம் அளித்தாள். அவள் கண்களில் இருந்த திமிர்கூட தொலைந்திருந்தது.

அவளுக்கு பூலானை அடையாளம் தெரியவில்லை. கையில் துப்பாக்கி இருந்ததால், அத் துப்பாக்கிமீதுதான் பார்வை சென்றதே தவிர பூலானின் முகத்தைச் சரியாகப் பார்க்கவில்லை.

பூலானை ஒரு ஆண் என்றுதான் வித்யா நினைத்தாள். குரலில் இருந்த பெண்மைகூட அவளுக்கு இருந்த பயத்தால் கவனிக்கப்படவில்லை.

கழுத்தில் இருந்து கையை விலக்கி, அவள் கன்னத்தில் அறைந்த பூலான்; "என்னடி பிடிச்சுவைச்ச பிள்ளையார் மாதிரி நிற்கிறாய்? எங்கேயடி அந்த நாய்?" என்று கேட்டபடியே சுற்றும் முற்றும் பார்வையை வீசினாள்.

அதற்கிடையே மல்லா கண்ஜாடை காட்ட, மூன்றுபேர் அந்த வீட்டுக்குள் மறையக்கூடிய இடங்களில் எல்லாம் தேடினார்கள்.

"அய்....அய்யோ....அ..அடிக்கா..தே" என்று யாரோ மன்றாடும் குரல் கேட்டது.

அது புத்திலாலின் குரல் என்று பூலானுக்குப் பிடிபடவில்லை. புத்திலால் அதிகாரமாக கத்தித்தான் பூலான் கேட்டிருக்கிறாள். இப்படி மன்றாடிக் குரல் கொடுத்து பூலான் கேட்டதில்லை.

புத்திலாலை கழுத்தில் பிடித்துத் தள்ளிக் கொண்டு வந்தான் மாது சிங். மாட்டுத்தீவனம் வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் பதுங்கியிருந்தவனை நாலு உதை கொடுத்துவிட்டு பிடித்துவந்தான் மாது சிங்

மாது சிங் பிடியில் கொண்டுவரப்பட்ட புத்திலாலைக் கண்டதும் பூலானின் கைகால்கள் எல்லாம் கோபத்தில்,- அளவில்லாத கோபத்தில்- நடுங்கிக் கொண்டிருந்தன.

11 வயதில் அவனது மனைவியானது; விபரம் தெரியாத வயதில் அவன் பின்னால் வந்து இந்த வீட்டில் கிடந்தது; அவன் வக்கிரமாய் நடந்துகொள்ள முற்பட்டது; தந்தையை அவமதித்தது; கொட்டும் மழையில் தந்தை தன்னைச் சுமந்து சென்றது.... எல்லாம்... எல்லாமே பூலானின் நினைவில் வேக வேகமாய்த் தோன்றி மறைந்தன.

வெறிபிடித்த புலிமாதிரி, யாராலோ இயக்கப்பட்டது மாதிரி- அதன்பின் பூலானின் நடவடிக்கைகள் அமைந்தன.

புத்திலாலைக் கண்டதும் அவனையே பார்த்தபடி விறுவிறுவென்று தன் கையால் பூலான் தள்ளிய தள்ளில் அப்படியே பின்னே நகர்ந்து சுவரில் மோதியவன் பிடரி அடிபட்டு "அம்மா..." என்று அலறினான்.

மாது சிங் பிடியில் இருந்த புத்திலாலின் தலை முடியில் இருந்த கொத்தாகப் பிடித்து பூலான் இழுத்த இழுப்பில் மாது சிங் தன் பிடியை விட்டுவிட்டு பூலானைப் பயத்தோடு கவனித்தான்.

"நா...நாயே! டேய்யய். நா...நா....யே!" என்று நீளமாக கத்தியபடியே தன் முழங்காலை மடக்கி அவன் நெஞ்சில் இடித்தாள் பூலான்.

ஹக்... என்ற சத்தம் எழ நெஞ்சைப் பிடித்தபடி பின்புறமாய்ச் சரிந்து விழுந்தான் புத்திலால். அவன் முடியைப் பிடித்திருந்த பூலானின் கையில் ஒரு கொத்தாக மீதமிருந்தது தலைமுடி.

"ஒரு பெண்ணுக்கு இத்தனை பலமா?' அக் காட்சியைக் கண்ட மல்லா பிரமித்து நின்றான்.

பிடரி அடிபட்ட வேதனையில் முனகிக் கொண்டிருந்த வித்யா, புத்திலால் கீழே அடிபட்டு விழுந்ததும், "ஐயோ என் புருஷனை... புருஷனை... கொல்லாதீர்கள்!" என்று கத்திக்கொண்டும், கைகூப்பிக் கொண்டும் ஓடிவந்து புத்திலால் அருகே மடங்கி அமர்ந்தாள்.

புத்திலாலுக்கு தலை சுழல்வது போலிருந்தது. நெஞ்சில் பட்ட இடியில் உயிர் கொஞ்சம் கொஞ்சமாக வாய்வழியாக வெளியேறிக் கொண்டிருப்பது போல பயம் ஏற்பட்டது.

செத்துவிடுவேனோ என்ற பயம் வந்ததும் உயிரை இழுத்துப் பிடிக்க முயல்பவனைப் போலக் கஷ்டப்பட்டு தன் கண்களை விரித்து எதிரே நின்ற உருவத்தைப் பார்த்தான்.

அந்த உருவம் ஆணா, பெண்ணா என்று அவனால் நிச்சயம் பண்ண முடிய வில்லை.

'ஆனால்.... ஆனால்... இந்த முகத்தை இதற்கு முன்னர் எங்கோ... எங்கோ மிக நெருக்கமாகப் பார்த்திருக்கிறேன்... எங்கே.. எங்கே... பார்த்தேன்...?' என்று தன் நினைவில் தேடினான் புத்திலால்.

இப்படியான கோலத்தில்- இத்தனை பலத்துடன், முரட்டுத்தனத்துடன் பூலானை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை புத்திலால்.

பூலான் அவனையே குனிந்து பார்த்தபடி நின்றாள். அவன் கண்கள்- பாதி திறந்தும் திறவாமலும்- தன்னை அடையாளம் புரியத் திணறுவதை இரசித்தாள்.

மீண்டும் அவன் முடியைக் கொத்தாகப் பற்றித் தூக்கினாள். வலிதாளாமல் "அய்... யோ அய்யோ..." என்று முனகிக்கொண்டு கைகளைக் கூப்பி மன்றாடினான்.

அவனை நிற்கவைத்துவிட்டு அவன் வேட்டியின் மடியிலே பிடித்து தரதரவென்று வெளியே இழுத்துப் போனாள் பூலான்.

வித்யாவின் கூச்சலாலும், நாய்கள் குரைத்ததாலும் தங்கள் வீடுகளில் இருந்து எட்டிப்பார்த்த சில முகங்களும் துப்பாக்கிகளுடன் ஆட்களைக் கண்டதும் முகங்களை உள்ளே இழுத்துக் கொண்டன.

வெளியே முற்றத்தில் புத்திலாலை நிறுத்திய பூலான், "டேய் நாயே, என்னைத் தெரிகிறதா?" என்று கத்தலாகக் கேட்டாள்.

புத்திலாலுக்கு இப்போதுதான் அது பெண்குரல் என்று புரிந்தது. அப்படிப் புரிந்த கையோடு அந்த முகம் தன் மனைவி பூலானின் முகம் போல இருப்பதாகத் தோன்றியது.

கண்களைக் கசக்கிக்கொண்டு உற்றுப் பார்த்தான். சந்தேகமேயில்லை. புத்திலால் சடக்கென்று ஒரு காரியம் செய்தான்.

அப்படியே நெடுஞ்சாண்கிடையாக பூலானின் காலில் விழுந்தான்.

"அய்யோ என்னை மன்னித்துவிடு தாயி, உன்னைக் கொடுமைப்படுத்தியது குற்றம் தான் தாயி. நான் இ... இப்போது திருந்தி மனுசனாகிவிட்டேன் தாயி." கதறத் தொடங்கிவிட்டான்.

"எழும்படா நாயே! நான் இப்படி எத்தனை தரம் மன்றாடியிருப்பேன். குழந்தையைத் திருமணம் செய்த மிருகமடா நீ. நாயே! மூதேவி நாயே!" என்று கத்திக் கொண்டே குப்புறக் கிடந்த புத்திலாலின் குறுக்காக கால்களை வைத்து நின்றாள்.

முதுகின் மையத்தில் ஒரு காலால் ஊன்றி அழுத்தியபடி, புத்திலாலின் இடத்து கையைப் பின்புறமாக வேகமாக மடக்க,

அந்தப் பிரதேசமே அதிரும்படி,

"அய்யோ.... அம்மா!" என்று அலறிய புத்திலாலின் உடல் அடிபட்ட பாம்புபோல ஒரு துடி துடித்து அடங்கியது.

அப்படியே மயங்கிவிட்டான் புத்திலால். அவனது இடது கை முறிந்து போனது.

மல்லா மட்டுமல்ல, மாது சிங் உட்பட மல்லாவின் ஆட்கள் மூவரும் பூலானின் செயலை நம்பமுடியாமல், திக்பிரமை பிடித்ததுபோல பார்த்துக் கொண்டிருந்தனர்.

புத்திலாலின் கதறல் சத்தம் கேட்டு கிராமமே விழித்துக் கொண்டது.

(தொடர்ந்து வரும்)

## நடிகைக்குக் கிடைத்த புதுமையான விருது!



சிறந்த நடிகைக்கான விருது வாங்கத் தான் நடிகைகள் பலர் போட்டி போடுவார்கள். ஆனால் ஹொலிவூட் நடிகை ஒருவருக்கு புதுமையான விருது ஒன்று கிடைத்திருக்கிறது.

ஹொலிவூட்டில் நம்பர் வன் இடத்தில் தற்போது இருக்கும் நடிகை டெமிமூர். கோடி கோடியாக அதிக சம்பளம் வாங்கும் நடிகையும் அவர்தான்.

டெமிமூருக்குத்தான் அந்த புதுமையான விருது கிடைத்திருக்கிறது. மிக மோசமான நடிகை என்ற விருதுதான் அவருக்கு கிடைத்திருக்கிறது. 'ராஸ்வெரி பவுண்டேஷன்' என்னும் அமெரிக்க அமைப்பு ஒன்றுதான் அந்த விருதை வழங்கி டெமிமூரை மட்டம் தட்டியிருக்கிறது.

அதற்கு காரணம் இல்லாமல்-இல்லை. அம்மணி டெமிமூர் 'ஸ்ட்ரிப்டிஸ்' என்ற ஆங்கிலப் படத்தில் கிட்டத்தட்ட அம்மணமாக நடித்திருக்கிறாராம். அதனால்தான் புதுமையான விருது பெற்றுள்ளார் அம்மணி.

டெமிமூரின் கணவரும் ஒரு பிரபல நடிகர்தான். 'டைஹாட்' உட்பட பல ஹொலிவூட் படங்களில் நடித்த புரூஸ் வில்லிஸ்தான் அவரது நட்சத்திரக் கணவர்.

## 'நான் அவள் அல்ல'

இந்தியாவில் மும்பாயில் ஒரு ஆங்கில மாத இதழை சமீபத்தில் கட்டுக் கட்டாக குவித்துக் கொளுத்தித் தள்ளி விட்டனர்.

அந்த மாத இதழில் இந்தி நடிகை பூஜாபட் அரை நிர்வாணப் போஸில் அசத்தி இருந்தார்.



இதற்கு முன்னரும் பூஜாபட் அதே பத்திரிகைக்கு அரை நிர்வாணமாக மட்டுமல்லாமல், இன்னொருவருடன் இசகு பிசகான போஸ்களில் கட்டியணைத்தபடி கலக்கல் போஸ் எல்லாம் கொடுத்திருந்தார். ஆனால் அப்போது ஏனோ யாரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

சமீபத்தில் அந்த மாத இதழில் பூஜா பட்டின் படம் அரை நிர்வாணமாக காணப் பட்டதும் மும்பாயில் உள்ள பெண்கள் அமைப்புக்கள் பொங்கி எழுந்தன. பாரதிய ஜனதா கட்சியினரும் களத்தில் இறங்கி ஆர்ப்பாட்டம், குறிப்பிட்ட மாத இதழை கொளுத்துதல் என்று ஏகப்பட்ட ரகளை பண்ணிவிட்டார்கள்.

மும்பாய் அரச தலைமைச் செயலகத்திலும் மனுக் கொடுக்கப்பட்டது. அதனால் பூஜாபட்டை பொலிஸ் தலைமையகத்துக்கு வருமாறு கட்டளை பறந்தது.

விஷயம் விபரீதமானதால் உஷாரான குறிப்பிட்ட மாத இதழ் ஆசிரியர் புத்திசாலித்தனமான கதையொன்றை அவிழ்த்துவிட்டார்.

"அரை நிர்வாணமாக இருப்பது பூஜாபட் அல்ல. கம்பியூட்டரினால் உருவாக்கப்பட்ட படம் அது. வேறு ஒரு நடிகையின் உடலில் பூஜாபட்டின் தலையை பொருத்தி உள்ளனர். அதனை அம்பலப்படுத்தவே வெளியிட்டோம்" என்று சொல்லியிருந்தார்.

'இண்டர் நெட்' பத்திரிகை ஒன்றுதான் பூஜாபட்டின் போலிப் படத்தை வெளியிட்டது என்றும் மும்பாய் பத்திரிகை ஆசிரியர் குற்றம் சாட்டியிருந்தார்.

பிரபல நடிகைகளின் தலையை வைத்து இண்டர் நெட்டில் இப்படி விஷமம் செய்வதும் நடப்பதுதான். ஆனால் மும்பாய் பத்திரிகைகளில் இதற்கு முன்னரும் 'பூஜாபட்' கலக்கல் போசுகள் கொடுத்திருக்கிறார் என்பதால் மறுப்பை நம்ப முடியாமல் இருக்கிறது. அதுமட்டுமல்ல பூஜாபட் சகல சமாச்சாரங்களிலும் தாராளமானவர் என்பதும் பிரசித்தம்.

அதுதவிர தனது படம் இல்லையென்றால் சர்ச்சை கிளம்ப முன்னரே பூஜாபட் ஏன் மறுக்கவில்லை? என்றும் கேள்வி எழுந்துள்ளது.

எப்படியோ பிரச்சனை முடிந்தால் சரி என்பதால் அரை நிர்வாணமாக இருப்பது பூஜாபட் அல்ல என்று அறிவித்துவிட்டது மும்பாய் பொலிஸ். இப்போதைக்கு விவகாரம் அமுங்கிவிட்டது.

பூஜாபட் போலவே கவர்ச்சிப் போஸ் கொடுத்து சுளையாகச் சம்பாதிக்கும் நடிகைகள்தான் தங்கள் பிழைப்பில் மண் விழுந்துவிட்டதாகப் புலம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

## வந்தாரய்யா கல்கி பகவான் மற்றுமொரு சாமியார் விவகாரம்

தமிழ்நாட்டு பத்திரிகைகளில் சமீபத்தில் பரபரப்பாக அடிபட்டுக் கொண்டிருப்பவர் 'கல்கி பகவான்'. பிரேமானந்தா சாமி விவகாரத்தின் பின்னர் பிரபலமாக அடிபடும் சாமியார் விவகாரம் இதுதான்.

யார் இந்த கல்கி பகவான்?

தமிழ்நாட்டில் சென்னையிலுள்ள ஒரு நிறுவனத்தில் குமாஸ்தாவாக வேலை பார்த்தவர் விஜயகுமார். பத்மாவதி என்பவரை மணந்த விஜயகுமார் தனது நண்பரான சங்கர் என்பவரோடு இணைந்து ஒரு சிறுவர் பாடசாலையை நடத்தத் தொடங்கினார். அப்போதுதான் சாமியாரானால் நன்றாகச் சம்பாதிக்கலாம் என்ற ஐடியா வந்தது. 'கல்கி இயக்கம்' என்று தொடங்கினார்.

விஜயகுமார் 'கல்கி' பகவானாக மாறினார். சங்கர்தான் கல்கி இயக்க நிர்வாகத்தை கவனித்தார். சங்கர பவத் பாதா என்று பெயர் மாற்றிக் கொண்டார்.

கல்கி இயக்கம் மெல்ல மெல்ல சூடுபிடித்து தமிழ்நாட்டு எல்லையையும் கடந்து, இந்தியா முழுவதும் பரந்து, வெளிநாடுகளிலும் பல கிளைகளை கட்டி போட்டிருக்கிறது.

சமீபத்தில் தான் பொலிஸில் யாரோ புகார் செய்தனர். தோண்ட ஆரம்பித்தது பொலிஸ். ஆனால் பிரேமானந்தா மாதிரியில்லாமல் படு புத்திசாலிகளாக இருந்து பொலிசாரை சமாளித்துவிட்டனர் கல்கி இயக்கத்தினர்.

கல்கி பகவானை மட்டும் பொலிசாரால் விசாரிக்க முடியவில்லை. காரணம் அவர் இருக்குமிடம் யாருக்கும் தெரியாதாம். 1998ல் தான் பக்தர்கள் முன் தோன்றுவாராம்.


கல்கிபகவான்
சாமியாரிணிகள் பூஜை

கல்கி இயக்கத்தினர் அனைவருமே மஞ்சள் அங்கிகளை சீருடைமாதிரி அணிகிறார்கள். எக்கச்சக்கமான இளம் சாமியாரிணிகளும் இருக்கிறார்கள்.

ஆண் சாமியார்களுடன் ஒன்றாக இருந்த இளம் சாமியாரிணிகளை திடீரென்று இடம்மாற்றி தனியாக வைத்திருக்கிறார்கள்.


பொலிஸ் விசாரணை வரப் போகிறது என்பதை முன்கூட்டியே அறிந்துதான் சாமியாரிணிகளை தனியாக்கியிருக்கிறார்கள். அதனால்தான் சந்தேகம் அதிகமாகிறது.

ஆயினும் 'கல்கி இயக்கம்' மீது குற்றம் சாட்டக்கூடிய எந்தவொரு ஆதாரமும் பொலிசாரிடம் சிக்கவில்லை. சாமியாரிணிகளையும் பொலிசார் விசாரித்தனராம். தாமாகவே விரும்பி இயக்கத்தில் சேர்ந்தோம் என்று கூறுகிறார்களாம்.



படிப்பகம்

www.padippakam.com



# ஜீன்ஸ்

'ஜீன்ஸ்' என்றால் இரட்டையர்களைக் குறிக்கும்.

இரட்டையர்களாகப் பிறப்பவர்களில் ஆணும் ஆணும் அல்லது பெண்ணும் பெண்ணும் சேர்ந்து பிறப்பது குடும்பத்துக்கு நல்லது என்று ஒரு நம்பிக்கை இருக்கிறது. அப்படியில்லாமல் பிறந்த இரட்டையர்களும் படுஜோராகத்தான் இருக்கிறார்கள். ஆனால் இப்படத்தில் இருப்பவர்கள் அனைவருமே ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணுமாக இணைந்து பிறந்தவர்கள். இவர்கள் அனைவரும் அவுஸ்திரேலியாவில் சிட்னி நகரில் உள்ள கவர்னர் பிலிப் சிங் தொடக்கப் பள்ளியில் படிப்பவர்கள்.

உலகில் இரட்டையர்கள் அதிகமாக கல்வி கற்கும் பள்ளிக்கூடம் என்ற பெருமையைப் பெறுவது அமெரிக்காவில் லேக் எல்சினோர் நகரில் உள்ள பள்ளிக்கூடம்தான். தற்போது அதற்கு அடுத்ததாக இரட்டையர்களால் பிரபலம் அடைந்துள்ளது இந்த அவுஸ்திரேலிய பள்ளிக்கூடம். பாவம் ஆசிரியர்கள்தான் அடையாளம் தெரியாமல் அவதிப்படுவார்கள்.

# இறுக்கி அணைச்சு 'உம்மா'



ரசியாவில் மொஸ்கோவில் 'கிளிக்' செய்யப்பட்ட படம் இது. மொஸ்கோவில் தெருப் புகைப் படக் காரர்கள் பெருகிவருகிறார்கள். அவர்களிடம் கமரா மட்டுமல்ல, குரங்குகள் போன்ற பிராணிகளும் இருக்கும்.

மனிதர்கள்போலவே உடைகள் அணிந்து காட்சியளிக்கும் குரங்குகள்மீது சுற்றுலாப் பயணிகளின் பார்வை செல்லும். அப்போது அவர்களை அணுகி குரங்காருடன் சேர்ந்திருந்து புகைப் படம் எடுக்க விருப்பமா என்று அறிவார்கள். 'ஓ.கே' என்றால் குரங்காரை அவர்கள் கையில் கொடுத்துவிட்டு டக்டக்கென்று படம் எடுத்துக் கொடுத்துவிடுவார்கள். குரங்காருக்கு அன்புடன் 'இச்' கொடுக்கும் சுற்றுலா பிரயாணிதான் படத்தில். பிழைக்கத்தான் எத்தனை வழிகள் பார்த்தீர்களா?

# பாதமோ பாதம்




அமெரிக்காவிலே ஒரு சுவாரசியமான போட்டி வைத்தார்கள். யாருக்கு ரொம்பப் பெரிய்ய்ய கால் பாதம் என்பது தான் போட்டி.

3 ஆயிரத்தி 200 பேர் போட்டியில் கலந்துகொண்டனர். கலந்துகொண்ட அனைவரையும் ஓரம் கட்டியவர் மத்யூ. அவர்தான் பாதத்தை காட்டியபடி படத்திற்கு போஸ் கொடுக்கிறார்.

இவருடைய பாதத்தின் அளவு 29 1/2. அதனால் வெற்றி இவருக்குத்தான். உடனடியாக இவரை அழைத்து தன் கம்பனி சப்பாத்து விளம்பரத்துக்கு போஸ் கொடுக்க வைத்துவிட்டது 'அத்லெட்ஸ் ஃபுட்' என்ற நிறுவனம். பாத உபயத்தில் பாரெங்கும் பிரபலமாகிவிட்டார் மத்யூ.

## தகவல் பெட்டி



# துணிச்சலுக்கு விருது

புலியைக் கண்டாலே எல்லோருக்கும் பயம். இந்த இலட்சணத்தில் எங்கே ஒரு போஸ் கொடு பார்க்கலாம் என்று எதிரே நின்று புகைப்படம் எடுக்க எத்தனை தில் இருக்கவேண்டும். போஸ் மட்டுமா கொடுக்கிறது இந்தப் புலி. வாய்க்குள் ஒரு வங்காளவிரிகுடாவே தெரிவது போல வாய் பிளந்து உறுமித் தள்ளுகிறது. நாமாக இருந்தால் கமராவையும் போட்டுவிட்டு போஸ் வேண்டாம் புலியைப் பிடி என்று கத்திக்கொண்டு ஓடியிருப்போம். ஆனால் ஸ்டிவ் புரும் என்ற கமாராக்காரர் பயங்கர தைரியசாலி. என்னமாய் துணிந்து படமெடுத்திருக்கிறார் பார்த்தீர்களா?

துணிச்சலுக்கு பலன் கிட்டியிருக்கிறது. 1997ம் ஆண்டுக்கான அமெச்சூர் புகைப்படக்காரர்களுக்கான விருது அவருக்கு கிடைத்திருக்கிறது. இந்தப் புகைப்படம்தான் விருதை தட்டிக் கொடுத்திருக்கிறது. விருந்தாகிப் போனாலும் பரவாயில்லை என்று துணிந்ததால் கைமேல் விருது.

# அதிசயமான தேவாலயம்



படத்தில் பளிச் பளிச்சென்று ஒளிர்ந்தபடி காட்சிதருவது தேவாலயம் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. சொல்லாமல் தெரியாத விஷயம் யாதெனில், இத் தேவாலயம் சூரியனைக் கண்டால் மறைந்துவிடும். என்ன அதிசயமாக இருக்கிறதா? ஆமாங்க, இந்த தேவாலயம் பனிக் கட்டியால் உருவாக்கப்பட்டுள்ளது. மரத்தால் அல்லது கற்களால் கட்டிடம் உருவாக்குவது பெரிய காரியமல்ல. தொழில் தெரிந்தால் போதும். ஆனால் பனிக்கட்டியால் இத்தனை செம்மையாக, தத்ருபமாக உருவாக்குவது என்றால் மகா அதிசயமான காரியம்தான்.

பின்லாந்து நாட்டிலுள்ள ஹெல்சிங்கி நகரில் உள்ள தேவாலயம் ஒன்றுக்கு வெளியே 15 மீட்டர் உயரத்தில் இந்த தேவாலயத்தை உருவாக்கியுள்ளனர். இன்னொரு விஷயம் என்ன தெரியுமா. ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இதே இடத்தில் ஒரு தேவாலயம் இருந்ததாம். அதனைப் போலவே இத் தேவாலயமும் பனியால் உருவாக்கப்பட்டுள்ளது. கல்லிலே கலை வண்ணம் காண்பதை விடவும் பனியிலே கலைப்பணி காட்டுவது அசுரவேலைதான்.


படிப்பகம்

www.padippakam.com

# சினிவிசிட்



வெங்கட்பிரபு-எஸ்.பி.பி.சரண்
படம்: வான்டட்

## நிறையத் தோழிகள்

நடிகர் வினீத் பெண்களுடன் பழகுவதில் எக்கச்சக்கமான ஜாக்கிரதையாம். "எனக்கு பெண் தோழிகள் நிறைய்யய இருக்கிறார்கள். ஆனால் யாரையும் நிரந்தரமாக்கிக் கொள்ளும் விதமாகப் பழகியதில்லை. என்னுடன் பழகுபவர்களும் அந்த மாதிரிப் பழகமாட்டார்கள்" என்கிறார் வினீத்.

உதடும் உதடும் சந்திக்கும் முத்தக் காட்சியிலும் நடிக்கமாட்டாராம். ஏன் வெட்கமோ?

## தாடிக்கு டாட்டா

அடர்த்தியான தாடிசகிதம் காட்சியளித்த கமல் இப்போது சுத்தமாக சவரம் செய்த முகத்துடன் பளிச்சிடுகிறார். 'அவ்வை சண்முகி' படம் இந்தியில் 'சாக்ஷி' என்ற பெயரில் தயாராகிறது. சண்முகிக்கு தாடி ஏன்? அதுதான் கட். இந்தியில் மேடம் என்ற பெயரில் எடுப்பதாகவே முதலில் தீர்மானிக்கப்பட்டது. இப்போது பெயர் மாற்றம் 'சாக்ஷி'. சாக்ஷி என்றால் இந்தியில் மாமி என்று அர்த்தமாம். சுடிதார் போட்ட மாமியாக நடிக்கப் போகிறார் கமல் என்பது தெரிந்த செய்திதானே.

## மறுபடியும் பானுமதி

'செம்பருத்தி' படத்தில் பிரசாந்தின் பாட்டியாக நீண்ட காலத்தின் பின் நடித்தவர் பானுமதி. பழம்பெரும் நடிகைகளில் ஒருவரான பானுமதியை மீண்டும் ஒரு படத்தில் நடிக்கவைக்க முயற்சி நடக்கிறது. 'ஒன்ஸ்மோர்' படத்தில் சரோஜாதேவி நடித்து வருகிறார். முதலில் பானுமதியைத்தான் சிவாஜியின் ஜோடியாக நடிக்கவைக்க நினைத்தார்களாம்.

ஒரு காலத்தில் எம்.ஜி.ஆருடன் நாடோடி மன்னன் படப்பிடிப்பில் தகராறு செய்யுமளவுக்கு சூப்பர் ஸ்டாரினியாக இருந்தவரல்லவா பானுமதி. பின்னர் எம்.ஜி.ஆருடன் சமரசமானது வேறு கதை. ஆனாலும் எம்.ஜி.ஆருடன் மோதும் துணிச்சல் யாருக்கு வரும்?.

## மறுபடி சேரும் ஜோடி

ஜெயராமுடன் நெருக்கமாகப் பேசப்பட்டதால் அவருடன் தொடர்ந்து நடிப்பதை தவிர்த்துவந்தவர் குஷ்பு. இப்போது நீண்ட இடைவெளியின் பின்னர் ஜெயராமும் குஷ்புவும் இணைகிறார்கள்.

பி.வாசு இயக்கும் 'பத்தினி' படத்தின் மூலம் மறுபடியும் அந்த ஜோடி இணைகிறது. இன்னொரு கதாநாயகனாக பிரகாஷ்ராஜ் நடிக்கிறார்.

'வாய்மையே வெல்லும்' பட வெற்றியின் பின்னர் பி.வாசு மறுபடி உற்சாகமாக இருக்கிறார். 'பத்தினி' படத்திற்கு இசை தேவா. பாடல்கள் வாலி.

## கௌதமி பாய்ச்சல்

கௌதமியை தனது படம் ஒன்றில் கதாநாயகியின் அக்காவாக நடிக்க வைக்க முன்வந்தார் ராமராஜன். கௌதமிக்கு மார்க்கெட் இருந்தபோது ராமராஜன் கௌதமியின் பின்னால் அலைந்தவர். அந்த விசுவாசத்தில்தான் கௌதமிக்கு சான்ஸ் கொடுக்க நினைத்தாராம்.

'எனக்கொன்றும் அப்படி நடிக்கும் கட்டாயமில்லை' என்று முகத்தில் அடித்தது போலக் கூறிவிட்டாராம் கௌதமி. நட்பை புதுப்பிக்க நினைத்த ராமராஜன் கவலையோடு புறம் கண்டாராம்.

## மணியின் ஏமாற்றம்

நடிகை ஷர்மிலியிடம் மயங்கிய 'நகைச்சுவை மணி' ஏராளமான பணத்தை அவரிடம் இழந்துவிட்டாராம். ஷர்மிலியோ பணத்தை ஏப்பம் விட்டுக்கொண்டு அல்வா கொடுத்துவிட்டார். தற்போது அம்ருதா மீது மையல் கொண்டிருக்கிறார் மணி. 'டேக் இட் ஈஸி ஊர்வசி' படத்தில் கதாநாயகியாக நடித்தவர்தான் அம்ருதா. அவரின் பொலிஸியும் 'டேக் இட் ஈஸி'தானாம். 'தேடினேன் வந்தது' படத்தில் மணியின் ஜோடி அம்ருதா. மணியும் சுளையாகக் கொடுக்கிறாராம். எப்போது அம்ருதாவும் 'அல்வா' கொடுக்கப்போகிறாரோ?

## எடிசன் விசுவாசி

சினிமாப் படத்தை கண்டுபிடித்த எடிசன் மீது சத்யராஜிக்கு மகாவிசுவாசம். தன் வீட்டிலும் எடிசன் படத்தை மாட்டிவைத்திருக்கிறார். தனது இயக்கத்தில் உருவான 'வில்லாதி வில்லன்' படத்திலும் 'எடிசன்' என்ற பெயரில் நடித்தார். மீண்டும் மணிவண்ணன் இயக்கத்தில் சத்யராஜ் நடிக்கப்போகிறார். சத்யராஜின் சொந்தத் தயாரிப்பாக உருவாகப்போகிறது. தயாரிப்பு நிறுவனத்தின் பெயர் 'எடிசன் ஆர்ட்ஸ்'



பார்த்திபன்-ரவளி
படம்: காங்கேயம் காளை

## ரஜினியின் வேதவல்லி

'அருணாச்சலம்' படத்தில் வேதவல்லியாக தோன்றி ரஜினி ரசிகர்களின் உள்ளத்தைக் கிள்ளியெடுத்திருப்பவர் சவுந்தர்யா. ஏற்கனவே தமிழ்ப் பட ரசிகர்களுக்கு அறிமுகமானவர் என்றாலும் ரஜினியுடன் நடித்தது மூலமே தனிமரியாதை கிடைத்திருப்பதாகச் சொல்கிறார் சவுந்தர்யா.

தெலுங்கில் நாகார்ஜுனின் மனம் கவர்ந்த நாயகிகளின் பட்டியலில் இருப்பவர். தமிழிலும் சூப்பர் ஸ்டாரின் பார்வைபட்டதால் குளிர்ந்து போய் இருக்கிறார்.

'அம்மன்' படத்தில் படு சாதுவாக நடித்த சவுந்தர்யாவுக்கு கவர்ச்சியாக நடிப்பதில் தயக்கம் எதுவுமில்லையாம். பிய்த்து உதறுகிறார் ரசிகர் மனங்களை!

## கலங்கவைக்கும் சலங்கை முத்து

சீமைப்பசு தேடிய பார்த்திபன் தன் ஜோடியாக பிடித்த நடிகை ரவளி. விஜயகாந்த் படங்களில் எக்கச்சக்கமாக கவர்ச்சி காட்டியவர் ரவளி. விஜயகாந்த்தையும் ரவளியையும் முடிச்சுப்போட்டு கதைகள் உலாவியதால், விஜயகாந்த் இவருக்கு டாட்டா காட்டினார். அதன் பின்னர் தற்போது மீண்டும் தமிழில் பார்த்திபன் ஜோடியாக இரு படங்கள். 'காங்கேயம் காளை', 'அபிமன்யு'.

சங்கீதா விவகாரத்தில் சிக்கிய பார்த்திபன் தற்போது ரவளி விவகாரத்தில் சிக்கிக் கொண்டார். பல படங்களில் நடிக்காவிட்டாலும் சொந்தமாக 'காதல் யுத்தம்' என்ற பெயரில் படம் தயாரிக்கும் அளவுக்கு வசதி தேடிக்கொண்டதுதான் ரவளியின் திறமைக்கு அத்தாட்சி. ரவளி என்றால் சலங்கை முத்து என்று அர்த்தமாம் அதுதான் கலங்க வைக்கிறாரோ?

## இந்தி வில்லனின் ஆசை

செல்வமணியின் இயக்கத்தில் 'குற்றப் பத்திரிகை' என்றொரு படம் எடுத்து முடிக்கப்பட்டது நினைவிருக்கலாம். அப்படத்தில் ராஜீவ்காந்தி வேடத்தில் தூள் கிளப்பியவர் அனுபம் கேர். படம் வெளியாக தடைபோடப்பட்டதால் அவரது நடிப்பை ரசிகர்கள் காணமுடியாமல் போய்விட்டது.

இப்போது 'வி.ஐ.பி' படம் மூலமாக தமிழ்ப்பட ரசிகர்களை சந்திக்கப் போகிறார் இந்த இந்தி நாயகன். இந்தியில் பயங்கர வில்லனாக மட்டுமல்லாமல் பல்வேறு ரகமான பாத்திரங்களிலும் தோன்றி பிரபலமாகி இருக்கிறார் அனுபம் கேர். தமிழ்ப் படங்களில் நடிப்பது ஒரு மாறுதலாக இருக்கிறதாம். அதனால் சொந்தமாகவே ஒரு தமிழ்ப் படம் தயாரிக்க திட்டமிட்டிருக்கிறாராம். அனுபம் கேர் தயாரிக்கும் படத்தில் கதாநாயகனாக நடிக்கப் போகிறவர் பிரபுதேவா. வி.ஐ.பி படப்பிடிப்பின்போது இருவரும் நல்ல நண்பர்களாகிவிட்டார்களாம்.

## நடிகைகளும் குண்டூசியும்

அபிமான நடிகைகளைக் கண்டால் ரசிகர்களுக்கு தலை கால் புரிவதில்லை. நடிகை சுபாஶ்ரீ பத்திரிகையாளர்கள் பலரிடம் புலம்பியுள்ள அனுபவம் இது;

"குண்டூரில் ஒரு தெலுங்குப் படப்பிடிப்பில் கலந்து கொண்டேன். என் ரசிகர் என்று ஒரு நபர் என்னுடன் பேச வந்தார். கைகுலுக்கினார். பேசிக்கொண்டிருக்கும்போது திடீரென்று என்மேல் இடித்தார். தெரியாமல் பட்டிருக்கும் என்று நான் நினைத்தபோது டக்கென்று என் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளினார். 'ஏன் இப்படி அநாகரிகமாய் நடக்கிறீர்கள்?' என்று கேட்டபோது அப்படியே என்மேல் சரிந்தார்.

அதேநேரம் அந்த ஆளோடு வந்த சிலரும் என் மேல் விழுந்து.....ச்சே எவ்வளவு மோசமான அனுபவம். நல்ல வேளை படப்பிடிப்பு ஆட்கள் வந்ததால் தப்பினேன். தலையலங்கார நிபுணர் என்னிடம் சொன்னார்; "எப்போதும் கையில் குண்டூசி வைத்துக் கொள்ளும்மா, ஆபத்தான சமயத்திலே உதவும், விஜயசாந்தியும் குண்டூசி வைத்துக் கொண்டிருக்கிறார் என்றார். இப்போது குண்டூசிதான் என் ஆயுதம்" என்கிறார் சுபாஶ்ரீ.



சவுந்தர்யா
படம்: தேடி வந்த தேவதை



அனுபம் கேர்
படம்: வி.ஐ.பி.



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் (2)

# ஊழியரை அறைந்த நடிகை!

## இரகசியம் வெளிப்பட்டதால் கோபம்

தமிழ்ப்பட உலகின் பிரபல நடிகர்கள் நடிகைகளின் மறுபக்க தகவல்கள் இவை. தமிழக பத்திரிகை ஒன்றில் பித்ரவாசு பர பரப்பாக எழுதிய சூடான செய்திகளில் இருந்து தொகுத்துத் தரப்படுகிறது.

அந்த நடிகை சொந்தக் குரலில் பாடுவார். இயக்குவார். கதை ழுதுவார். அந்தக் காலத்தில் எம்.ஜி.ஆர். சிவாஜி முதற்கொண்டு த்தனை கதாநாயகர்களுக்கும் அவரிடம் பயம். அவர் வைத்ததுதான் டம் என்னும் அளவுக்கு ஒரு காலத்தில் சினிமா உலகில் அவர் திக்கம் கொடி கட்டிப் பறந்தது.

அவர் கோவை சென்ட்ரல் ஸ்டூடியோவில் படப்பிடிப்பொன்றில் ந்து கொண்டிருந்தார். தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் ாரான படம் என்பதால் அதிக நாட்கள் தங்கியிருந்தார். அப்போது வரது பார்வையில் ஸ்டூடியோ பணியாளர் ஒருவர் அடிக்கடி பட்டு த்திக் கொண்டிருந்தார். ஸ்டூடியோ அலுவலகத்தில் கணக்காளராக ணியாற்றி அவர் நல்ல நிறத்துடன், பார்க்க இலட்சணமாக இருந்தார். சமயம் கிடைக்கும் போதெல்லாம் நடிகை அவரோடு பேசி தன் ப்படுத்தி ஒரு நாள் தனது ஆசையைத் தீர்த்துக் கொண்டார். "இந்த ஷயம் வெளியே தெரியக்கூடாது. தெரிந்தால் தொலைந்தாய்" என்று வருக்கு நடிகை எச்சரிக்கை விடுத்தார்.

ஆனால் பாழாய்ப்போன கணக்காளர் சும்மா இருக்கவில்லை. ம சொப்பனமாய் விளங்கும் நடிகை தன் மீது ஆசைப்பட்டது வளவு பெரிய விஷயம். இது வெளியே தெரியாமல் போனால் விப்பயன் இல்லை என்று ஸ்டூடியோவில் உள்ள தனது நண்பர்களிடம் லாம் கிசு கிசுவாய் சொல்லிக்கொண்டிருந்தார். அது கடைசியாக கையின் காதுக்கும் எட்டியது.

கடும் கோபத்துடன் நடிகை ஸ்டூடியோவுக்கு போனார். கணக் ளரின் சட்டையைப் பிடித்து "என்னைப் பற்றி என்னடா சொன்னாய்?" று கேட்டபடி மாறி மாறி கன்னத்தில் அறைந்தார்.

அன்றிரவே அந்தக் கணக்காளர் தூக்கில் தொங்கி உயிரை ய்த்துக் கொண்டார்.

அதே பழம்பெரும் நடிகை அச் சம்பவம் நடந்து பதினைந்து டங்களுக்கு பின்னர் (1971ல்) ஒரு பெரிய நடிகரை தன் பங்களாவுக்கு ழைத்தார். அந்த நடிகர் முன்பு நடிகையுடன் ஜோடியாக நடித்தவர் ன். ஆனால் பின்னர் தமிழ்ப் பட உலகில் மன்னாதி மன்னராக ந்தவர்.

நடிகையின் அழைப்பை ஏற்று நடிகரும் சென்றார். நடிகரின் பிக்கையான உதவியாளர் மட்டுமே நடிகருடன் சென்றிருந் ர். உதவியாளரை காரில் இருக்கச் சொல்லிவிட்டு கர் மட்டும் உள்ளே சென்றார். சுமார் ஒரு மணி நேரம் ளே இருந்துவிட்டு வந்தார் நடிகர். நடிகை உற்சாகமாக யனுப்பி வைத்தார். அந்த நடிகையின் பெயர் 'பா'வில் ரம்பிக்கும். சிறந்த மதியுள்ளவர்.

### "உங்களுக்கும் வேணுமா?"

இது தற்காலச்செய்தி. நெடிய நெட்டையான நடிகர் அவர். வாளிப்பான உடல்கொண்ட (அம்மா வேஷம் போடும்) நடிகைகள் என்றால் தனிப்பாசம்.

இவருக்கு ஒரு படத்தில் அண்ணியாக நடித்தார் ஒரு நடிகை. வெளிப் புறப்படப்பிடிப்பில் ஒரு ஹோட்டலில் நடிக நடிகையர் தங்கினர். அந்த நடிகையின் எதிர் அறையில் வேறொரு நடிகர் தங்கியிருந்தார். படத்தில் அந்த நடிகைக்கு ஜோடி அவர்தான்.

இரவில் தூக்கம் வராமல் வெளியே வந்தார் ஜோடியாக நடிக்கும் நடிகர். அப்போது நடிகையின் அறையிலிருந்து வெளியே வந்தார் நெட்டை நடிகர். சக நடிகர் தன்னைப் பார்த்துவிட்டாரே என்ற பதட்டமே இல்லாமல் அவருடன் பேசிக்கொண்டிருந்து விட்டு, போகும்போது, "உங்களுக்கும் வேணுமா, அனுப்பி வைக்கட்டுமா?" என்று ஒரு நடிகையின் பெயரைச் சொல்லிக் கேட்டாராம். "இல்லே வேண்டாம் ரொம்ப நன்றி" என்றுவிட்டு தன் அறைக்குள் புகுந்துகொண்டாராம் நிழல் ஜோடி நடிகர்.

### பறந்தார் மனைவி

சில ஆண்டுகளுக்கு முன்னால் ஊருவிட்டு ஊருபோய் படம் எடுத்த கிராமராஜன் அவர். அவருடன் கூட நடித்தவர் 'கௌ' நடிகை. அப்போது கிராமராஜன் உச்சத்தில் இருந்தார். கிராமராஜனுடன் நடிகை நெருக்கமாகிவிட உறவுச் செய்தி நடிகரின் மனைவிக்கு எட்டியது. அவரும் முன்னாள் முன்றெழுத்து நளின நடிகை தான். பதறியடித்து பறந்தார் மனைவி. படப்பிடிப்பு முடியும் வரை கூடவே இருந்து கணவரோடு திரும்பினார்.

(தொடர்ந்து வரும்)

### தயிர்க்காரி

ஜெயலலிதாவும் சரோஜாதேவியும் ஒருவரை ஒருவர் பத்திரிகைகள் மிலாக தாக்கிக் கொண்டிருந்த காலம் அது. ஒருமுறை சரோஜா வியை 'தயிர்க்காரி' என்று கேலி ய்தார் ஜெயலலிதா. நடிக்க முன்னர் தயிர் விற்றுக் ாண்டிருந்தாராம்.



## மினி சினி

* 'வி.ஐ.பி.' படம் மூலம் தமிழில் அறிமுகமாகும் சிம்ரான், அந்தப் படம் வெளிவருவதற்குள் 6 புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். விரைவில் இவர் பிரபு, அர்ஜுன் ஆகியோருடனும் இணைந்து நடிக்கவுள்ளார்.
* கமலின் 'சதிலீலாவதி' படத்தில் கதாநாயகியாக நடித்த ஊர்வசியின் அக்கா கல்பனா, அந்தப் படத்திற்குப்பின்னர் 'பூச்சூடவா' படத்தில் அப்பாஸிற்கு அக்காவாக நடித்து வருகிறார்.
* கன்னடத்தில் சுகாசினி, விஷ்ணுவர்த்தனுடன் இணைந்து நடித்த 'அம்ருதவர்ஷினி' என்ற படம் 'உயிரினும் மேலாக' என்ற பெயரில் மொழி மாற்றப்பட்டு வெளியாகவுள்ளது.
* கார்த்திக்கின் 'சிஷ்யா' படத்தின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் நக்மாவின் தங்கை ரோஷினி. இவர் அடுத்து விஜயுடன் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார்.
* நானா படேகர்-ரம்யா கிருஷ்ணன் ஜோடியாக நடிக்கும் 'வஜூட்' என்ற இந்திப்படத்தில், முக்கிய வேடமொன்றில் நடிக்க இருக்கிறார் சிவரஞ்சனி.
* 'அருணாச்சலம்' படத்தை அடுத்து சரத்குமார் நடிக்கும் 'ஜானகி ராமன்' படத்தை இயக்கி வருகிறார் சி.சுந்தர். இது முடிவடைந்ததும் சத்யராஜ் நடிக்கும் படமொன்றை இவர் இயக்கவுள்ளார்.
* தெலுங்கில் ஈ.வி.வி.சத்யநாராயணராவ் இயக்கும் 'சிலக் கொட்டுடு' என்ற படத்தில் கௌதமி, கஸ்தூரி, மதுபாலா, இந்திரஜா ஆகிய நான்கு கதாநாயகிகள் நடிக்கிறார்கள். கதாநாயகன்-ஜெகபதிபாபு.
* கார்த்திக் நடிக்கும் 'பிஸ்தா' படத்தை இயக்கி வரும் கே.எஸ்.ரவிக்குமார் அடுத்து, அர்ஜுன் நடிக்கும் புதிய படமொன்றை இயக்கவிருக்கிறார். இப்படத்திற்கு 'சல்யூட்' என்று பெயரிடப்பட்டுள்ளது.
* 'காதலி' படத்தில் விக்னேஷிற்கு ஜோடியாக அறிமுகமாகும் திவ்யா 6 இந்திப்படங்களில் நடித்துள்ளார். இவர் மிதுன் சக்கரவர்த்தியுடன் நடித்த 'அத்யரா' என்ற ஒரு இந்திப் படம் தான் வெளியாகியுள்ளது.
* 'செல்வா' படத்தில் தகப்பனும், மகனுமாக ரகுவரனும், விஜயும் நடித்திருந்தனர். இதைத் தொடர்ந்து 'லவ் டுடே' படத்திலும் ரகுவரனுக்கு மகனாக நடித்து வருகிறார் விஜய்.

### அப்பாஸ் நடிக்கும் 'ரொமான்ஸ்'

'கேளடி கண்மணி', 'ஆசை' ஆகிய படங்களை இயக்கியவர் வஸந்த். தற்போது மணிரத்னம் தயாரிக்கும் 'நேருக்கு நேர்' படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார்.

அதனையடுத்து வஸந்த் இயக்கப்போகும் படத்திற்கும் பெயர் சூட்டப்பட்டு விட்டது. 'ரொமான்ஸ்' என்று பெயர் சூட்டியுள்ளனர். கதாநாயகனாக அப்பாஸ் நடிக்கப் போகிறார். கதாநாயகி மும்பாய் இறக்குமதி. 'தேரே மேரே சப்னே' படத்தைப் பார்த்த வஸந்துக்கு அதில் நாயகியாக நடித்த பிரியா கில் மீது பிரியம் வந்துவிட்டது. அவரையே 'ரொமான்ஸ்' கதாநாயகியாக நடிக்கவைக்கப் போகிறார். மணிவண்ணன், பிரகாஷ்ராஜ் ஆகியோரும் உண்டு. இசை: யுவன் சங்கர் ராஜா. வசனம் கிரேஸிமோகன்.



கார்த்திக்-ரோஷினி
படம்: சிஷ்யா



கஜோல்

"எண்ணிரண்டு
பதினாறு வயது
கண்ணிரண்டில்
ஆடுதம்மா
காதல் கொண்ட மனது.
முன்னிரண்டு
மலரெடுத்து
என்மீது தொடுத்தாள்
முக்கனியும் சர்க்கரையும்
சேர்த்தெடுத்துக் கொடுத்தாள்."

கவியரசு கண்ணதாசன்

### தாராளம்

அருணாச்சலப் பட இலாபத்தில் எட்டுப் பேருக்கு பங்கு கொடுப்பதாக அறிவித்தார் அல்லவா ரஜினி. இப்போது மேலும் மூன்று பேருக்கும் உதவி செய்யப்போகிறார் ரஜினி.

அக்கால சூப்பர் ஸ்டாரான தியாகராஜ பாகவதர் குடும்பத்தினருக்கும், பி.யு.சின்னப்பா குடும்பத்தினருக்கும், பட அதிபராக இருந்து வறுமைப்பட்டு மரணமான ஒருவரது குடும்பத்தினருக்கும் உதவி செய்கிறார் ரஜினி.

### இசை வாரிசு

இளையராஜாவின் ஆண்மக்கள் அனைவருமே இசையமைக்க கிளம்பிவிட்டனர். மகள் பவதாரிணி பின்னணி பாடுகிறார். விரைவில் படமொன்றுக்கு இசையமைக்கப் போகிறாராம் பவதாரிணி.

இளையராஜாவை திரை உலகுக்கு அறிமுகம் செய்த பஞ்சு அருணாசலம்தான் பவதாரிணியையும் அறிமுகப்படுத்துகிறார்.

**முகப்பில்**
ராம்கி-வினிதா
படம்:-சாம்ராட்
ரோஷினி
படம்:-சிஷ்யா

### தைரியம்

'நந்தினி' படத்தில் பிரகாஷ்ராஜ் ஜோடியாக நடிக்கிறார் சுகாசினி. பெரிய இயக்குநரான மணிரத்னத்தின் மனைவியாச்சே என்று நெருங்கி நடிக்கத் தயங்கினாராம் பிரகாஷ்ராஜ். சுகாசினியோ தயக்கம் இல்லாமல் கட்டிப் பிடித்து நடித்தாராம். அதன்பின்னர் தைரியமாக நடித்துத் தள்ளினாராம் பிரகாஷ்ராஜ்.

### காதலே நிம்மதி

'காதல் கோட்டை', 'காலமெல்லாம் காதல் வாழ்க' போன்ற படங்களை தயாரித்து ருசி கண்டவர் சிவசக்தி பாண்டியன். அவர் அடுத்துத் தயாரிக்கும் படமும் காதல் கதைதானாம்.

பலரிடம் கதை கேட்டுக் கொண்டிருக்கிறார். தகுந்த கதை கிடைத்ததும் அடுத்த தயாரிப்பில் இறங்கிவிடுவார். கதை தயாராக முன்னரே அடுத்த படத்திற்கு பெயர் வைத்துவிட்டார். படத்தின் பெயர்: 'காதலே நிம்மதி'.

### இரு வாரிசுகள்

பின்னணிப் பாடகர் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் மகன் எஸ்.பி.பி.சரண், கங்கை அமரனின் மகன் வெங்கட் பிரபு இருவரும் இணைந்து நடிக்கும் படம் 'வான்டட்' என்பது முன்னரே சொன்ன செய்திதான். இருவரும் இணைபிரியாத தோழர்களாம். இங்கே பிரசுரமாகியுள்ள படத்தைப் பார்த்தாலே தெரிகிறதல்லவா.

எஸ்.பி.பாலசுப்பிரமணியம் பாடுவதில் மட்டுமல்ல நடிப்பிலும் படு கெட்டி. அதேபோல எஸ்.பி.பி.சரணும் வெளுத்து வாங்குகிறாரா பார்க்கலாம்.

### நூறாவது படம்

'உள்ளத்தை அள்ளித்தா', 'மேட்டுக்குடி' பட வெற்றிகளின் பின்னர் கார்த்திக் மார்க்கெட் சூடோசூடு. மனுசன் இரவு பகலாக நடித்துக் கொண்டிருக்கிறார். அந்த டென்ஷனை தணிக்க ஜாலியான இளைப்பாறல்களையும் நாடுகிறார்.

கார்த்திக் நடிக்கும் நூறாவது படம் 'இரண்டாம் அத்தியாயம்'. நகுலன் பொன்னுச்சாமி என்னும் புதிய இயக்குநர் படத்தை இயக்க, இளையராஜா இசையமைக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

# அந்தப் பத்து மாதங்கள்...!

## கர்ப்பிணிப் பெண்கள் கவனிக்கவும்!

(தருவது: ஜஹ்னாவி பால்)

கர்ப்பமுண்டானதும் பெண்கள் தங்கள் கணவனுடன் நெருங்கி உறவாடுவதை, சில பெரியவர்கள் தவிர்க்க வேண்டும் என்று கூறுவது தவறு. இடையில் கரு கலைந்து போய் விடுவதற்கு உடலுறவு காரணம் என்று இவர்கள் கூறுவதுண்டு.

உண்மையில் ஏற்கனவே கருச்சிதைவு கண்ட பெண்கள் கர்ப்பம் தரித்து முதல் மூன்று மாதங்கள் மட்டும் உடலுறவைத் தவிர்ப்பது நல்லது. குழந்தை பிறந்து முதல் 5 மாதங்கள் வரையும் தவிர்ப்பது அவசியமாகும்.

குழந்தை பிறப்பதற்கு முதல் நாளன்றும் உடலுறவை வைத்துக்கொள்ளலாம். ஆனால் சற்று எச்சரிக்கை தேவை. நீர்க்குடம் உடைந்த பின்னரானால் கிருமிகளால் இரு தரப்பினருக்கும் தீய விளைவுகள் ஏற்படும் என்பதால் தவிர்த்துவிட' வேண்டும். பிறக்கப்போகும் குழந்தையின் ஆரோக்கியத்துக்குக் கெடுதல் ஏற்படாதிருக்க தூய்மை பேணப்படுதல் அவசியமானது.

உடலுறவின் போது பெண்ணுக்கு நோவு ஏற்படுமானால் உடனடியாக நிறுத்திவிட வேண்டும்.

### பிரயாணங்கள்:

கர்ப்பமுண்டாகி முதல் மூன்று மாதங்கள் வரையும், மகப்பேறு காலத்தின் முன் ஒன்றரை மாதங்களும் பிரயாணங்களைத் தவிர்த்தல் வேண்டும், தனிக் கார்களில்- நெருக்கமில்லாமல் பயணம் செய்ய நேர்ந்தால், அலுங்காமல் குலுங்காமல், போதிய பஞ்சணைகளின் உதவியுடன் பயணமாகலாம்.

### சுகாதாரம்:

தாய்மையெய்தும் பெண்கள் எப்போதும் துப்பரவாக இருத்தல் வேண்டும். இவர்களுக்கு அதிகமாக வியர்க்கும். இதனால் ஒரு தடவைக்கு மேல் குளிக்க வேண்டியேற்படும். கழுத்து, கமக்காடுகள், மார்பகங்கள், அடிவயிறு, அரை, கால் விரலிடுக்குகள் மற்றும் தோல் மடியும் இடங்கள் நன்றாகச் சுத்தப்படுத்தப்பட வேண்டும்.

கை கால்களிலுள்ள நகங்கள் அடிக்கடி வெட்டப்பட்டு சுத்தமாகக் கழுவுதல் வேண்டும். இவற்றுள் சேரும் கிருமிகள் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். மர்ம உறுப்புகளில் அரிப்பு ஏற்பட்டால்- ஏதோ தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்பதால்- மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம்.

### மருந்துகள்:

மருத்துவருடைய ஆலோசனை பெறாமல் தன் இஷ்டத்துக்கோ, ஏனையோருடைய அறிவுரைகளைக் கேட்டோ மருந்துகளை உட்கொள்வது விரும்பத்தக்கதல்ல. குறிப்பாக கர்ப்பம் தரித்து முதல் மூன்று மாதங்களும் மருத்துவ ஆலோசனையின் படியே மருந்துகளைப் பயன்படுத்த வேண்டும். கர்ப்பமுண்டான போது உங்களைப் பரிசீலனை செய்த மருத்துவரிடமே தொடர்ந்து ஆலோசனைகள் பெற வேண்டும். அல்லது நீங்கள் ஆரம்பத்தில் தொடர்பு கொண்ட மருத்துவமனையில் உங்கள் மருத்துவக் குறிப்புகள் அடங்கிய கோப்பு இருக்குமானால், அதே மருத்துவமனையினை நாடுவதே நலன்தரும். தவிர அத்தகைய குறிப்புகள் அடங்கிய கோப்பினை நீங்களே உங்களுடன் வைத்துக் கொள்வதும் நல்லது.

கர்ப்பிணிகள் எத்தகைய நிலையிலும் திடீரென்று ஒரு புதிய மருத்துவரிடம் போய் ஆலோசனை கேட்டது நல்லதல்ல.

### தொழில்:

சாதாரணமாக, கிராமப்புறப் பெண்கள் மிகக் கடுமையாகவே உழைப்பார்கள். ஆனால் அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள் கர்ப்பமடைந்தால் திடீரென உடலை வருத்தி எப்பணியையும் செய்வது ஆகாது. முதல் மூன்று மாதங்களும் மிதமான பணிகளைச் செய்யலாம். குனிந்து, நிமிர்ந்து அல்லது துள்ளித் திரிவது கூடாது. நன்றாக நடக்க வேண்டும். கருதரித்து 3 மாதங்கள் கடந்த பின் குனிந்து நிமிர்ந்து திரிவது நல்லது.



அலுவலகங்களில் பணி புரியும் பெண்களுக்கு மகப்பேறுக்கு இருவாரங்களுக்கு முன்னரே விடுமுறை எடுக்க முடியும். கடைசி வரை நன்றாக உழைக்கும் ஆற்றல் சில பெண்களுக்கு உண்டு. எனினும் தலைப் பிரசவமானால் கொஞ்சம் எச்சரிக்கை தேவை.

கர்ப்பிணிகளுக்கு போதுமான ஓய்வும் அவசியம். ஊட்டமுள்ள உணவும் தேவை. இவர்கள் உட்கொள்ளும் உணவின் அளவு முன்பைவிடச்சற்று அதிகமாகவே தேவைப்படும். ஏனெனில் இருவருக்கு (தாய்-பிள்ளை) வேண்டிய உணவை இவர்கள் உண்ண வேண்டுமல்லவா?

# மூக்குத்தி விவகாரம்

பெண்களுக்கு மூக்குத்தி அணிந்தால் தனி அழகுதான். ஆனால் வயது வந்த பின்னர் மூக்கைக் குத்தித் துளை போடுவதை நினைக்கும்போது- 'வலி எப்படியிருக்குமோ?' என்று மூக்கைச் சிந்த ஆரம்பித்து விடுவார்கள்.

மூக்குக்குத் துளைபோட்டு, மூக்குத்தியை மாட்டிவிட்டாலும் சிலருக்குக் காயம் ஆறாமல் சீழ் பிடித்து வலி ஏற்படும். மூக்கும் கொழுக்கட்டைபோல் உப்பி ஊதிவிடவும் கூடும்.

மூக்குக்குத்தும் காயம் பலருக்கு அடுத்தடுத்த நாளே ஆறிவிடும். புண் ஆறாவிட்டால் வேறு எந்த மருந்தோ களிம்போ தடவ வேண்டியதில்லை.



பெருங்காயத்தை சிறிதளவு எடுத்து தண்ணீரில் உரைத்து அக்களிம்பை புண்ணின் மீது தடவினால் அடுத்த நாளே புண் ஆறி, வீக்கம் வற்றி, மூக்கும் மென்மையாகி விடும்.

# விளையாட்டுத் துப்பாக்கி கொடுக்கலாமா?

இன்றையச் சிறார்களின் மிகப் பிரதானமான விளையாட்டுப்பொருள் துப்பாக்கி தான். வகை வகையான நவீனரகத் துப்பாக்கிகள் போன்றே விளையாட்டுத் துப்பாக்கிகள் கடைகளில்- காட்சிக் கூடங்களில் கண்ணாடிகளுக்குள்ளாகக் காணப்படுகின்றன. சிறுவர்களை அக் கடைகளுக்கு அழைத்துச் சென்றால் அத்தகைய துப்பாக்கியை வாங்கித் தரும்படி அடம்பிடிப்பார்கள். பெற்றாரும் வாங்கிக் கொடுத்து விடுவார்கள்.

சின்னத் திரை இல்லாத வீடுகளே இன்று கிடையாது. தொலைக்காட்சியில் வீட்டிலுள்ள அனைவரும் விரும்பிப்பார்ப்பது வன்முறை நிறைந்த படங்களே! அடிதடி, துப்பாக்கிச் சமர், மல்யுத்தம் போன்ற காட்சிகளை பெரியவர்களோடு சிறுவர்களும் சேர்ந்து இரசித்துப் பார்க்கிறார்கள். அப்பா கடையில் வாங்கிக் கொடுத்த விளையாட்டுத் துப்பாக்கியைக் கையிலெடுக்கும் நமது வீரச் சிறுவன், திரைப்படத்தில் வரும் துப்பாக்கி வீரனாகத் தன்னைப் பாவித்து நம் அனைவரையும் சுட்டுத் தீர்க்க ஆரம்பித்துவிடுவான்.



'தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்பதுபோல், சின்னஞ்சிறுசுகளின் உள்ளங்களில் வன்முறை வளராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பிள்ளைகள் விளையாட வெறியூட்டும் ஆயுதப்பொம்மைகளை வாங்கிக் கொடுக்காமல் அறிவினை ஊட்டும் பொம்மைகளையே வாங்கிக் கொடுங்கள்! வன்முறை நிறைந்த படங்களை சிறுவர்கள் பார்க்க இடம் கொடாதீர்கள்!

# பட்டுப் புடவை பாதுகாப்பு!

"பட்டுப் புடவையைப் பாதுகாக்கவா? அதற்குத்தான் இப்போது அவசியமில்லையே...? சுடிதாரும் பஞ்சாபியும் சல்வார் கமிசும் படையெடுத்து வந்து ஆக்கிரமிப்புச் செய்த பின்னர் பட்டுப் புடவையை யார் தீண்டப் போகிறார்கள்....?" என்று முணுமுணுப்பது காதில் விழத்தான் செய்கிறது.



எத்தனை புதுத் தினுசுகள் வந்தாலும் 'ஒரிஜினல்' பட்டுக்கு இருக்கும் கிராக்கி மகத்தானதுதான்.

புதியபாணி செயற்கை ஆடைகள் இடம் பிடித்து விட்டமையினால், பெறுமதி மிக்க பட்டுப்புடவைகள் அலுமாரிகளுள் நீண்டகாலம் சுருண்டு கிடக்க வேண்டியதாகிவிடுகிறது. அவற்றின் தேவை ஏற்படும்போது மட்டும் பட்டுப் புடவைகளைத் தேடி ஓடுவதை விடுத்து அடிக்கடி அவற்றைக் கண்காணிப்பது அவசியம்.

* பட்டுப்புடவைகளை அதிக காலம் மடித்து வைத்திருந்தால் அத்தகைய மடிப்புகளில் நூல் பாதிக்கப்பட்டிருக்கும். போதுமான அளவு காற்றும் ஒளியும் படாதிருப்பதனாலும் பட்டு தன் சிறப்பினை இழந்துவிடும்.
* இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை பட்டுப்புடவைகளை வெளியில் எடுத்து நேரடி வெயில் படாமல் சில மணிநேரம் நிழலில் உலர்த்தி எடுத்து மடித்து வைக்க வேண்டும். நேரடி சூரிய ஒளி பட்டால் சேலையிலுள்ள சாயம் மங்கி விடக்கூடுமேயல்லாமல் பட்டு நூலுக்கு எக் கெடுதியும் ஏற்படப் போவதில்லை.
* பட்டுப்புடவைகளை வெந்நீரில் கழுவக்கூடாது. தண்ணீரில் அதிக நேரம் ஊறப்போடுவதும் நல்லதல்ல. உலர் சலவையே (DRY CLEANING) உகந்தது. அல்லது மென்மையான சவர்க்காரம் பயன்படுத்தப்படலாம். சோப்புப்பவுடரில் ஊறவைப்பதும் கூடாது.
* பட்டுப் புடவைகளை ஸ்திரி பண்ணும் போது இளம் சூடு போதுமானது. ஸ்திரி பண்ணும்போது தண்ணீர் தெளிக்கலாகாது. புடவையின் மேல் மெல்லிய பருத்தித் துணியை விரித்து அதன் மேல் ஸ்திரி பண்ணலாம்.
* பொலித்தீன் உறைகளில் பட்டுப்புடவைகளை மடித்து வைத்துப் பாதுகாக்கலாகாது. காற்றோட்டமில்லாவிட்டால் சாயம் மங்கிவிடுவதுடன் சரிகையும் சுருங்கிப் போய்விடும்.
* சரிகை சுருங்கினால் இளஞ்சூட்டில் சரிகையை மட்டும் ஸ்திரி பண்ணலாம்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? புத்தளம் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

செல்வி எஸ்.சுபாஷினி, தேத்தாப்பளை, மாம்புரி, புத்தளம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# காது குத்துதல்

* காது குத்திக் கொள்ளும் பழக்கம் புராண காலத்தில் இருந்தே பழக்கத்தில் இருந்து வருகிறது. கிழக்கிந்தியர்கள், எகிப்தியர்கள், அரேபியர்கள் மற்றும் ஹீப்ருக்கள் பழங்காலத்தில் காது குத்தி காதணிகளை அணிந்திருந்தனர்.
* ரோம் நகரத்தில் பெண்களைத் தொடர்ந்து ஆண்களும் காது குத்தி, காதணிகளை அணியத் தொடங்கினர். கி.மு. 3ம் நூற்றாண்டில் ரோமப் பேரரசன், ஆண்கள் காது குத்தும் பழக்கத்திற்குத் தடை விதித்தான்.
* அதற்குச் சில காலம் கழித்து ஆண்கள் இடது காதில் மட்டும் காதணி அணியும் பழக்கம் ஏற்பட்டது.
* இத்தாலி மற்றும் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த ஆண்களும், நாடோடி இன ஆண்களும், படகோட்டிகளும் இன்னும் கூட காது குத்திக் காதணிகள் அணியும் பழக்கத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர்.
* காது குத்திக்கொள்வது, காதுகளுக்கு நல்லது என்ற நம்பிக்கை ஒரு காலத்தில் மருத்துவர்களிடையே நிலவியது. எனினும் அதற்கான காரணம் விஞ்ஞான ரீதியாக இதுவரை நிரூபிக்கப்படவில்லை.

# சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது சுகந்தினி

## பிட்ஸா

தேவையானவை:

| | |
|---|---|
| கோதுமை மாவு | - 150 கிராம் |
| ஈஸ்ட் | - 50 கிராம் |
| மாஜரீன் | - 5 தேக்கரண்டி |
| சீஸ் | - 50 கிராம் |
| தக்காளிப் பழம் | - 4 |
| வெங்காயம் | - 2 |
| பச்சை மிளகாய் | - 4 |
| முந்திரிகை வற்றல் | - 10 |
| பேக்கிங் பவுடர் | - 2 சிட்டிகை |

செய்முறை:

கோதுமை மாவுடன் பேக்கிங் பவுடரையும், ஈஸ்ட்டையும் கலந்து 2 மணிநேரம் ஊறவைக்கவும். மாவுக் கலவை நன்றாகப் பொங்கி வரும். வந்ததும் அதை, வாயகன்ற பேசினில் பரப்பி வைக்கவும். மாஜரீனை அதன் மீது மெதுவாகப் பரப்பித் தடவவும்.

தக்காளி, வெங்காயம் இரண்டையும் மிக்ஸியில் போட்டு நன்றாக அரைத்துக் கொள்ளவும். அதனை பேசினுள் இருக்கும் மாக்கலவையின் மீது சீராகப் பரப்ப வேண்டும். பிறகு வாணலியில் மணல் போட்டு சற்றுச் சூடானதும் பேசினை சூடான மணல் மீது வைத்து இட்லி தட்டு போட்டு மூடி வேகவிடவும். அவன் (Oven) இருந்தால் அதில் வைக்கலாம்.

பின்னர் வேகவைத்து எடுத்த பிட்ஸாவை பல வகைகளிலும் அலங்கரிக்கலாம். பச்சை மிளகாய், தக்காளி, வெங்காயம் இவைகளை அழகான வில்லைகளாக்கி, சீஸை சீவித் தூவலாம். முந்திரிகை வற்றலை சற்று இடை வெளிவிட்டுப் பதிக்கலாம். இது போல் பிட்ஸாவை அழகுபடுத்த பச்சைப் பட்டாணி, கரட் ஆகியவற்றையும் பயன்படுத்தலாம்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

## மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BP

பெயர்:................................

முகவரி:................................

................................

கையொப்பம்:................................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 17-05-1997

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல.-1772, கொழும்பு.

# ஒரேஞ்ச் பழம்

நம் நாட்டுச் சந்தைகளில் இப்பொழுதெல்லாம் பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'ஒரேஞ்ச்' பழங்கள் கண்களைக் கவர்ந்திழுக்கின்றன. நம் நாட்டில் உற்பத்தியாகும் தோடம் பழங்கள் இப்பொழுது அரிதாகிவிட்டன.



ஒரேஞ்ச் வர்ணத்தில் (மஞ்சள்) காணப்படும் பிறநாட்டுப் பழங்களைவிட, சிட்றிக் அமிலம் நம் நாட்டுத் தோடம் பழங்களில் தான் உள்ளது. ஆனால் சுவை என்னவோ ஒரேஞ்ச் பழத்தில்தான்!

இப்பழங்கள் இப்பொழுதெல்லாம் மிக மலிவாகக் கிடைக்கின்றன. சாதாரணமாக 5 ரூபாவுக்கு ஒரு பழம் வாங்கிவிடலாம்.

### தோலுக்கும் பயனுண்டு!

ஒரேஞ்ச் பழத்தோலை வீணாகத் தூர எறிந்துவிடாதீர்கள்! அவற்றை நன்றாகக் கழுவி சிறு துண்டுகளாக நறுக்கி, இரண்டு மூன்று நாட்கள் வெயிலில் காயவிடுங்கள். பின்னர் மிக்சியிலிட்டு மாப்போல் அரைத்து பாத்திரத்தில் சேர்த்து வையுங்கள்.

குளிக்கும் போது சிறிதளவு எடுத்து நீரில் குழைத்து உடல் முழுவதும் பூசி- சில நிமிடங்களின் பின் குளிக்கலாம். இதனால் சரும வியாதிகள் பல குணமாகும். சொறி சிரங்கு, இருந்தாலும் சுகமாகிவிடும். தலை முடிக்கும் தேய்த்துக் குளித்தால் முடி பளபளப்பாகும்.

வற்றல் குழம்பு கொதித்து வரும்போது சிறிதளவு தூளைத் தூவினால், கமகம என்று மணம் வீசும். பாலுடன் சேர்த்து களிம்பு மாதிரிப் பிசைந்து முகத்திலும் தடவி பின்னர் வெது வெதுப்பான நீரில் கழுவினால் முகம் பளபளப்பாகும்.

# வாழைப்பூ

பெண்களுக்கு அடிக்கடி வயிற்றில் கோளாறுகள் தோன்றும். வாழைப்பூவை சுண்டல் செய்து வாரம் ஒரு தடவையாவது சாப்பிட்டு வந்தால் அத்தகைய சிக்கல்கள் நீங்கிவிடும். இரத்த விருத்திக்கும் வாழைப்பூ சிறந்த உணவு.

தினமுரசு-அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப்போட்டி

தினமுரசு— அருள் ஜுவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 10

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.



படிப்பகம்

# காதல் நோக்காடு

வா அன்பே...!
வந்து மீட்டு
இந்த வாலிப வீணையின்
நரம்புகளை...!
..
மலரத் துடிக்கும்
இந்த மொட்டின்
இதழ்களை விரித்து வைக்க
உன் காதல் காற்றை
அனுப்பி வை
..
உன்னை எண்ணி(க்)
கவிதை எழுதிக் களைத்த
என் விரல்களுக்கு
முத்த ஒத்தடம் கொடுக்க
உதட்டை எடுத்து வா...!
..
இன்னும்-
கன்னம் கொண்டு வா;
என் உருவம் முழுவதும்
நீ குடிக்க வேண்டும்!
..
கிளிகள் கத்தி இருட்டும்
செக்கல் மக்கலில்
ஒளிந்து கொண்டு
காதல் செய்ய-
உன் வீட்டுக் கிடுகு வேலியில்
யன்னல் செய்...!
..
கோழி கூவி விடியும்
காலைப் பொழுதில்-
வாசல் பெருக்கிக் கொண்டு நில்!
நான் அதால
வந்து போகிறேன்...!
..
மயிலாடக் கண்டு
வானம் மந்தாரிக்கும்;
அப்போது-
என் மனமும் மந்தாரிக்கும்
உன்னை எண்ணி...!
..
எழுந்து வா புள்ள!
ஆற்றங்கரைப் புல் வெளியிலும்
கடற்கரை மணல் வெளியிலும்
நம் கால்கள்-
காதல் சுவடுகள் பதிக்க வேண்டும்!

சிந்தனைப் பித்தன்.

# திருத்தப்படாத தீர்ப்புக்கள்

நீண்டு செல்லும்
விரக்திகளின் வாசலில்
நின்று கொண்டுதான்
தொலை தூரம்
தெரிகிறது வாழ்வு.
*
பொருத்தப் பாடில்லாத
திணிப்புகளிற்கு நடுவில்
சாவின் தூதுவர்கள்
அலைந்து திரிவதும்
அவலம் செய்வதும்!
*
கண்ணீர் குளித்த
வீடுகளுக் குள்ளால்
எத்தனை அனாதைப்
பிணங்களை
ஒரே குழியில் போட்டு
மண் தள்ளுவது....?
*
எந்தப் பாதையால்
சமாதானம் வருகிறது?
ஏக்க விளிப்புகளுக்கு
நடுவே மானுடம்
கேள்விக்குறிகளோடு
மௌனியாக
கூனுகிறது.
*
இழப்புகளின்
தொடர் பயணத்தின்
சுவடுகளை,
எந்த தேவன்
வந்து அழித்து
ஆறுதல் படுத்துவார்?
*
நிழல்கள் உதிர்ந்த
ஒரு பூலோக வெளியில்
சுட்டெரித்த
நினைவுகளோடு
தடவித் தடவி
நடந்து கொள்கிறது
வாழ்வு...!
*
பாப நாசக்
குளங்கள் தூர்ந்து
போன நிலையில்,
எத்தனை நாட்களுக்குத் தான்
தீர்ப்புகளை எதிர்பார்த்து
தவம் கிடப்பது
நீதி?
*

# கவியிரவு

நட்சத்திரங்கள் பேசும்
இரகசியத்தைத் தவிர
வேறெந்த சப்தங்களும்
காதில் விழாத இரவு நேரம்
***
கவி எழுதும் என்
கைவிரல்கள் உன்
இதயத்துடிப்பின் இசையில்
மயங்கிய போதையில்...
***
மனதைப் பிளந்து உன்
பெயரை விதைக்கிறேன்...
மௌனம் முளைக்கிறது,
கவிதைகளாக.
***
பகலின்
பகையில் இருந்து தப்பித்து
நிலவில் தலைசாய்த்து உன்
நினைவுகளால் அழுவதும் கூட
ஆனந்தமானது...!
***
இரவில்தான் என்
இதயத்துள் ஒலிக்கும் உன்
மௌனத்தின் வாசகங்கள்,
தெளிவாகக் கேட்கின்றன!
***
இந்த இரவையும் விட
அழகானது நம்
காதல்
***
என் இதய மேகம்
அசையும் இசையில்
ஆடத்துடிக்கும் மயிலாக நீ!
***
உன் மௌனத்தை
கவியாக சுவைத்துடிக்கும்
குயிலாக நான்!
***
ஒரு கான மயில்
கருங்குயிலை நேசிக்கும்
அதிசயத்தைக்கூட
பருவம் நிகழ்த்திவிட்டது!
**

பர்ஸான்-யடவத்த

# உன் ஞாபகங்கள்!

பஸ்ஸின் புழுக்கத்திலும்
தற்செயலாய் உரசிய
சுடிதார் ஞாபகம்....
அதற்கு "நான்" கேட்ட
மன்னிப்பின் ஞாபகம்!
ooo
வியர்த்து விறுவிறுத்து
தயங்கி நான்கேட்க,
பூங்காவில் நீ
முத்தம் தந்த
எச்சில் ஞாபகம்.
ooo
என்னை நினைத்து
உருகியதாக
நீ எழுதிய
கடித...
வரிகளின் ஞாபகம்.
ooo
வானவில்லை கயிறாக்கி
உன்னையும் என்னையும்
இறுக கட்டியதாக
நீ சொன்ன- கற்பனை
கனவின் ஞாபகம்.
ooo
கை கோர்த்து
நடக்கையில்-என்
அழுத்தலின் அர்த்தம்
புரிந்தும் புரியாத
வெட்கத்தின் ஞாபகம்!
ooo
எல்லாம்
மறக்காமல் இருக்க,
குறித்து
பொறித்துவைத்தேன்;
மறந்து போனேன்!
ooo
'உன்'
கல்யாண அழைப்பை
கிழித்துப் போட்டும்-நீ
"மறக்கச்" சொன்னதை
மறக்கவில்லை!

சுபா வரன்- கண்டி.



# வாழ்வின் ஒளிமயம்

ஒளிமயமான எதிர்காலம்
என் நம்பிக்கையில்
உதயமாகிறது!
***
கனவுகள் கண்ட
எனது வாழ்க்கை
முள்ளில் சிக்கி
இரத்தம் சிந்திய
சோக இதயத்தை
சொந்தமாக்கியதும்...
சொப்பனத்தின்
வசந்தங்கள்
சோரம் போயின...!
***
நிஜங்கள் நெருட
நேரம் நெருங்கிட- இடர்
வெளிகளைக் கடந்து
வேட்கையுடன்
காத்திருக்கிறேன்;
உறுதியான
நம்பிக்கையுடன்!

லோரி செல்வா.

# தேன் கிண்ணம்



கழல் மேகங்கள் தொலைந்து
மீண்டும்
புதிய விடியல்
வேண்டியதான ஒரு
பூஜ்ய எதிர்பார்ப்புகளோடு
அர்த்தமில்லாத தொலைப்புகளில்
நீளுகிறது
நம்சின்னஞ் சிறிய
பூமி.
*

மானுடபுத்ரன்.

# நீ வரவில்லை

தலையணை தீப்பொதியானது;
கண்ணீர் வெந்நீராய்ச் சுட்டது;
என் எல்லாக் கடமைகளும்
உன் ஞாபகத்தால்-
ஆமை வேகத்தில் நடந்தேறின!
0-0-0

சுவாசம் பெருமூச்சானது,
இதயமும் மூளையும் இடம் மாறி
இலந்தைக்கோடு விளையாடின.
மனசுக்குள் மலர்
வாடிக் கிடந்தது;
ஆயினும் நீ வரவில்லை....!
0-0-0

என் வீதியில் போகிற
ஒவ்வொரு வாகனத்திலும்,
உன் வரவை எதிர்பார்த்தேன்!
எல்லா வாகனங்களும்
என் வீட்டின் முன் தரித்து-
என்னைக் கேலி செய்தன!
0-0-0

தபால்காரன் கூட இப்போதெல்லாம்,
அடுத்த வீட்டிற்குப் போகிறான்.
நீ ஏன் அவனை அனுப்பவில்லை?
முகத்தைக் காட்டிப் போனவனே!
அகத்தையும் காட்டிப்போயேன்!

ஆஷா.

# அசலும்- நகலும்


நகல்


அசல்-ரி.ராஜேந்தர்

ஒருவர் போலவே ஏழுபேர் இருப்பர் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள் அல்லவா. இங்கே பாருங்கள், நாம் அறிந்த பிரபலங்கள் போலவே தோற்றமளிக்கும் சிலரைக் காணலாம்.


நகல்


அசல்-அரவிந்தசாமி


அசல்- நரசிம்மராவ்


நகல்


அசல்-வடிவேலு


நகல்

முக்கிய குறிப்பு:
நம் நாட்டிலும் பிரபலங்களின் (எந்த நாட்டுப் பிரபலங்களானாலும்) தோற்றத்தோடு ஒத்திருப்போர் யாராவது இருந்தால் தமது புகைப்படங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். (சுய முகவரி முக்கியம்) முரசில் அவை பிரசுரமாகும்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(11.05.1997 தொடக்கம் 17.05.1997 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

மேடம் - சூரியன், புதன்.
இடபம் - வெள்ளி.
சிம்மம் - செவ்வாய்.
கன்னி - இராகு.
மகரம் - வியாழன்.
மீனம் - சனி, கேது.

★ சந்திரன்- மிதுனம், கர்க்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், அந்நியர் பகை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, தொழில் மந்தம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, காரியக் கேடு. | பி.ப. 3 மணி |
| புதன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. 1 மணி |
| வியாழன்- காரியானுகூலம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, பிரயாணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- பலவித நன்மை, பெரியோர் உதவி. | பி.ப. 2 மண |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கிலேசம், கடன் தொல்லை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- பலவித கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் நட்பு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- காரியக்கேடு, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### இடபம்:

(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- இனசன நன்மை, பலவித பேறு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பண வரவு. | பி.ப. 1 மணி |
| புதன்- தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. 2 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், மனக் கவலை. | பகல் 11 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | மு.ப. 10 மணி |
| சனி- கடன் தொல்லை, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்- வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் பேறு, செலவு அதிகம். | பி.ப. 4 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, மனக் கவலை. | பி.ப. 1 மணி |
| புதன்- முயற்சி பலிதம். இனசன நன்மை. | பகல் 11 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், கௌரவம். | பி.ப. 3 மணி |
| சனி- தொழில் சிறப்பு, பெரியோர் பகை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | பி.ப. 4 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, வெளியிட வாழ்க்கை. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| புதன்- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. 4 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- இனசன நன்மை, பலவித பேறு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| புதன்- பயனுள்ள செயல், புதிய முயற்சி. | பகல் 11 மணி |
| வியாழன்- வீண் பிரயாணம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் கஷ்டம், காரியத் தடை. | பகல் 12 மணி |
| சனி- பொருள் விரயம், மனக் கவலை. | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்- வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, பிரயாண மிகுதி. | பி.ப. 3 மணி |
| புதன் - துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- செலவு மிகுதி, உயர்ந்த நட்பு. | பகல் 11 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், பண வரவு. | பகல் 12 மணி |
| சனி- தொழில் கஷ்டம், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, பண வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், உயர்ந்த நிலை. | பி.ப. 4 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், பலவித பேறு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- செய்தொழில் விருத்தி, அந்நியர் உதவி | பி.ப. 3 மணி |
| சனி- மனக் கலக்கம், உறவினர் பகை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 4 மணி |
| செவ்வாய்- பயனுள்ள செயல், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| புதன்- கடன் சுமை, மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- உயர்ந்த நட்பு, கௌரவம். | பகல் 11 மணி |
| வெள்ளி- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| சனி- புதிய முயற்சி, செலவு அதிகம். | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- முயற்சி பலிதம், உறவினர் உதவி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- கடன்தொல்லை நீங்கும், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- இனசன நன்மை, வீண் மனஸ்தாபம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| புதன்- காரியானுகூலம், தொழில் சிறப்பு. | பி.ப. 3 மணி |
| வியாழன்- பலவித பேறு, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, பண வரவு. | பி.ப. 2 மணி |
| சனி- மனக் கிலேசம், பெரியோர் உதவி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பண விரயம், ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- அந்நியர் நட்பு, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், கடன் படல். | பகல் 12 மணி |
| வெள்ளி- முயற்சிகளில் வெற்றி, உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| சனி- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5





சாத்திரங்கள் பலபல கற்பராம்!
சவுரியங்கள் பலபல செய்வராம்!
மூத்த பொய்ம்மைகள் யாவும் அழிப்பராம்!
மூடக் கட்டுக்கள் யாவும் தகர்ப்பராம்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# பேராசைக்காரன்



ஒரு கிராமத்தில் சின்னான் என்ற ஒருவன் இருந்தான். இவன் தினமும் இரவில் மீன் பிடிக்கச் செல்வது வழக்கம்.

ஒருநாள் சின்னான் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, ஒரு விசித்திரமான பெரிய பறவை அங்கு வந்தது. அந்த அதிசயப் பறவை, மீன்பிடிக்கும் சின்னானை வெகுநேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தது. அன்று சின்னானுக்கு ஒரே ஒரு சிறிய மீன் மட்டும் கிடைத்தது.

அதைக் கண்ட அதிசயப்பறவை, "ஏய்! இந்தச் சிறிய மீனை வைத்துக் கொண்டு என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்டது.

அதற்கு சின்னான், "இதனைச் சந்தைக்கு எடுத்துச் சென்று அங்கு விற்று விட்டு, கிடைக்கும் பணத்திற்கு அரிசி வாங்கி வந்து, நானும் என் மனைவியும் சோறாக்கி உண்போம்," என்றான்.

சின்னான்மீது பறவைக்கு இரக்கம் ஏற்பட்டது. அது சின்னானிடம், "நாளை முதல் ஒவ்வொரு இரவும் உனக்கு ஒரு பெரிய மீனைக் கொண்டு வந்து தருகிறேன். அந்த மீனை விற்று நீ நிறையச் சம்பாதிக்கலாம்," என்று கூறியது.

இதைக்கேட்ட சின்னானுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. அவன் அந்த அதிசயப் பறவைக்கு நன்றி சொல்லிவிட்டு வீட்டிற்குச் சென்றான்.

மறுநாள் இரவு தொடக்கம் அதிசயப் பறவை அவனுக்குச் சொன்னபடியே மீனைக் கொண்டுவந்து போட்டது. அவனும் அதைச் சந்தைக்கு எடுத்துச் சென்று விற்றுப் பணம் சம்பாதிக்கலானான்.

ஒருநாள் அந்த நாட்டின் மன்னர், தனக்கு அதிசய ஜீவராசிகளைக் காண்பிப்பவர்களுக்கு 500 பொற்காசுகள் வழங்கப்படும் என்று அறிவித்தார்.

இதைக் கேட்ட சின்னான் நேராக அரண்மனைக்கு ஓடினான். அங்கு மன்னரிடம்,

"அரசே! நாளைக் காலை உங்களுக்கு நான் அதிசயப் பறவை ஒன்றைப் பிடித்துக் கொண்டு வந்து தருகிறேன். நீங்கள் அறிவித்தபடியே 500 பொற்காசுகளை எனக்குத் தருவீர்களா?" என்று கேட்டான்.

"நிச்சயமாகத் தருவேன்," என்று வாக்களித்தார் மன்னர்.

அன்று இரவு சின்னானுக்காக மீனைக் கொண்டு வந்தது அதிசயப்பறவை. வீட்டின் சுவரோரம் பதுங்கியிருந்த சின்னான், அதை வஞ்சகமாகப் பிடிக்க முயன்றான். இவனது கபட எண்ணத்தைப் புரிந்துகொண்ட அதிசயப்பறவை அவனையும் தூக்கிக் கொண்டு பறந்தது.

சிறிது தூரம் அவனைத் தூக்கிக் கொண்டு பறந்து சென்ற அந்த அதிசயப் பறவை, சின்னானைக் கீழே தொபுக்கென்று போட்டது. கீழே விழுந்த சின்னானின் கை முறிந்தது.

சின்னானின் பேராசை காரணமாக அவனது கை ஊனமாகியது. அத்துடன் அவனுக்கு உதவி செய்த அந்த அதிசயப் பறவை வரவேயில்லை. அவனுக்கு இலவசமாகக் கிடைக்கும் மீனும் கிடைக்கவில்லை.

## பப்பாளிப்பழம்

தக்காளிப்பழம் போல் பளபளப்பு
தரணியில் இதற்கோர் தனிமதிப்பு!
எக்காலத்திலும் இது கிடைக்கும்
'ஏ' விட்டமின் இதில் மிகுந்திருக்கும்!

மஞ்சள் நிறமாய்ப் பழுத்திருக்கும்
மாம்பழம் போல் இதன் ருசியிருக்கும்!
கறுப்பு முத்தாய் விதையிருக்கும்
காண்பவர் நெஞ்சைப் பறித்திழுக்கும்!

பப்பாளிப்பழத்தை உண்பதனால்
பார்வை நன்கு பளபளக்கும்!
அப்பாவிடம் நீ சொல்லி வைத்தால்
தப்பாமல் நாளை கிடைத்திடுமே!

வீட்டுத் தோட்டத்தில் விதையூன்றி
வேண்டும் அளவு நீர் ஊற்று!
ஆண்டு முடிவில் தேர்வு வரும்
அதற்குள் வளர்ந்து பழம் கொடுக்கும்!

-சுகுணன்-

## வாரம் ஒரு நாடு

### உருகுவே



| | |
|---|---|
| தலைநகர் | - மொண்டே வீடியோ |
| பரப்பு | - 1,76,215 சதுரகிலோமீட்டர் |
| மக்கள் தொகை | - 32 இலட்சம் |
| மொழி | - ஸ்பானிஷ் |
| எழுத்தறிவு | - 96% |
| சமயம் | - கிறிஸ்தவம் |
| நாணயம் | - பெஸோ |
| தனிநபர் வருமானம் | - 3340 டொலர் |

**அமைவிடம்:**

உருகுவே தென்னமெரிக்காவில் உள்ள சிறிய குடியரசு. இது ஆர்ஜென்டினாவை மேற்கிலும், பிரேஸிலை வடக்கிலும் கொண்டு, பிளேட் ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது.

**வரலாறு:**

துவக்க காலத்தில் ஸ்பெயினின் ஆதிக்கத்தில் இருந்தது. பின்னர் பிரேஸிலின் ஆளுகைக்குட்பட்டு 1825ல் சுதந்திர நாடாயிற்று. தற்போது இங்கு ஏகாதிபத்திய ஆட்சியை மாற்ற, அரசியல் சட்டத்தில் தேவைப்படும் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

**பொருளாதாரம்:**

கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில். மொத்த நிலத்தில் 60% பண்ணைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. கோதுமை, அரிசி, பார்லி, சோளம் ஆகியவை முக்கிய விளைபொருட்கள். வைன் தயாரித்தல், ஆட்டிறைச்சி பதப்படுத்துதல், நெசவு ஆகியன முக்கிய தொழில்களாகும்.

## விடுகதைகளும் விடைகளும்


1. கேட்டால் பேசமாட்டான், இரண்டு போட்டால் பேசுவான்.
அவன் யார்?
2. அடித்தாலும் விலகாது, அணைத்தாலும் தழுவாது.
அது என்ன?
3. வேட்டையாடப்படாத மான், வேடர்கள் துரத்தாத மான்.
அது என்ன?
4. பிறக்கும் போது வாலுண்டு, இறக்கும் போது அது இல்லை.
அது என்ன?
5. வெள்ளை மாளிகைக்கு வழியும் இல்லை, வாசலும் இல்லை.
அது என்ன?
6. துளித்துளியாய்க் கண்ணீர் விட்டு, இருளைத் தூர விரட்டும்.
அது என்ன?
7. நித்திரையின் தூதுவன், நினைக்காமல் வருபவன்.
அவன் யார்?
8. பூட்டுச்சாவி இல்லாத பெட்டி, கைக்கு அடக்கமான பெட்டி.
அது என்ன?
9. இரவினில் ஆட்டம் பகலினில் தூக்கம்.
அது என்ன?
10. நமக்குக் கீழே இருப்பவன், நம்மைத் தூக்கிச் சுமக்கிறான்?
அது என்ன?

**விடைகள்:**

1. மத்தளம் 2. தண்ணீர்
3. அந்தமான் தீவு 4. தவளை 5. முட்டை
6. மெழுகுவர்த்தி 7. கொட்டாவி 8. தீப்பெட்டி
9. வெளவால் 10. செருப்பு.

தொகுப்பு-ஏ.அகல்யா.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 17.05.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 192
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 190

பரிசுக்குரியவர்:
சிவபாலன் ரூபினி
சண்முக இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை.

பாராட்டுக்குரியவர்கள்:


| | |
|---|---|
| எ.எம். ஸஹ்பீக், எருக்கலம்பிட்டி, பாலாவி. | எஸ். கேஷாந்தரணி, பது/ தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. |
| எஸ். வினோதராஜன், க/ தொலஸ்பாகை த.வி. தொலஸ்பாகை. | வை.கு. விஷ்ணுவர்த்தன், விச்சேலி சர்வதேச பாடசாலை, கொழும்பு-7. |
| செல்வி மதுமிதா மனோகர், சைவ மங்கையர் கழகம், கொழும்பு-6. | செல்வி பி. தனுஷிக்கா, கமு/ இ.கி.மி.ம. வித்தியாலயம், கல்முனை. |
| எம். எச். மொகமட் ரிஸ்வி, சென்ஜோசப் மகா வித்தியாலயம், அனுராதபுரம். | ஏ.கே.எம். ஸாஜன், கமு/ அல்-மனார் மத்தியகல்லூரி, மருதமுனை-01. |
| செல்வன் ப. ருசான், நாமகள் வித்தியாலயம், கல்குடா. | யமுனா உதயங்கனி, தி/ க.பண்.ம.வி. அக்போபுர. |

## மனித உடலில்.....



➡ மனித உடலில் எத்தனை வியர்வைத் துவாரங்கள் இருக்கின்றன என்று தெரியுமா? சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். மொத்தம் 20 இலட்சம் வரையான நுண்ணிய துவாரங்கள் உள்ளன.

***



➡ மனித உடலில் உள்ள இரத்தக் குழாய்களின் மொத்த நீளம் எவ்வளவு தெரியுமா? இரத்தக் குழாய்கள் அத்தனையையும் ஒன்றுடன் ஒன்று பொருத்தி ஒரு முனையில் இருந்து மறு முனைவரை அவற்றின் நீளம் பூமியை 7 தடவைகள் சுற்றுவதற்குச் சமமான அளவாகும்.

***




➡ மனித உடலில் 20 கோடி சிவப்பு அணுக்கள் உள்ளன. 330 கோடி வெள்ளை அணுக்கள் உள்ளன.


***

## கடல் செய்திகள்



* 'ஹரிக்கேன்' என்று எதை அழைக்கிறார்கள்?
அட்லாண்டிக் பெருங்கடலில் உருவாகும் புயலை.
* பசிபிக் பெருங்கடலில் ஏற்படும் புயலை எப்படி அழைக்கிறார்கள்?
டைஃபூன்.
* கடற்கரை மணலைச் சுத்தம் செய்யும் கருவியின் பெயர் என்ன?
பீச் கோம்பர்.
* வருடத்தில் கடலில் மட்டம் எத்தனை சென்டிமீட்டர் உயர்கிறது?
நான்கு சென்டிமீட்டர்.
* உலகின் பொதுவான கடல் மட்டங்களைவிட அதிக பள்ளத்தில் உள்ள கடல் எது?
சாக்கடல் (டெட் சீ)
* நீச்சல் தெரியாதவர்கள் கூட மிதக்கக் கூடிய கடல் எது? ஏன் அப்படி?
சாக்கடல் (டெட் சீ). உப்பின் அடர்த்தி மற்றக் கடல்களை விட அதிகமாக உள்ளதால் இந்தக் கடலில் யாரும் மூழ்குவதில்லை.
* கடலின் மேல்மட்ட வெப்பநிலை என்ன?
முப்பது பாகை செல்சியஸ் (30 சி)
* ஏரி அளவிலான நீரைக் கொண்டுள்ள நீர் நிலை ஒன்றைக் கடல் என்கிறார்கள். அதன் பெயர் என்ன?
ஏரல் கடல்.

## உயரமான கலங்கரை விளக்கம்



உலகிலேயே மிக உயரமான கலங்கரை விளக்கம் ஜப்பான் நாட்டின் யோகோஹாமா நகரில் உள்ளது. இதன் உயரம் 348 அடி. 6 இலட்சம் மெழுகு வர்த்திகளுக்கு இணையான ஒளியைப் பாய்ச்சும் இந்தக் கலங்கரை விளக்கத்தின் ஒளியை 32 கிலோமீட்டர் தூரத்திற்கு அப்பால் இருந்தே பார்க்கலாம்.

www.padippakam.com

**இதுவரை** பழைய புத்தகக்கடையில் அந்த நோட்டுப் புத்தகம் கிடைக்கிறது. கையெழுத்தில் தனது கதையை எழுதியிருக்கிறாள் காயத்ரி. கதையைப் படித்துவிட்டு வந்து தன்னைக் காப்பாற்றும்படி எழுதியிருக்கிறாள். கதை விரிகிறது.

காயத்ரி–ரத்னா என்பவனை மணக்கிறாள். அவன் வீட்டுக்கு செல்கிறாள். ரத்னாவின் நடவடிக்கைகள் புதிராய் உள்ளன. ரத்னாவின் சகோதரி சரசு விதவை. அவனது செயல்கள் சந்தேகம் தருகின்றன. வீட்டு சமையற்காரன் மகள் இந்திராவை உடலில் நகைகளை மட்டும் அணிவித்து நிறுத்தியிருக்கிறாள் சரசு. சிகரெட்டால் இந்திராவின் உடலை சுடுகிறான் அவள் தந்தையான சமையற்காரன்.

கதவு இடுக்கு வழியாக அக் காட்சியைக் காண்கிறாள் காயத்ரி. ரத்னாவிடம் தான் கண்டதை காயத்ரி சொல்கிறாள். சரசை வீட்டை விட்டுப் போகச் சொல்கிறான் ரத்னா. பின்னர் ரத்னாவும், சரசுவும் இரகசியமாகப் பேசுவதைக் கேட்கிறாள் காயத்ரி. எல்லாம் அவர்களின் நாடகம் என்று தெரிகிறது. தன்னை என்னவோ செய்யப் போகிறார்கள் என்று பயப்படுகிறாள் காயத்ரி. வீட்டுக்குப் பின்புறம் அவுட் ஹவுசில் ஒரு பெண்ணை அடைத்து வைத்திருப்பதையும் காண்கிறாள் காயத்ரி. அதிர்கிறாள். அடைக்கப்பட்டிருப்பவள் நிர்மலா என்று அறிய முடிகிறது.

காயத்ரியின் கதையைப் படித்தறிந்த எழுத்தாளர் உடனடியாக கணேஷ்–வசந்த் ஆகியோரின் உதவியை நாடுகிறார். காயத்ரியைக் காப்பாற்றப் புறப்படுகிறார்கள். **இனி...**



# காயத்ரீ

## அங்கம் 08



**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

"கா யத்ரி! காயத்ரி! காயத்ரி!" என்று சரஸு கூப்பிட்டுக் கொண்டே சென்றாள். எனக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. சரஸு என்னைச் சந்தேகிக்கிறாளா? ரத்னா உள்ளே சென்றான். இந்திரா மட்டும் நேர்ப்பார்வை பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். அவளிடம் வ்சந்த் "இங்கே வாடி!" என்றான்.

"என்ன மாமா" ஏன்றாள்!

"சட், என்னைப் பார்த்தால் மாமா மாதிரியா இருக்கிறது?"

"ஷட் அப் வசந்த். இந்திரா போய் கொஞ்சம் ஐஸ் வாட்டர் எடுத்துக் கொண்டு வா!?" என்றான் கணேஷ். வசந்த் விசனமானான். அவள் சென்றதும் கணேஷ், அவசர அவசரமாக, "ரைட்டர் ஸார்! இப்போது நம்மை ஒரு தனி அறைக்கு அழைத்துச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அங்கே நமக்குக் காட்டப்படுவதை காயத்ரி பார்க்...."

"வா காயத்ரி வா. இவாள்ளாம் நமக்கு வேண்டியவாள்தாம்." என்று சரஸ்வதியின் குரல் கேட்டு நாங்கள் கலைந்தோம்.

காயத்ரி வந்தாள். ஏதோ ஒரு மிரண்ட மான்போல் தான் ஒருவரையும் நேராகப் பார்க்காமல் இயந்திரம் போல் வந்து எதிரில் உட்கார்ந்தாள். அவள் புதிதாக முகம் கழுவிக் கொண்டு, கருநீல நிறத்தில் அகல பார்டர் போட்ட கைத்தறி சில்க் புடவை அணிந்து கொண்டு, தழையத் தழையக் கூந்தலில் மல்லிகை தென்பட ஏகப்பட்ட நகைகள் அணிந்து கொண்டு, ஜாஜ்வல்யமாக ஏதோ ஒரு அம்மன் போலத்தான் நின்றாள்......

"ஹலோ காயத்ரி" என்றேன்.

அவள் குனிந்து கொண்டு,"ஹலோ" என்றாள்.

"ரொம்ப வெட்கப்படுகிறார்களே... படத்தில் அப்படித் தெரியவில்லையே!" என்றான் கணேஷ். சரஸ்வதி அவனிடம் வேகமாக வந்து தாழ்ந்த குரலில் ஏதோ பேச, அவன் சரி என்று தலையாட்டினான்.

அந்தப் பெண்ணை, என் கதா நாயகியை இத்தனை நாள் என் மனதின் எண்ணங்களை ஆக்ரமித்துக்கொண்ட... அந்த வீட்டில் வந்து மாட்டிக்கொண்ட.... காயத்ரி என்னும் மனைவியை வெறும் வார்த்தைகளிலிருந்து புறப்பட்டு, தசையும் ரத்தமும் நகமுமாகப் பரிணமித்தவளைப் பார்த்தேன்....பெண்ணே உன்னை நாங்கள் காப்பாற்ற வந்திருக்கிறோம்....காப்பாற்றி...அதை எப்படி மற்றவர்கள் எதிரே சொல்லுவது...?

காயத்ரி எங்களைப் பார்க்கவே இல்லை. கீழே பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தலை குனிந்திருந்தது. அவள் மார்பு படபடத்துக்கொண்டிருந்தது. அவள் கைகள் மெலிதாக நடுங்கிக் கொண்டிருந்தன....

"பேசு காயத்ரி. இவர்கள் எல்லாம் ரத்னாவின் சினேகிதர்கள்...."

"ம்" என்றாள்.

எப்படி இவளுக்குச் செய்தி தெரிவிப்பது?

"உடம்பு சரியில்லை என்று சொன்னார்களே? தலைவலியோ?" என்றான் வசந்த்.

"அதெல்லாம் இல்லை."

"ஏதாவது மாத்திரை எடுத்துக் கொண்டால் நல்லது."

"மாத்திரை நிறையச் சாப்பிடுகிறேன். இந்த வீட்டில்." என்றாள். சரஸு சற்று முகம்மாறினாள்.

"சரஸு I am sorry (என்னை மன்னியுங்கள்) நான் Moodல் (மன நிலையில்) இல்லை. நான் என் அறைக்குப் போகலாமா...?"

ரத்னா உள்ளே நுழைய சரஸு, "இப்படித்தான் வீட்டுக்கு வந்த விருந்தாளிகளை அவமானப் படுத்தலாமா?" என்று அதட்டினாள்.

"எனக்கு உடம்பு சரியில்லை என்று சொன்னேனே...."

ரத்னா, "என்ன நடந்தது?" என்றான்.

சரஸு. காயத்ரி இருவருமே அதற்குப் பதில் சொன்னார்கள். நான், "பரவாயில்லை பரவாயில்லை. அதனாலென்ன...?" என்று அந்த ஹாலைச் சுற்றிப் பார்த்துவிட்டு "மிஸ்டர் ரத்னா..... இந்த வீடு எவ்வளவு பெரிதாக சௌகரியமாக இருக்கிறது.... என்னதான் நல்ல ஹோட்டல்கள் இருந்தாலும்... வீட்டுக்கு ஈடாகாது. கடந்த ஐந்து நாட்களாகப் பல ஹோட்டல்களில் தங்கி இருந்தேன். எல்லா ஹோட்டல் அறைகளுக்கும் ஒருவித வாசனை இருக்கிறது. கொஞ்சம் சிகரெட், கொஞ்சம் ஊதுவத்தி, வண்ணான் சலவை, கொஞ்சம் சாவு, கொஞ்சம் கண்ணீர் என்ன என்னவோ....உங்கள் அனுபவம் என்ன காயத்ரி?"

அந்த வரிகள் காயத்ரியை அப்படியே ஸ்விட்ச் போட்டாற் போல் தலைகீழாக மாற்றியது.... திடீர் என்று அவள் என்னை நேராகப் பார்த்தாள். புன்னகைத்தாள். "நீங்கள் நீங்கள்..." என்றாள்.

"நான் உமாகாந்த், இது கணேஷ், வசந்த்" என்று காயத்ரியின் நீல நிற நோட்டுப் புத்தகத்தாலேயே அவர்கள் இருவரையும் காட்டினேன்.

"ரத்னா! ரத்னா! என் தலைவலி சரியாகி விட்டது." என்றாள். "உட்கார் சரஸு" என்றாள்....

"என்ன இது திடீர் மாறுதல்?" என்றாள் சரஸு.

உஷாரான கணேஷ், "சில வேளை Depression (சோர்வு நிலையில்) இருப்பவர்கள், ஒற்றைத் தலைவலியில் அவதிப்படுபவர்களுக்குத் திடீர் என்று சிலரைப் பார்த்தால், சில குரலைக் கேட்டால் எல்லாம் விலகிவிடும். மிஸஸ் காயத்ரி! உங்களுக்கு அலர்ஜிக் ஸைன்ஸைட்டிஸ் ஆக இருக்கலாம். செக்–அப் பண்ணுங்கள். இதெல்லாம் கொஞ்சம் காத்திருந்தால் சரியாகிவிடும்." என்றான்.

"ஓ எஸ்! காத்திருக்கத் தயார்... எனக்குப் பளிச்சென்று சரியாகி விட்டது.... இந்திரா இவர்களுக்கெல்லாம் காப்பி கொடுத்தாயா?"

"சாப்பிட்டாயிற்று. நீங்கள் அலட்டிக் கொள்ளாதீர்கள்."

அய்யர் உள்ளே வந்து "ரெடி" என்றார்.

ரத்னா எங்களிடம் பொதுவாக "வருகிறீர்களா? ஒரு தடவை போட்டுப் பார்த்து விடலாம்...."

கணேஷ், "மிஸஸ் காயத்ரி! நீங்கள் போய் உங்கள் அறையில் ரெஸ்ட் எடுத்துக் கொள்ளுங்கள். நாங்கள் போவதற்குள் மறுபடி சந்திக்கிறோம்," என்றான்.

"நானும் உங்களுடன் வருகிறேனே!" என்றாள்.

ரத்னா, "வேண்டாம் காயத்ரி. நாங்கள் பிஸினஸ் விஷயமாகப் பேசப்போகிறோம்!" என்றான்.

"சரி, போவதற்குள் என்னை நிச்சயம் பார்த்துவிட்டுப் போக வேண்டும் என்ன?"

"கட்டாயம்! வித் ப்ளெஷர்!" என்றான், வசந்த். "சார்மிங் லேடி" என்றான். ஏரால் ஃப்ளின் மாதிரி முதுகு வளைந்து அவளுக்கு வழி விட்டான்

"சரஸு நீயும் வருகிறாயா?" என்றான் ரத்னா.

"வருகிறேன்" என்றாள்.

நாங்கள் அந்த வீட்டின் பின்புறத்துக்கு அழைத்துச் செல்லப் பட்டோம். மரச் சோலைக்கு இடையில் அஸ்பெஸ்டாஸ் போட்டு, தட்டி மறைத்து ஒரு ஷெட் போல இருந்தது. அதன் மரக் கதவைத் திறந்து முதலில் அய்யர் போக அப்புறம் நான், கணேஷ், வசந்த், ரத்னா, சரஸு...

உள்ளே ஏறக்குறைய காலியாக இருந்தது. நாற்பதடிக்குப் பதினைந்தடி ஹால்போல் இருந்தது. ஓரத்தில் பலவித டிரங்குப் பெட்டிகள் தெரிந்தன. ஸ்பிரிட் வாசனை வந்தது. ஏர் கண்டிஷனரின் மூஞ்சி தெரிந்தது.

நடுவே ஒரு வெண்திரை நின்றது. நீட்டப்பட்ட அந்தத் திரை குடைபோல் மூடிப் பொட்டலமாக அடக்கிவிடக்கூடிய நவீனமான திரை. திரைக்கு எதிரே தூரத்தில் அறையின் முடிவில் ஒரு சிறிய சினிமா ப்ரொஜெக்டர் இருந்தது.

ஏழெட்டு இரும்பு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. நாங்கள் உட்கார்ந்தோம்.

"டெவலப்பிங் எல்லாம் எங்கே செய்கிறீர்கள்?"– கணேஷ்.

"எல்லாம் இங்கேதான். எல்லாம் அய்யர்! முன்காலத்தில் நியுடோனில் இருந்திருக்கிறார். கில்லாடி.... M.K.T.யுடன்(எம்.கே. தியாகராஜ பாகவதர்)யுடன் ஆக்ட் கூடப் பண்ணியிருக்கிறார். ஒரு சின்ன லாபரட்டரி வைத்திருக்கிறோம்.... மொத்தம் எங்கள் நாலைந்து பேருக் குத்தான் தெரியும். வெளியிலிருந்து சிலசமயம் வரவழைத்துக் கொண்டால் பின்பக்கத்து வழியாகத்தான் கூட்டிக் கொண்டு வருவோம். இந்த வீட்டில் நடப்பது ஒருவருக்கும் தெரியாது...."

"ஆரம்பிக்கலாமா?" என்றார் அய்யர்.

"ஆரம்பிக்கலாம்!"

விளக்கு அணைந்து சற்று நேரம் இருட்டு. விர்ர்ர். தலைகீழாக 9,8,7,6,5, பளிச்–பளிச்.

ஒரு மூடிய கதவு...அதை நோக்கிக் காமிரா மெதுவாக அணுக, கதவின் ஒரு சிறிய பகுதியில் ஒரு சதுரமான இடம் தனியாகப் பெயர்ந்து கொள்கிறது. பெயர்ந்த கறுப்பினுள் ஒரு துவாரம் தெரிகிறது. அதனுள் காமிரா எட்டிப் பார்க்க, உள்ளே நேராக ஒரு பெண் தன் உடைகளை நிதானமாகக் களைந்து அவைகளைச் சுருட்டி ஒரு பிளாஸ்டிக் பக்கெட்டில் போட்டுவிட்டு, கெய்ஸரிலிருந்து வரும் வெந்நீரைப் பதம் பார்த்துவிட்டுத் திரும்புகிறாள்....காயத்ரி....

"மை காட்" என்றேன்.

"மெல்ல! மெல்ல!" என்றான் கணேஷ்.

அந்தப் படத்தில் ஒலிப்பதிவு இல்லை. படக் கோர்வையும் இல்லை. ஆனால் அந்தப் படத்தின் காட்சிகளை நான் முன்பே பார்த்திருந்த பரிச்சயம் நிச்சயம் இருந்தது.

இந்திரா படுக்கையின் நட்ட நடுவே உட்கார்ந்திருக்க அவளுக்கு ஒவ்வொரு நகையாக அணிவிக்கப்பட்டு, அவளை மெதுவாக நிற்க வைத்து அவளருகில் மெல்ல வந்து....

ஓ எஸ்! எல்லாம் காயத்ரியின் நோட்டுப் புத்தகத்தில் படித்திருக்கிறேன். இப்போது புரிகிறது. திரைப்படம் எடுத்திருக்கிறார்கள். சில பிரத்தியேக ரசிகர்களுக்காக, பிரத்தியேக அறையில் காட்டப்படும் பிரத்தியேகப் படங்கள்.... ரத்னா தான் கதாநாயகன்! இதோ தெரிகிறானே. சுத்தமாக சவரம் செய்துகொண்டு, சிரித்துக் கொண்டு.... கீழே பார்க்க காயத்ரி. அவர்கள் படம் எடுப்பதை அறியாத உள்ளுணர்வில் இனம் புரியாமல் சந்தேகித்த காயத்ரி.... அந்த நிர்மலா என்கிற பெண்ணைக் கூட முதலில் உபயோகித்திருக்கலாம். அவளுக்கு விஷயம் தெரிந்து போய் சித்தப்பிரமை ஏற்பட்டிருக்கலாம் அல்லது ஏதாவது கொடுத்து ஏக்கச்சக்கமாக ஆகியிருக்கலாம்.

அடுத்த கதாநாயகி காயத்ரி. படுக்கையிலும் பாத்ரூமிலும் அவள் படம் எடுக்கப்பட்டிருக்கிறாள்....

சரஸ்வதி, ரத்னா, அய்யர், இந்திரா... இந்த விசித்திரமான திரைப்பட கோஷ்டி.... அய்யர் காமிரா; ரத்னா கதாநாயகன்... சரஸுவும் இந்திராவும் வித்தியாசத்திற்கு. மாறுதலுக்கு மற்ற பெண்கள். திரைக்கதை வேண்டாம். வசனம் வேண்டாம். ஒரு **Bell Howel camera** (காமிராவின் பெயர்) போதும். கையில் பிடித்துக்கொண்டு எடுத்தால் அச்சாக வரும். ட்ரீம்லாண்ட் போன்ற ஹோட்டல்கள் காசு கொடுப்பார்கள்.... அன்னியச் செலாவணி நிறையக் கிடைக்கும். வாத்ஸ்யாயனர் நாட்டிலிருந்து வந்த சரக்கு என்றால் மவுசு இருக்காதா? மைகாட்! காமரா அப்படியே மல்லாந்த, களைந்த காயத்ரியின் மேல் **Zoom in** (அண்மையில் பெரிதாக) ஆகிறது.

கணேஷ் என்னிடம் இரகசியம் பேசினான். நான் மெதுவாக ஒரு பக்கமாக நழுவி அந்த வீட்டின் கதவுபக்கம் சென்று தாழ்ப்பாளைத் திறந்து வெளியே வந்தேன். சுவர்க் கோழிகள் ஓவர்டைம் பண்ணிக் கொண்டிருந்தன. மெதுவாக அந்த வீட்டின் ஹாலை அடைந்து மாடிப்படியைக் கடந்து, "காயத்ரி காயத்ரி" என்றேன். அந்த அறைக் கதவு உடனே திறந்தது. "வந்துவிட்டீர்களா?" என்றாள் படப்படப்புடன் "அவர்கள் எல்லாம் எங்கே?"

"ஷெட்டில் இருக்கிறார்கள். நான் உன்னிடம் செய்தி சொல்ல வந்தேன். உன் நோட்டுப் புத்தகத்தைப் படித்தேன்... நீ எங்களுடன் வருகிறாயா?"

"வருகிறேன். வருகிறேன்! என்னை இந்த இடத்திலிருந்து எப்படியாவது அழைத்துச் சென்று விடுங்கள்.... அவர்கள் என்னை வைத்துக்கொண்டு என்னமோ செய்கிறார்கள். தினம் தினம் மருந்து கொடுக்கிறார்கள். கண்ணைச் செருகுகிறது. அந்த சரஸு, இந்திரா, ரத்னா, அய்யர் எல்லோரும் ஒரே கோஷ்டி. என்னை என்னமோ செய்கிறார்கள்...."

**(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ். கண்ணன்,.
வயது: 20
முகவரி: 156, மலிபன் வீதி, கொழும்பு-11.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எம். கார்த்திகா,
வயது: 17
முகவரி: 42, சுங்க வீதி, திருகோணமலை.
பொழுதுபோக்கு: ரீ.வி., புத்தகம்.



பெயர்: ஏ. தேவானந்த்,
வயது: 22
முகவரி: P.O.BOX-921, SALALAH-211, OMAN.
பொழுது போக்கு: வானொலி, நாவல்.



பெயர்: ஐ. அப்துல் அஸீஸ்,
வயது: 20
முகவரி: கணேவல்பொல, கெக்கிராவை.
பொழுது போக்கு: வானொலி, ரீ.வி.



பெயர்: எஃப். பர்ஸானா பாஸிக்,
வயது: 17
முகவரி: 118/1, குறுந்து கொகல, அக்குறணை.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: என். ஹசன்,
வ்யது: 21
முகவரி: P.O.BOX - 11709, DUBAI, U.A.E.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். இல்யாஸ்,
வயது: 24
முகவரி: 165, ஓஸ்மன் வீதி, சாய்ந்தமருது-5.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.

பெயர்: எம். ரமீஸ்,
வயது: 20
முகவரி: 35, ஹனீபா ஹாஜியார் வீதி, காத்தான்குடி-4.
பொழுதுபோக்கு: பேனா நட்பு, கிரிக்கெட்.

பெயர்: கே. சிவலோகநாதன்,.
வயது: 26
முகவரி: BORNEO STR-14, 6045 VX ROER MOND, NEDERLAND.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: கே. புஷ்பராஜ்,
வயது: 18
முகவரி: டெல்வின் 'ஓ' பிரிவு, இறக்குவானை.
பொழுது போக்கு: கதைப் புத்தகம், பேனா நட்பு.

பெயர்: எம். தீனதயாளன்,
வயது: 21
முகவரி: ஸ்டேசன் கடை, மவுண்ட் ஜீன், வட்டவளை.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எல். சலீம்,
வயது: 24
முகவரி: 117, பிரதான வீதி, அனுராதபுரம்,.
பொழுது போக்கு: பத்திரிகை.



படிப்பகம்

www.padippakam.com

ஆணின் முகம் என்பது திருமணத்துக்கு முன்பு வரை ஒன்றாகவும், திருமணத்துக்குப் பிறகு வேறாகவும் இருப்பதைப் பெண்கள் பெரும்பாலும் அறிந்து கொள்ளத் தவறுகிறார்கள். காதலிக்கும்போது கட்டப்பட்ட பொட்டலத்துக்குள் என்ன இருக்கிறது என்று பார்க்கிற ஆவலும், அது நிறைவேறும்வரை பொறுமை கொள்வது என்கிற சாமர்த்தியமும் ஆண்களுக்குச் சுபாவமாகவே கை வந்திருக்கிற கலையாக இருக்கிறது.

**இதுவரை**

சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்துவைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப்பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான்.

பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.

கணேஷனும் தேடிவருகிறான். கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.

உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்து சேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா.

கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள். கணேசனுக்கும் தனக்குமிடையே காதல் மலர்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறாள்.

**இனி....**

சுமதி ஒரு மென்மையான சந்தர்ப்பத்தில் அவனைத் திருமணம் செய்து கொள்வது என்று முடிவெடுத்தாள். அதாவது, நரகத்தின் கதவைத் தானே தட்டுவது என்று முடிவெடுத்து விட்டாள்.

கல்பனாவின் வீட்டுக்கு ஒரு அழகிய தோட்டம் இருந்தது. ரொம்பச் சிக்கனமான தோட்டம். முன் வாசலில் ஒரு வேப்பங்கன்று. அதை ஒட்டி ஒரு மல்லிகைப் பந்தல். வெள்ளை வெள்ளியாக மொக்கு விட்டு அது சிரிக்கும்.

'செடிகள் பேசும்' என்பாள் கல்பனா. மரம், நட்சத்திரங்கள், கொடிக்கயிறு எல்லாமும் அவளிடம் பேசும் என்பாள்.

"என்ன கற்பனைடி உனக்கு சரியாகத்தான் உனக்கு கல்பனா என்று பெயர் வைத்திருக்கிறது," என்பாள் சுமதி.

அப்புறம், அந்தி மந்தாரை, மஞ்சள் கனகாம்பரம், கொத்தமல்லி, பட்டு ரோஜா, திடீரென்று சப்பாத்தி என்று முள்ளாய், ஒரு விநோதமான கலவை. ஒழுங்கில்லாமல் ஒரு அவியல். "சரி, ஒழுங்கென்றால் என்ன சொல்," என்பாள் கல்பனா. என்ன பதில் சொல்ல முடியும்?

வீட்டுக்குள் சங்கடமாக இருக்க நேரும் போதெல்லாம் வாசலுக்கு வந்து நிற்பாள் சுமதி. அப்படி நின்ற ஒரு பகல் பொழுதில்தான் பக்கத்து வீட்டுக் காம்பவுண்டுக்குள் அவள் பார்க்க நேர்ந்தது.

வெள்ளரிப் பழம் மாதிரி ஒரு குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு அதன் தாய் அதற்குச் சோறு ஊட்டிக் கொண்டிருந்தாள். குழந்தை 'ஆனாம், ஆனாம்' என்று தலையசைப்பதும், தாய், 'ரவ்வோண்டு, ரவ்வோண்டு' என்று சொல்லியபடி, அதற்குச் சோறூட்டுவதுமாக இருந்தாள்.

என்ன ரம்யமான காட்சி? சுமதி மெய்மறந்து நின்றாள். குழந்தைகளின் அகராதியே தனி. அது தெருவில் ஓடும் நாயைக் காட்டும். தாய் அதைச் சூப்பிடுவாள். நாய்க்குச் சோற்றைப் போடப் போவதாய் குழந்தைக்குச் சொல்வாள். குழந்தை வேண்டாம் என்று மறுக்கும். தனக்குச் சோறு கிடைக்காது என்று நாயக்கும் தெரியும். ஆனாலும் குழந்தைக்காக அது வாலை ஆட்டும். அது ஒரு உலகம். அது வேறு உலகம்.

சுமதி மெய்மறந்து நின்றாள். அவளுக்கும் இரண்டு குழந்தைகள் இருந்தார்கள். சென்றமுறை அம்மா, இவளுடன் வந்து தங்கியிருந்தபோது, கணேசன் மனைவியை இம்சித்த அரக்கத்தனத்தைக் கண்டு 'குழந்தைகளையாவது காப்பாற்ற வேணுமடி' என்று அவைகளை அழைத்துக் கொண்டு ஊர் போய்ச் சேர்ந்துவிட்டாள்.

அந்த இரண்டு குழந்தைகள்! ஒன்பது தொடும் ரகு. ஒண்ணரை அடி அளவுக்கு வளர்ந்திருக்கிற ரோஜாப்பூ மாதிரி வித்யா.

ஆறு மாதங்களுக்கு முன்னர் சுமதி, குழந்தைகளைப் பார்க்கவென்றே அம்மா வீட்டுக்குப் போயிருந்தாள். காவிரியில் இருந்து கிளை பிரிந்த ஓர் ஆற்றங்கரையில் அம்மா வீடு இருந்தது.

ஆறு வறண்டிருந்தது. ஆற்றுப் பாலத்தைக் கடந்து தான் ஊருக்குள் பிரவேசிக்க வேண்டும். பாலத்தில் நடக்கையில், சுமதிக்கு இளம்பருவத்து நினைவுகள் முட்டி மோதிக் கொண்டு கிளர்ந்தன.

ஆறும் தாயைப் போலத்தான். அந்த ஆறு அவளை வளர்த்ததும் நிஜம். ஆற்றுப் பெருக்கற்று அடி சுடும் அந்நாளிலும், ஊற்றுப் பெருக்கால் உணர்வூட்டிய ஆறு அது அதன் மடியில், அவளும் கல்பனாவும் ஓடிப்பிடித்து விளையாடி இருக்கிறார்கள். பௌர்ணமிகளில் ஊர்ப் பெண்களோடு சேர்ந்து பலின் சடுகுடு ஆடியிருக்கிறாள். வளர்ந்த பருவத்தில், மல்லிகையை நிகர்த்த நிலா ஒளியில், ஒருவர் மனசை ஒருவர்க்குத் திறந்து காட்டிக் கொண்டது இந்த ஆற்றின் மடியில்தான்.

ஆற்றில் நீரோடும் காலத்தில், வைகறையிலும், இருட்டிய பிறகும் மாற்றுத் துணியுடன் வந்து, முங்கிக் குளித்தது இங்குதான். குளித்தல் அழுக்கைப் போக்கிக் கொள்ளவா?

குளிப்பதால் மானுடரின் அழுக்குப் போய்விடுகிறதா? போய்விடும் எனில், மனிதர்க்குச் சிறைச்சாலையும், நீதி மன்றமும் என்னத்திற்கு? குற்றாலம் அருவி ஒன்று போதாதா?

வீட்டை மிதித்ததும் அவள் மனம் துள்ளியது. தாய் வீடல்லவா? தாய் வீடு என்பது தன் வீடல்லவா?

அம்மா, முறத்தில் அரிசி புடைத்துக்

**—பிரபஞ்சன்—**

கொண்டிருந்தாள். அந்த. வாசலை ஒட்டிய, தூணில் சாய்ந்து கொண்டுதான் அம்மா எப்போதும் உட்காருவாள். அன்றும் அப்படித்தான் அங்குதான் அமர்ந்திருந்தாள்.

"அம்மா" என்றாள் சுமதி.

நிமிர்ந்து பார்த்த அம்மா, புருவம் மேலேற, "வாடி பொண்ணே" என்றாள். மனம் நிறைந்து சிரித்தாள்.

மேலே கடைவாய்ப் பக்கம் இரண்டு பற்கள் விழுந்திருந்தன அம்மாவுக்கு. முதுமை அவள் முகத்தில் குடியேறி இருந்தது. அம்மா பக்கத்தில், பாட்டி அரிசி புடைக்கும் அதிசயத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தது வித்யா.

அம்மாவைக் கேள்விக் குறியோடு பார்த்தது.

"வாடி வித்து..." என்று கையை நீட்டியபடி குழந்தையை நோக்கிச் சென்றாள் சுமதி. குழந்தை பயந்து, பாட்டியை ஒட்டிக் கொண்டது. இருட்டில், முகத்தில், வௌவால் வந்து மோதியது மாதிரி இருந்தது சுமதிக்கு.

அதிர்ந்து போய் நின்றாள். பெற்ற குழந்தை பெற்றவளை அடையாளம் மறந்துவிட்டிருந்தது. குழந்தைக்கென்று, சாவி கொடுத்தால், மேளம் அடிக்கும் கரடி பொம்மை வாங்கிச் சென்றிருந்தாள் அவள்.

பையைத் திறந்து பொம்மையை எடுத்துச் சாவி கொடுத்து குழந்தையின் முன் வைத்தாள். குழந்தை பாட்டியைக் கேள்விக் குறியோடு பார்த்தது. பிறகு பாட்டியின் காதோரம் நெருங்கி, "பாத்தி....ஆரு இந்த அக்கா?" என்றது.

நெஞ்சம் துடிதுடிக்க, மனசில் இரத்தம் வழிய, உடம்பு குப்பென்று வியர்த்து ஆடை நனைய, அவமானம், ஆதங்கம், கழிவிரக்கம் அனைத்தும் தன் மேல் கவிய, தன்னையே மறந்து போய் நின்றாள் அவள். ஓவென்று மனம் அழுது அரற்றியது!

அம்மா புரிந்து கொண்டாள்.

"ரெண்டு நாள் போனா குழந்தை புரிஞ்சுக்கும். கைகால் கழுவிட்டு வா. காபி போட்டுத் தரேன்..." என்றாள்.

"என் குழந்தை என்னைப் புரிஞ்சுக்க ரெண்டு நாள் வேணுமாம்மா...?" என்றபடி அம்மாவுக்கு முன் அமர்ந்தாள்; அப்படியே தன் முழங்காலில் முகம் புதைத்து அழுதாள்.

தன் தோளில் விழுந்த கையை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள் சுமதி. கல்பனா நின்றிருந்தாள்.

"என்னடி... இங்கே நின்னுட்டு அழுதுகிட்டு இருக்கே...?" என்றாள். அடுத்த வீட்டைப் பார்த்தாள். குழந்தை உண்டு முடித்திருந்தது. அவள் வாயிலும், கன்னங்களிலும் சோறு அப்பிக் கொண்டு இருந்தது. கொலுசு அணிந்த கால்களை உதைத்துக் கொண்டது. அதன் அர்த்தம் 'வீட்டுக்குள் போ' என்பதாம். கல்பனா திரும்பிச் சுமதியிடம் சொன்னாள்:

"ஊருக்குப் போய் குழந்தைகளைப் பார்த்துட்டு வாயேன்."

"நாளைக்குப் போகலாம்னு இருக்கேன். விடுமுறை விஷயமா ஆபீசில் விசாரிக்கணும்..."




அவர்கள் வீட்டுக்குள் நுழைந்தார்கள்....

ரகுவை அவள் பிள்ளையாண்டிருந்த சமயம். நண்பகலில் டாக்டர் அதை ஊர்ஜிதம் செய்தாள். அவள் தாய்மை அடைந்திருந்தாள். இருட்டில், அலறும் கணேசனும் ஒருவரை யொருவர் தேடிக் கொண்டதில் அவர் கண்டு பிடித்தது அது. குளத்தில் முங்கி முங்கி எழுந்ததில் அவர்களுக்கு கிடைத்தது அது. கூடிக் குசுகுசுத்து இருட்டறையில் இட்ட கரு. அவளை அவனுக்கு உணர்த்துகிற அவளுடைய சின்னப் பிரதிமம்.

நடப்பது அறியாமலேயே நடந்து வீடு வந்தாள். வீட்டுக்கும் டாக்டரின் பணிமனைக்கும் தூரம் சற்று ஜாஸ்திதான்.

பணிமனை வாசலிலேயே ஆட்டோவும், ரிக்ஷாக்களும் நிற்கத்தான் செய்தன. ஆனாலும் மனப் பரபரப்பு அவளுக்கு நடக்க வேண்டும் போல் இருந்தது.

அதிக சந்தோஷத்திலும், துக்கத்திலும், அவளுக்கு நடக்க வேண்டும் என்று தோன்றும். வீடு சேர்ந்ததும், மின் விசிறியை வேகமாகச் சுழலவிட்டு சோபாவில் அமர்ந்து கொண்டாள். வியர்த்தது. யாரோ குழலாலும், வயலினாலும், சாரங்கியினாலும் சேர்ந்து செய்த குரலால் 'அம்மா' என்று அழைப்பது போல் இருந்தது. பிரமைதான். 'சும்மா இருடா' என்றாள் மனசுக்குள். நாக்கைக் கடித்துக் கொண்டாள். 'டா' என்றோமே, தன்னை அறியாமல். ஏன் 'டீ'யாக இருக்கக் கூடாது.

எதுவானால்தான் என்ன? என் இரத்தம். இரத்தத்துக்கு ஆண் ஏது? பெண் ஏது? பூவில் தாழ்வேது, உயர்வேது?

சுப்பக்காவைக் கூப்பிட்டு மத்தியானத்துக்குப் பாயசம் பண்ணச் சொன்னாள்.

கணேசனுக்குப் பாயசம் பிடிக்கும்.

ஏன், அவளுக்கும்தான், பாயசம் பிடிக்காத மனிதர் உலகில் யார் இருப்பர்? கோதுமை நிறத்தில் இலையில் இட்டதும் பரவுகிற, பாப்பாக்களின் கண்கள் போன்று விழிக்கிற திராட்சைகளும், அவைகளின் விரல்போலும் முந்திரிப் பருப்புகளும், சின்னச் சின்ன கோலிக் குண்டுகளைப் போல ஜவ்வரிசி மணிகளால் ஆன பாயசம்!

மத்தியானம் கார் வரும் சப்தம் எழுந்ததுமே, எழுந்தோடி வந்து வாசலில் நின்றாள். மறுபடியும் குளித்து ஆடை மாற்றியிருந்தாள். தலை நிறைய மல்லிகையைச் செருகியிருந்தாள். கனகாம்பர நிறத்தில் சேலையும், கன்னங்கரேல் நிறத்தில் ரவிக்கையும் அணிந்திருந்தாள். கண்ணுக்குப் பூசுகிறோம் என்று தெரியாத விதத்தில் மை பூசியிருந்தாள். உதடுகளுக்குச் சாயம் பூசுவதில்லை அவள். இயற்கையாகவே சிவந்த ஆரோக்கியமான உதடுகள் அவளுக்கு.

சிவப்புக் கதவுகள் திறந்ததும், வெள்ளை டியூப் லைட்டுக்கள் பளீரென வெளிச்சம் சிந்துவது மாதிரி, அவள் சிரிப்பு.

கணேசன், அணிந்திருந்த 'சபாரி' ஆடையுடன், நேராக வாஷ் பேசினுக்குச் சென்று கையைக் கழுவிக் கொண்டு உணவு மேசைக்கு வந்தான். சுமதிக்கு லேசாக மனம் வலித்தது உண்மைதான்.

இத்தனை சிரமப்பட்டு, செய்து கொண்ட அலங்காரங்கள் அவளைப் பார்த்து நகைத்தன.

இலையில் பாயசத்தை விட்டாள்.

கணேசன் நிமிர்ந்து அவளைப் பார்த்து, "என்ன இன்னைக்கு விசேஷம்?" என்றான்.

சுமதி, மோதிர விரலாலும் நடு விரலாலும் மாற்றிமாற்றி மேசையின் மேல் கோடு கிழித்தாள்.

"என்னடி சொல்லித் தொலையேன்!"

சுமதி மிக மெதுவாகச் சொன்னாள்.

"இன்னைக்கு டாக்டர் வீட்டுக்குப் போயிருந்தேன்..."

"என்னத்துக்கு? முணுக்குன்னு இருமல் வந்தவுடனேயே, டாக்டரைப் பார்த்து, காசைக் குடுக்காட்டா, உனக்குத் தூக்கம் வராதே..."

"அதில்லை."

"உன் தலை! சொல்லித் தொலைடி, சும்மா எரிச்சல் மூட்டாதே....!"

(தொடர்ந்து வரும்)

# கட்டவிழாத மொட்டுக்கள்...

"எனக்கு கல்யாணம் பண்ணிக்க இஷ்டமில்லை. எல்லோரும் கல்யாணம் பண்ண வேண்டும் என்று கட்டாயமா?"

சுபா சோர்வோடு நடந்து தன் வீட்டை அடைந்தாள். யாரோ பின்னால் வருவது போன்ற ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். யாருமில்லை. கந்தையா அண்ணையின் செவலை மாடு. மொழுமொழு என்று அழகாய் இருந்தது. எலும்பும் தோலுமாய்ப் போனது சுபாவுக்கு ஏனோ வேதனையைத் தந்தது.

வீட்டுவாசல் கதவு திறந்தே கிடந்தது. சுபா மூலையில் செருப்புகளை உதறிப் போட்டாள். 'அலுவல் முடியும்வரை அண்ணன் தம்பி, முடிந்த பிறகு நீ ஆரோ நான் யாரோ?' பழமொழியை எண்ணியதும் என்றுமில்லாத பரிவு செருப்புமேல் வந்தது அவளுக்கே ஆச்சரியம். அரவமின்றி மெதுவாக நடந்து அறையுள் நுழைந்தபோது, ஆபீசில் ரைப்பிஸ்ற் பாமதி கேட்டது ஞாபகம் வந்தது.

"ஏண்டி சுபா! நீ எப்போதான் கலியாணச் சாப்பாடு தரப்போறே?"

"ஏய் உனக்குச் சாப்பாடு வேணும்னா தாறேன். ஆனா, கலியாணச் சாப்பாடு இந்த ஜென்மத்தில உனக்குக் கிடையாது."

"ஏனாம்?"

"எனக்குக் கலியாணம் பண்ணிக்க இஷ்டமில்ல. எல்லாரும் பண்ணித்தான் ஆகணும் என்ற கட்டாயமா?"

சே....நான், பாமதிக்குச் சொன்னது சரிதானா? எவ்வளவு அப்பட்டமான பொய் அது. வேறு என்னதான் சொல்ல முடியும்? மனசிருக்கு வழிதான் இல்ல.... பெத்தவங்கட பிடிவாதத்தால் இப்படியாச்சு என்று எப்படித்தான் சொல்வது? தனக்குள் தானே கேள்வியும், பதிலுமானாள் சுபா. எதையோ நினைத்துக் கொண்டவள் கண்ணாடி முன்னால் நின்று தன்னை அதிசயமாகப் பார்த்தாள். அந்த அழகான கூந்தலில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெள்ளி முளைத்ததுபோல் நரை; தாடையிலும் கழுத்திலும் சுருக்கம். திடீரென்று அவள் பார்வை எதிர்ச்சுவரில் மாட்டியிருந்த போட்டோவில் பதிந்தது. பிரபல நர்த்தகி பத்மினிபோல் சுபா அழகாக இருப்பதை இப்போது அவளால் நம்ப முடியவில்லை. அந்த நாட்களில் "நீ பேரழகிடி பத்மினி" என்று எல்லோரும் சொன்னது அவள் காதில் இனிமையாகக் கிசுகிசுத்து மறைந்தது. சுபா உடைகூட மாற்ற மறந்தவளாய் கட்டிலில் நீட்டி நிமிர்ந்து படுத்தாள். அவள் பார்வை எங்கோ நினைவுகளைத் துளாவியது.

"அம்மா, நான் அன்ரனியைத்தான் கலியாணம் பண்றதா முடிவு பண்ணிட்டன்."

"நீ என்னதான் சொன்னாலும் உன் அப்பா இதுக்கு ஒருபோதும் சம்மதிக்க மாட்டார்."

"அவர் ரொம்ப நல்லவரம்மா. சீதனங்கூட வாங்க மாட்டார். உயர்ந்த உத்தியோகத்தல இருக்கார். இப்படியொரு சம்பந்தங்கிடைக்க நீங்க குடுத்து வைக்கணும்."

"அவன் நல்லவனோ, கெட்டவனோ, சீதனம் வாங்குவானோ, இல்லியோ அவன் ஒரு கிறிஸ்தவன். பரம்பரையான இந்து குடும்பத்தில் இப்படிக் கலப்படம் பண்ணாதே. உன் அப்பாக்குப் பிடிக்காத எதுக்கும் சரிபோடும் பழக்கம் எனக்கில்லை. நாங்க போட்ட கோட்ட நீ தாண்டிறதாயிருந்தா முதல்ல எங்க பிணத்தைத் தாண்டு."

சுபா நினைவுகளில் வெறுப்போடு புரண்டபோது. அன்ரனி அவள் நெஞ்சில் அவசரமாக நுழைந்து கதை பேசினான்.

"சுபா எனக்கு வார்த்தை ஜாலங்கள் தெரியாது. நேரடியாகவே சொல்கிறேன், நான் உன்னைக் காதலிக்கிறேன். கலியாணஞ் செய்துக்கவும் ஆசைப்படுறன். உன் வீட்டில் எதிர்ப்பு என்கிறாய். எப்படி நம்ம கலியாணம் நடக்கும்? நான் என் அம்மாவைச் சமாளித்து விடுவேன்... நீ?"



"எனக்கு வழி தெரியலியே?"

"ஒரே வழி- பதிவுத் திருமணம் செய்ய என்னுடன் வந்து விடு!" சுபா அன்ரனியின் கைகளை இறுகப் பற்றினாள்.

"சுபா பயப்படாதே! நம்மைப் பொறுத்த வரை இந்த வழி நல்ல வழி. இதில் அவசரம் கூடாது. பந்து உன் பக்கம் தான்!" மாதம் ஒன்று மௌனத்தில் கரைந்தது.

ஒரு நாள்...."

ஆபீசில் யாருமில்லை. அன்ரனி சுபாவை நெருங்கினான். "காயா? பழமா?" கண் சிமிட்டினான் அவன்.

"காய்தான். என்றைக்குமே என்னால் கனியாக முடியாதுங்க. உங்களையும் மறக்க முடியல்ல; பெத்தவங்களையும் மீற முடியல." அவள் ஓவென்று அழுதாள். அன்றுதான் அவள் அன்ரனியைக் கடைசியாகச் சந்தித்தது. ஆறு ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்வுகளை மீட்டுப் பார்த்த சுபாவின் கண்களில் இருந்து வடிந்த நீர் பொட்டுப் பொட்டாகத் தலையணையில் உதிர்ந்தது.

**ரூபராணி**

இப்போது.... அன்ரனியின் கதிரையில் பரசுராமன். அன்ரனி அலைகடலுக்கப்பால் சென்று விட்ட செய்தி சுபாவின் இதயத்தைக் கசக்கியது.

'ஒரு பெண்ணுக்குக் கலியாணமாக வரதட்சணை மட்டுமே தடையில்லை. பெற்றாரின் பிடிவாதமுந்தான்' என்று சத்தம் போட்டுச் சொல்லவேண்டும் போலிருந்தது சுபாவுக்கு. ஆனால் அவளால் சொல்ல முடியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# அட்வைஸ்

**13 வருடங்களுக்கு முன்னர் ஃபிரான்ஸ் போயிருந்த நண்பன் குமார் வருகிறான்...**



## சுரேன் பரமேஸ்வரன்

ஏசியின் உபயத்தில் இதமான குளிர், பளிச்சென்று துடைத்தாற் போன்ற கட்டிடம், வண்ணமயமான மின் விளக்குகள், நாகரிகமான மனிதர்கள், இருந்தாற்போல் குறுக்கும் நெடுக்குமாக நடை பயிலும் விமான தேவதைகள், விமான நிலையம் ஒரு குட்டித் தேவலோகம் தான்.

உலகம் முழுவதுமே இப்படியொரு சூழலைக் கொண்டிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். பல்கலைக்கழகத்தில் பொதுவுடமைக் கருத்துக்களில் ஊறிப்போனவன்தான். பின்னர் குழந்தை, குட்டி என குடும்பமாகியதும் நான், எனது என்ற சராசரி வட்டத்துக்குள் வந்துவிட்டேன். ஆங்கில, சிங்கள மொழிகளில் மட்டும் அறிவிப்புக்களைச் செய்யும் பெண்மணி என்னை யதார்த்த இலங்கைக்கு கொண்டு வந்தாள்.

குமார் வரும் விமானம் தரை தொட்டுவிட்டது என்பதுதான் அறிவிப்பு. 13 வருடங்களுக்கு முன் ஃபிரான்சுக்குப் போய்ச் சேர்ந்த நண்பன், மச்சான் குமார் இன்று வருகிறான். பள்ளிப்பருவத்தில் மிக நெருக்கமான தோழன். குமாருக்கு படிப்பு மட்டும் ஏறவில்லை. அக்காலத்தில் அவனுக்கு நான் நிறைய அட்வைஸ் செய்வேன். கல்விதான் நல்லதொரு வாழ்க்கையை அமைத்துத் தரும் என நான் ஓதியதையெல்லாம் ஒரு காதால் கேட்டு மற்றக்காதால் விட்டுவிடுவான்.

நான் பல்கலைக்கழகத்தில் கலைப் பீடத்துக்குத் தெரிவானேன். குமார் நாட்டு நிலைமையை காரணம் காட்டி ஃபிரான்சில் அகதியாகப் புகலிடம் தேடிக்கொண்டான். 13 நீண்ட வருடங்கள் கொழும்பில் தனியார் கம்பனியொன்றில் வேலைக்குச் சேர்ந்து சிரேஷ்ட உத்தியோகத்தர் நிலையிலிருந்தேன். கலியாணம் காட்சியாகிவிட்டது. அம்மா பார்த்து தெரிந்தவளையே சீதனம் வாங்கிக் கொண்டு கட்டி மத்தியதர வர்க்க ஆண் மகனாக ஒழுங்காக(?) குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறேன்.

குமார் பெட்டிகளைத் தள்ளிக்கொண்டு வெளியே வந்தான். ஆரத்தழுவிக் கொண்டோம். ஃபிரான்சின் பொருளாதார செழுமை, காலநிலை யாவும் குமாரில் பிரதிபலித்தது.

நான் வாடகைக்கு அமர்த்தி வந்திருந்த வேனில் ஏறி வெள்ளவத்தை நோக்கிப் பயணமானோம். குமாரின் அம்மா, தங்கை, தங்கையின் கணவன் வெள்ளவத்தையில் இருந்தபோதும் என்னை மட்டுமே விமான நிலையம் வரும்படி எழுதியிருந்தான்.

"மச்சான், நாட்டு நிலைமை எப்பிடி?" குமாரின் கேள்வி.

"நிச்சயமற்ற நிலைமைதான்!"

"பயணம் எப்பிடி?"

"பிளேனுக்குள்ளை உட்காந்திருக்கிறது சரியான அலுப்பு மச்சான்."

ஃபிரான்ஸ் வாழ்க்கை பற்றியும் விவரித்தான்.

"ஃபிரான்சிலை என்ன வேலையடா செய்யிறாய்? ஒரு கடிதத்திலையாவது குறிப்பிட்டு எழுதாம விட்டுட்டாய்?"

"ஒரு வேலையிலை நிரந்தரமாக இருந்திருந்தாத்தானே குறிப்பிட்டு எழுதுறதுக்கு? மாறி மாறி பல வேலைகள்." இப்ப விதைகள் பக்கெட் பண்ற கம்பெனியொன்றிலை வேலை. நான் செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவுதான்; மெசின் சுவிட்சைப் போட்டுட்டு பக்கத்திலையே உக்காந்திருக்கிறது."

"மெசின் பழுதாய்ப் போனா?" நான் கேட்டேன்.

"பழுதாய்ப் போனா, போய் டெக்னீஷியனைக் கூட்டிக் கொண்டு வரவேணும்."

"எவ்வளவு சம்பளம்?" அநாகரிகமான கேள்விதான். நெருக்கமான நட்பு என்பதால் கேட்டது தவறாகத் தோன்றவில்லை.

"எழுபத்தையாயிரம் ரூபாய், இலங்கை காசுக்கு. மச்சான் உதுவும் ஒரு உத்தியோகமெண்டே யோசிக்கிறாய்? எங்கடை கொலேஜ் பிரின்சிபல் லிங்கத்தார் ஃபிரான்சிலை என்ன செய்யிறார்? பெட்ரோல் நிலையத்திலை அக்கவுண்ட்ஸ் கிளாக்கா இருக்கிறார். சம்பளத்தைப் பார்; உத்தியோகத்தைப் பார்க்காதை!"

முழுவகுப்பும் மூச்சுவிடாமல் கேட்கும், பிரின்சிப்பல் கனகலிங்கம், புவியியல் பாடம் நடத்தினால்! கொலேஜை கட்டியெழுப்பினதே அவர்தான். லிங்கத்தாரின் நிலைமையே இதுதானா?

வெள்ளவத்தையில் குமாரின் அம்மா, தங்கை, கணவன் வாடகைக்கு எடுத்திருந்த வீட்டுக்குப் போய்ச்சேர்ந்தோம். குமாரின் குடும்பத்தாருடன், நெருங்கிய உறவினர்கள், எனது தர்மபத்தினியும் இருந்தார்கள். குமாருக்கு தடல்புடலான வரவேற்புதான். இரண்டு தம்பிகளை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தது. மூன்று தங்கைகளுக்கு சீதனம் கொடுத்து கரையேற்றியது எல்லாமே குமார்தான். கதாநாயகனுக்கான வரவேற்பு இருக்காதா என்ன?

உள்ளே போய் குளித்து உடைமாற்றி வந்த குமார் கேட்டான், "மச்சான்! உன்ரை மனுஷி அம்மாட்ட ஒரே கொம்பிளெயிண்டாம். இரண்டு பொம்பிளைப் பிள்ளையளையும் வைச்சுக்கொண்டு எட்டுவருசமா வாடகை வீடு மாறி மாறி இருக்கிறாயாம்; ஏண்டா வீடு ஒன்று சின்னதா இல்லாட்டி பிளாட்ஸ் ஒன்றாவது வாங்கிற ஐடியா இல்லையே?

காசு பத்தாது எண்டா என்னைக் கேட்டிருக்கலாமே? நீ என்ன சின்னப் பிள்ளையே? பி.ஏ.பட்டத்தையும் பெயருக்குப் பின்னாலை போட்டுக் கொண்டு விளையாட்டே காட்டுற? கெதியா வீடு சரி காணிசரி ஒன்றை வாங்கப்பார்!"

குமார் அட்வைஸ் பண்ணிக்கொண்டிருக்கிறான். என் படிப்பும், என் பட்டமும் என்னைப் பார்த்துக் கேலி செய்வது போலிருந்தது. கூடவே பள்ளிப் பருவத்தில் குமாருக்கு நான் செய்த அட்வைசும் நினைவுக்கு வந்தது.

# இறுதி ஆசைகளின் இறுதி யாத்திரைகள்

வவுனியாவில் எஞ்சினியர் மணிமாறனுக்குச் சொந்தமான அந்த வீட்டில் வருவோரும், போவோருமாகச் சனக்கூட்டம் நிறைந்து காணப்பட்டது. வீட்டு வாசலில் கட்டப்பட்டிருந்த காய் வாழைக் குலைகளும், தோரணங்களும் அங்கு சாவீடு நடந்துகொண்டு இருப்பதைத் தெரியப் படுத்தின. கூடவே விட்டுவிட்டு அடித்துக் கொண்டிருக்கும் சாமேளமும் மணிமாறனின் மாமியார் கனகம்மாவின் இறுதி ஊர்வலம் நடக்கப் போவதை அவ்வூரவர்களுக்கு அறிவித்துக் கொண்டிருந்தது.

மணிமாறனின் மனைவி பிறேமா தனது தாயாரின் இழப்பின் துயரம் தாங்காமல் தவித்தபோதும் அவளின் பார்வை வீட்டு வாசல் பக்கம் அடிக்கடி சென்று திரும்பிக் கொண்டிருந்தது. அவளது மனம் நிலை கொள்ளாமல் யாரையோ எதிர்பார்த்துத் தேடிக்கொண்டிருந்தது.

**"என்னப்பா இந்த கனடாக்காரன், இலண்டன்காரன் எல்லாம் பெண்சாதி பிள்ளைகளோட வந்து மூண்டு நாளாகுது!"**



## திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார்

"தம்பி சிவபாலா! எங்கடை அம்மா தான் நோய்வாய்ப்பட்டு இறந்து போனால் தன்னைத் தன்ரை ஊர்ச் சுடலையிலை தகனம் செய்ய வேணும் எண்டு ஆசைப் பட்டவ. இடம்பெயர்ந்து வந்ததோடை அந்த ஆசையை அவ மறந்து போனா. ஆனால் தன்ரை கடைக்குட்டி தனக்குக் கொள்ளி வைக்கவேணும் எண்டதிலை அவ உறுதியா நிண்டவ தம்பி. இன்டைக்கு நீ யாழ்ப்பாணத்திலை இருந்து வரயில்லை எண்டால் அவவின்ரை ஆசை நிறைவேறாது தம்பி."

பிறேமாவின் இதயம் போடும் இரைச்சல் அவளது செவிகளில் விழ இருக்கவும் பிடிக்காமல், நிற்கவும் பிடிக்காமல் அவள் தடுமாறிக் கொண்டிருந்தாள்.

இலங்கை வானொலியில் ஆறு மணிச் செய்திக்குப்பின் கனகம்மாவின் மரண அறிவித்தல் வாசிக்கப்பட்டது. பருத்தித்துறை அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் கனகம்மா காலமானார். இவர் காலஞ்சென்ற மயில்வாகனத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், பொன்னம்மா, தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா பூபதியம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், ஜெயபாலன் பொறியியலாளர் (கனடா), தவபாலன், கணக்காளர் (லண்டன்), பிறேமா(வவுனியா), சிவபாலன் கணக்காளர் (யாழ்ப்பாணம்), இவர்களின் அன்புத் தாயாரும், வாசுகி (கனடா), வளர்மதி (லண்டன்), மணிமாறன் பொறியியலாளர் (வவுனியா), பாமினி (யாழ்ப்பாணம்) இவர்களின் அன்பு மாமியாருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அறிவித்தல் முடிந்ததும் சாவீட்டிலிருந்த ஒருவர் "இந்த மரண அறிவித்தல் பேப்பரிலையும் வந்திருக்கு. நான் இப்பத்தான் பார்த்திட்டு வாறன்," என்று சிறு குரலில் சொன்னார்.

"மனிசி குடுத்து வைச்சதப்பா. நாலு பிள்ளையளும் ஒண்டுக்கொண்டு குறையாத தகுதி. என்னதான் காசுக்காரர் எண்டாலும் படிப்போடை உள்ள தகுதி எல்லாருக்கும் கிடையாது பாருங்கோ. என்ன இருந்தாலும் பிள்ளையள் அதிஷ்டத்தோடை பிறக்கவேணும்," என்றார் இன்னொருவர் அமைதியாக.

"பாரப்பா லண்டனிலை, கன்டாவிலை இருந்துகூடத் தாயை நினைச்சு ஓடி வந்திட்டாங்கள். இப்பிடியெல்லோ பிள்ளையள் இருக்கவேணும்!" வியப்பு மேலிட வேறொருவர் சொன்னார்.

"எங்களுக்கும் ஒண்டுக்கு மூண்டு பிள்ளையள் வெளிநாடுகளிலை இருக்கிறாங்கள். தற்செயலாக நாங்கள் செத்தமெண்டால் 'துலைஞ்சது சனியன்' எண்டு நிம்மதியாக இருந்திடுவாங்களப்பா!" மற்றுமொருவர் சலிப்புடன் கூறினார்.

"எல்லாம் சரி மனிசிக்குக் கொள்ளி வைக்க வேண்டிய கடைசி மகன் யாழ்ப்பாணத்திலை இருந்து இன்னும் வரயில்லையாம். இண்டைக்குப் பத்து மணிக்குள்ளை வாறதா அறிவிச்சு இருக்கிறானாம்." இன்னுமொருவர் மெதுவாகச் சொன்னார்.

"என்னப்பா இந்தக் கனடாக்காறன், லண்டன்காறன் எல்லாம் பெண்சாதி பிள்ளையளோடை வந்து மூண்டு நாளாகுது. எங்கடை யாழ்ப்பாணத்திலையிருந்து வரத்தான் இப்பிடித் தாமதமோ? இதுதான் எங்கடை தமிழன்ரை தலைவிதியோ?" மற்றுமொருவர் அனுதாபப்பட்டார்.

பிறேமா செய்வதறியாது தடுமாறினாள். கண்ணீர்ப் பூக்கள் கன்னங்களில் மாலையாக அவள் வாசலைப் பார்த்து ஏங்குகிறாள். "தம்பி இண்டைக்கு வருவன் எண்டுதானே ஃபோன் பண்ணினவன். எப்பிடியும் வந்திடுவான்!" தன் மனதைச் சாந்தப்படுத்தினாள்.

தாயின் உயிரற்ற உடலைப் பார்க்கிறாள் அவள். "எங்களை வளர்த்து ஆளாக்கப் பாடுபட்ட உடல், எங்களுக்காக மாடாய் உழைத்து ஓடாய்ப்போன உடல், தன் உடல் நோக உழைத்து எங்களை நோக விடாமல் வளர்த்த உடல்" என்றெல்லாம் சொல்லிச் சொல்லி உள்ளம் குமுறுகிறாள்.

"அப்பா எங்களைச் சிறு வயதுகளில் விட்டிட்டு இறந்து போக அம்மா எங்களுக்காக எத்தனை பாடுபட்டிருப்பா? தோட்டங்களில் வெங்காயம் நட்டுப், புல்லுப் பிடுங்கி, மிளகாய்ப்பழம் ஆய்ஞ்சு, கூலி வேலை செய்து தன் உடலை வருத்தித்தான் எங்களை வளர்த்தவ." அவள் தாங்கொணா வேதனையில் துடித்தாள்.

'தாயின் இரண்டு கைகளையும் எடுத்து முத்தமிடுகிறாள். "எங்களை வாழ வைச்ச கை இது. மற்றவர்கள் எங்களைப் பெருமையாகப் பேசவச்ச கையும் இதுதானே?' அவள் மௌனமாக அழுகிறாள்.

'இப்படிப்பட்ட எங்கடை அம்மாவின்ரை ஆசை நிறைவேறாமல் போகுமோ? தம்பி வராமல் விடுவானோ?' மனம் நிலை கொள்ளாமல் தவிக்கிறாள் அவள்.

நேரம் பன்னிரண்டு மணியையும் தாண்டி விட்டது. திடீரென்று ரெலிஃபோன் மணி ஒலித்தது. மணிமாறன் ஃபோனை எடுத்த போது சிவபாலன் பேசினான். அதுவும் யாழ்ப்பாணத்திலிருந்து.

"அத்தான்! அம்மாவின்ரை கடைசி ஆசையை நிறைவேற்ற நானும், என்ரை மனிசியும் உவ்விடம் வர அனுமதி பெறுவதற்காக அலைஞ்சு திரிஞ்சு ஒருபடி எங்களுக்குக் குடும்பத்தோடை உவ்விடம் வருவதற்கு அனுமதி வழங்கினார்கள். பிளேனிலை ஏறமுன் உங்களுக்கு நாம் உவ்விடம் வருவதாகப் ஃபோன் செய்தேன். ஆனால் நாங்கள் பிளேனிலை ஏறும் நேரம் எங்கடை பதிவிலை ஏதோ பிழை எண்டு சொல்லி நாங்கள் உவ்விடம் வாற அனுமதியை ரத்துச் செய்து போட்டார்கள். அண்ணன்மார் இருவரையும் அம்மாவுக்குக் கொள்ளி வைக்கச் சொல்லுங்கோ. நான் குடுத்து வைச்சது இவ்வளவுதான்." துயரத்தோடு சொல்லி முடித்தான்.

"நான் சொன்ன நேரம் நீங்கள் கேட்கயில்லை. இப்ப பார்த்தியளே!" என்ற அந்த ஊர்ப்பெரியவர் "சரி தம்பிமாரே இனிமேலும் ஏன் தாமதம்? கெதியா வாருங்கோ. ஐயரும் எவ்வளவு நேரமெண்டு காத்திருக்கிறது?" என்று அவசரப்படுத்தினார்.

மூத்த மகன் ஜெயபாலனும் இரண்டாவது மகன் தவபாலனும் மொட்டை அடித்து, தலையிலே தோய்ந்து, வெள்ளை வேட்டி கட்டி பூணூல் தரித்துத் தம்மை ஆளாக்க மெழுகுவர்த்தியாய் உருகிப் போன தம்மைப் பெற்ற தாய்க்கு இறுதிக் கிரிகைகளைச் செய்வதற்கு ஆயத்தமாகினர்.

எதையுமே கவனிக்காதவளாகப் பிறேமா அனலிடைப் பட்ட புழுவாகத் துடிதுடித்தாள். "அம்மா நீ என்ன பாவம் செய்தனி? உன்ரை விரல்களால் அளைந்து அளைந்து ஒழுகிய உன் பிறந்த பொன்னாட்டு மண்ணில் உன் உடல் எரியவில்லை. உன்ரை கடைசி மகன் உனக்குக் கொள்ளி வைக்க வேணும் எண்டு ஆசைப்பட்டாய். அந்த ஆசைகூட நிறைவேறமுடியாமல் போய்விட்டதம்மா!" அவளின் தவிப்பை யாரும் சட்டை செய்ததாகத் தெரியவில்லை.

நீண்ட நாட்களின் பின் வேணியின் கடிதம் கிடைத்ததும் மனதுக்குள் மகிழ்ச்சிப் பூக்கள் பூத்தன. அவள் என் நீண்ட காலத் தோழி. பாடசாலை நாட்களில் ஏற்பட்ட நட்பு. இன்று அவள் என்னைப் பிரிந்து கண் காணாத தேசத்தில்... இல்லையில்லை, வடபுலத்தில்! கடிதத்தைப் பிரித்ததும் கடந்த கால இனிய நினைவுகள் மனதுள் தாமாக மலர்ந்தன. அவளும் அதையே மீட்டியிருந்தாள். பாடசாலையில் போட்ட கூத்துக் கும்மாளங்கள்.... செய்த குறும்புகள்.

'நினைவுகள் பசுமையானவை. இலைகளெல்லாம் உதிர்ந்து போனாலும் வேர்களைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கிற விருட்சம் மாதிரி, மனிதர்கள் பழைய நினைவுகளைப் பத்திரப் படுத்துகிறார்கள். நினைத்துப் பார்க்கையில் நிகழ்காலத்தின் இன்பங்களைவிட, கடந்த காலத்தின் சோகங்கள் சுகமானவை.'

நான் எங்கோ வாசித்த வரிகள் நினைவென்னும் ஏணிவழியே இறங்கி வந்து இதயத்தை மீட்டின. வேணி இங்கு சித்தி வீட்டில் தங்கியிருந்து வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தாள். கூடவே அவளது அண்ணன் ரகுவும். பெற்றவர்கள் இருவரும் பிறந்து வளர்ந்த மண்ணைவிட்டுப் பிரிந்து வர மறுத்து விட்டனர் என்று கூறி பிரிவை நினைத்து அடிக்கடி வருத்தப்பட்டுக் கொள்வாள். இன்றிருக்கும் சூழ்நிலையில் அடிக்கடி சென்றுவரவா முடியும்? ரகுவும் அவளைப் போலவே. ஆனால் விளையாட்டுப் புத்தி அதிகம். தனியார் கம்பனியொன்றில் பொறுப்பான பதவி. சிரித்துப் பேசுவான். சிரிக்க வைப்பான். மென்மையான சுபாவம்.

அவர்களது அம்மாவுக்கு சுகமில்லை. வருத்தம் என இரண்டு மாதகாலத்துக்குப் பின் கிடைத்த கடிதம் கூறியதும் வேணியும் ரகுவும் ஒருங்கே அதிர்ந்து போனார்கள். "வயதான காலத்தில் அவர்களை நாங்கள் தானே பார்க்க வேண்டும். வேறு யார் இருக்கிறார்கள்?" அங்கலாய்த்தாள், அழுதாள் வேணி. "இங்கே வந்துவிடும்படி சொல்லேன்," என்றேன். ரகுவும் தலையாட்டினான். "இங்கே வரச்சொல்லி கடிதம் போடுவோம். இல்லாட்டி போய் கூட்டிக் கொண்டுவரணும்." திட்டமிட்டார்கள். அம்மாவோ உறுதியாய் மறுத்து விட்டாராம். வேணி வேலையை உதறிவிட்டுப் போய் விட்டாள். அம்மா சில மாதங்களில் இறைவனடி சேர, ரகுவும் போய் விட்டான். "அப்பாவின் இறுதி காலத்திலாவது பக்கத்திலிருந்து பார்த்துக் கொள்ள வேணும். வேணி மட்டும் தனியே என்ன செய்வாள்? நான் போனாத்தான் சரி." மெதுவாய் ஆனால் உறுதியாய் வார்த்தைகளை கூறியவன் முடிவு சரியா, என்பது போல் என்னைப் பார்த்தான்.

கேலிப் பேச்சும் சிரிப்புமாய் உற்சாகக் குவியலாய் இருந்தவனான இவன், இப்படி மாறிப் போனானே? இரத்த பாசம்- இரக்கம் நிறைந்தவர்கள் இவர்கள். இறைவன் ஏனிப்படி இந்த மக்களை சோதிக்கிறான்? வாழ்க்கையே ஒரு நரகம் போன்றல்லவா இன்று அந்த வடபுலத்தில்! என்ன பாவம் செய்தார்கள்?"

**"நீங்க? உங்க மூஞ்சி...? அந்த அரவிந்தசாமி மாதிரி இல்லையே....?"**



## ஷர்மிளா இஸ்மாயில்

ரகுவும் போய்விட்டான். கடிதம் மட்டும் வரும். அதுவும் பல மாதகாலங்களின் பின் ஒன்று. அது கூட எனக்கு பெரிய ஆறுதல் தான்.

கடிதத்தை வாசித்து முடித்தேன். உட்கார்ந்து யோசித்தேன். எப்போது என் கல்யாணம் என்று கேட்டெழுதியிருந்தாள். எனக்கு ரகுவை ஞாபகம் வந்தது.

அது 'பம்பாய்' படம் வந்த புதிது. கதையைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கையில் ரகு திடீரென்று "ஆமாம், நீங்க முஸ்லிம். நான் ஹிந்து. 'பம்பாய்ல' மாதிரி இரண்டு பேரும் கல்யாணம் முடித்துக் கொள்வோமா? எனக்கென்றா "உயிரே.... உயிரே"ன்னு ஒழுங்கா, அழகாப் பாட வராது. அது பரவாயில்லையா?" கேட்டுவிட்டு உரத்துச் சிரித்தான். வேணியும் கலகலவென்று சிரித்தாள். எனக்குள்ளும் சிரிப்பு முட்டி மோதியது.

"ஓ....அதுக்கென்ன? தாராளமா! என்னை கொஞ்சமாவது மனிஷாவுடன் ஒப்பிடலாம். சரியாப் போகும். ஆனா நீங்க? உங்க மூஞ்சி? அந்த அரவிந்தசாமி மாதிரி இல்லியே? அதுதான் பிரச்சனை." சிரிக்காமல் சொன்னேன். "பாவம் அண்ணா நல்லா மூக்குடைஞ்சி போச்சுதே..." கேலி செய்தாள் வேணி. நட்பும் சிரிப்புமாய் நேரம் போவதே தெரியாத இனிமை. என்னையறியாமல் பெருமூச்சுக்கள் வெளிவந்தன.

மாதங்கள் பல உருண்டோடின. வேணியிடமிருந்து இன்று கடிதம் வரும். நாளை வரும் என எதிர்பார்த்துக் காத்திருந்தேன். ம்ஹூம் இல்லை. எனக்குள் இனம் புரியாத ஏதோவோர் உணர்வு. என்னவோ நடந்துவிட்டது. மனது அடிக்கடி சொல்லியது. இறைவனை வேண்டிக்கொண்டிருந்தேன்.

எதிர்பாராத விதமாக வேணியின் உறவினரொருவர்- வெகு சிரமத்துக்கு மத்தியில் வடபுலத்திலிருந்து அவளது சித்தி வீட்டுக்கு வந்திருந்தார். தகவல் கேள்விப்பட்டு ஓடோடிப் போனேன்.

வீடே மயான அமைதியில். ஏதோ அமங்கள நிகழ்வு. சித்தியின் கண்கள் சிவந்திருந்தன. சித்தப்பா கதிரையில் சாய்ந்து வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். கேட்காமலேயே சொன்னார்கள்.

ஒரு நாள் சந்தேகத்தின் பேரில் இராணுவம் ரகுவைக் கைது செய்து போனதாம். ஒரு மாதத்தின் பின் அவனது மரணச் செய்தி மட்டுமே வந்ததாம். மகனை இழந்த துயரில் அவனது அப்பாவும் இறையடி சேர்ந்துவிட, தனித்துப் போன வேணியோ விரக்தியின் விளிம்பில். அவளையும் விசாரணை என்றழைத்துப் போய் இன்னும் விடுதலையில்லை. உயிருடன் இருக்கிறாளோ, இல்லை எங்கேனும் அரைகுறையாத் தோண்டப்பட்ட குழியில் மூடி புதைக்கப்பட்டாளோ?" சொல்லிச் சொல்லி நெஞ்சிலறைந்து புலம்பியழுதார் அவர். எனக்கு உலகமே தலைகீழாய்ப் போனது. என்ன விதியிது!



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

## முகத்தால் மட்டும்

தருவது ரசிகன்



"மறக்கலாமா? மன்னிக்கலாமா?
மா பாவி அல்லவா இவன்!"
வினா தொடுத்தனர் சுற்றத்தார்.

"திருந்த ஒரு சந்தர்ப்பம்
விருந்து நான் கேட்கவில்லை
வருந்தும் எனக்கு ஒரு புகலிடம்
அதுதான் என் விண்ணப்பம்!"
என்றான் தேடி வந்தவன்.

மன்னன் புன்னகைத்தான்
"மறக்கிறேன்-மன்னிக்கிறேன்
திறக்கிறேன் இதயத்தை
உனக்கும் தருகிறேன் ஓரிடம்!"
என்று வார்த்தைகளால் வருடினான்.

சபை முகம் சுருக்கியது
"முள் மரத்தை முத்தமிட்டால்
முகம்தானே காயப்படும்!
முள்ளான மனிதன் நட்பால்
அகம்தானே காயப்படும்!"

மூத்த அமைச்சர் முணுமுணுத்தார்.
முற்றிலும் சரியாகப்பட்டது சபைக்கு!

தேடி வந்தவன் பாகாய் உருகினான்.
"பகலவன் வந்ததும் பனி விலகும்
பகைவனே ஆனாலும் உன் மனம் இளகும்"

மன்னன் அதற்கும் புன்னகைத்தான்
புதிய நண்பன் புளகாங்கித்தான்!

மன்னனின் காதலி மாசற்ற அழகி
புதிய நண்பனோ அழகின் ரசிகன்.

"மாணிக்கத் தேர் நீயே
மரகத வீணையும் நீயே
காணிக்கையாக உயிரையே தரலாம்!
உருவிய வாளையும் பகைவர்
உறையிலே போடுவர்
உன் விழி பாயும் என்றால்!
உலகையே வெல்லலாம்
உலகையே ஆளலாம்
உன் மலர்மேனி உடனிருந்தால்!"

வஞ்சனையில்லாத பாராட்டா?
வாஞ்சையுடனான வலை வீச்சா?
மன்னனின் காதலி மதி குழம்பினாள்.

"மன்னனின் தோட்டத்தில் பல மலர்கள்
மலர்களின் ராணி நீ! மன்மத ராணி நீ!
ஆயிரம் மலரில் ஒரு மலராகலாமோ?"
சந்தேக விதையை வீசிப் பார்த்தான்.

"மன்னரின் நண்பர் நீர்
மனம் மாறிப் பேசலாமோ?"

"மன்னனுக்கு நண்பன் மட்டும்தான்
மண்ணிலவே! உனக்கு நான் பக்தன்."

"என்ன பேச்சு இது?
சுய நினைவை தொலைத்துவிட்டீரோ?"

"சுய நினைவை மட்டுமல்ல சுந்தரி
என் சுயத்தையே இழந்துவிட்டேனடி!
பாலை வனத்து ஒட்டகம்
நீரை நிரப்பிக்கொண்டு சீவிப்பதுபோல,
பாவி நான் உன் நினைப்பையே
நீராக நிரப்பிக்கொண்டு சீவிக்கிறேனடி!"

"வார்த்தைகளை
அளந்து பேசுவது நல்லது!"

"வார்த்தைகள் வெறும் அம்புகள்
அவற்றை ஏன் அளக்கவேண்டும்!
வா நான் உன்னையும்
வா நீ என்னையும் அளக்கலாம்!
உதடுகளால் உதடுகளை அளக்கலாம
உடல்களால் உடல்களை அளக்கலாம்
உணர்வுகளால் உணர்வுகளை அளக்கலாம்
உயிரால் உயிரை அளக்கலாம்
உடல்களைப் பிழிவோம்
உணர்வினில் இனிக்கும் அமுதத்தை குடிப்போம்"

அறைந்தாள் கன்னத்தில்
"பாவி நீ மனிதனா?
நண்பனாய் நடிக்கும்
பகைவனே நீயடா!"

"கனியிதழினால் கொடுத்தால் என்ன
கரத்தினால் கொடுத்தால் என்ன
இரண்டுமே ஒன்றுதான்
இனித்தது நன்றுதான்!"

மன்னனின் செவிக்கு
காதலி செய்தி சொன்னாள்.

மன்னன் நகைத்தான்.
அவளை மார்புறத் தழுவி அணைத்தான்.

சங்கென வழ வழத்த கழுத்தில்
உதடு புதைத்து,
சித்திரமாய் உயர்ந்த தாடையில்
உதடுகளால் கவ்விக்கொண்டு
சிற்றிடையில் கரம் சேர்த்து
இறுகப் பற்றிக் கொண்டு
மன்னன் கண்களால் நகைத்தான்!

பொறுக்கவில்லை அவளுக்கு
தன்னைப் பறித்துக் கொண்டாள்.
"கோபத்தில் நான் துடிக்கிறேன்
நீரோ காமத்தில் துடிக்கிறீர்!
கேட்ட வார்த்தைகள் ஈயத்தை
செவியில் கொட்டும் போது
கேளிக்கைக்கு நீர் அழைக்கிறீர்
மனம் என்ன மரத்தா போனது?"

மன்னன் அதற்கும் புன்னகைத்தான்
"உடல்களைப் பிழிந்து
உணர்வினில் கலந்த அமுதம் குடிக்கலாம்"
என்றவன் சொல்லி நகைத்தான்.

"எனக்கே தெரியாத இரகசியங்கள்
சொன்னவன் ஞானிதானே சொல்!"
என்று கேட்டு மீண்டும் நகைத்தான்!

படைகள் அணிவகுத்துப் பாய்ந்தன.
திசைகள் எங்கும் குருதி தெறித்தது!

பகைவனின் பலமும், பலவீனமும்
புதிய நண்பன் புட்டு வைத்தான்.

உள்ளங்கை நெல்லிக் கனியாய்
பகைவனின் இரகசியங்கள்!
பாய்ந்தன படைகள். மாய்ந்தனர் பகைவர்.
மாய்ந்தவர் போக மற்றவர் பணிந்தனர்!

பகை நாட்டு மன்னன்
மார்பில் வேல் பட்டுக் கிடந்தான்!

புரவியில் இருந்து குதித்த மன்னன்
பகைநாட்டு மன்னன்
முகம் பார்த்து தலை வணங்கினான்!

"விழ்ந்தாய் ஆனாலும்
வீரத்தோடு வீழ்ந்தாய் மன்னா!
சருகாய் அல்ல, விதையாய் வீழ்ந்தாய்.
உருவாய்-திருவாய்-என்றும் ஒளியாய்
என்றும் உந்தன் மக்களில் வாழ்வாய்!"

தலைவணங்கி திரும்பிய மன்னன்
புதிய நண்பனை
அருகினில் அழைத்தான்!

"உறையில் இருந்து புயலாய்
கிளம்பியது வாள்!
புதிய நண்பன்
சிரம் உருண்டது தரையில்!"

திகைத்தனர் மற்றோர்.
மன்னன் இப்போதும் புன்னகைத்தான்!
"உடனிருந்துவிட்டு ஓடிவந்து
காட்டிக் கொடுப்பவனை
பயன்படுத்தலாம்!
பக்கத்தில் வைத்திருக்கக்கூடாது!
இன்று எதிரிக்கு, நாளை எனக்கு!
என் எதிரிக்குக்கூட
இப்படியொரு நண்பன்
இருக்கக்கூடாது!"

"அப்படியானால்
தாங்கள் கொண்ட நட்பு?"

அது அகத்தால் கொண்ட நட்பல்ல
வெறும் முகத்தால் கொண்ட நட்பு!
பகைவர் நண்பராக நாடி வந்தால்
முகத்தில் நட்பு மலரும்போது
அகத்தில் விழிப்பு பூக்கவேண்டும்!
சமயம் வரும்போது
முக நட்பையும் முறிக்கும்
உபாயம் வேண்டும்!
சொன்னது நானல்ல
நம் திருவள்ளுவர்!"
மன்னன் நகைத்தான்!

"பகை நட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அக நட்பு ஒரீஇ விடல்"

அதிகாரம்-83. குறள்-830

ஸ்போர்ட்ஸ்

## வாஸிம் அக்ரம் செல்லமாட்டார்



இந்தியா சுதந்திரமடைந்து 50 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு, சுதந்திரதின கோப்பைக்கான கிரிக்கெட் போட்டிகள் இம் மாதம் 9ம் திகதி ஆரம்பமாகின்றன. இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், நியூஸிலாந்து ஆகிய நாடுகள் இப்போட்டியில் கலந்துகொள்கின்றன.

இந்தப் போட்டிகள் யாவும் பகல்-இரவு ஆட்டங்களாக நடைபெறுகின்றன. இப்போட்டியில் கலந்து கொள்ளும் பாகிஸ்தான் அணியின் வீரர்களில் வாஸிம் அக்ரம், வக்கார் யூனுஸ், முஷ்டாக் அகமட் ஆகியோர் இடம்பெறவில்லை. இவர்கள் மூவரும் இங்கிலாந்து கவுண்டி கிளப்பிற்காக விளையாட வேண்டியுள்ளதால் அணியில் இடம் பெறவில்லை.

பாகிஸ்தான் அணிக்கு ரமீஸ் ராஜா தலைமை தாங்குகின்றார். காயம் காரணமாக சிறிது காலம் விளையாடாமல் இருந்த சயிட் அன்வர், மீண்டும் அணியில் இடம்பெற்றுள்ளார்.

## அசார் குமுறுகிறார்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் முகமட் அசாருதீன். இவர்மீது சமீப காலமாக, போட்டிகளில் சிறப்பாக விளையாடவில்லை என்றொரு குற்றச்சாட்டு உண்டு. இது குறித்து அசாருதீன் கூறியிருப்பதாவது:



"3 மணி நேரம் களத்தில் இருந்து 30 ரன் எடுப்பது பலன் தராது. இந்திய அணியின் வெற்றிக்காக ஒவ்வொரு வீரரும் ரன் குவிக்க ஆசைப்படுவார்கள். நானும் அப்படித்தான். எனது சுயநலத்திற்காக நான் ஆடியது கிடையாது. நான் சுயநலத்திற்காக ஆடி இருந்தால் ஒரு நாள் போட்டிகளில் அடித்த 3 செஞ்சுரிகளைவிட அதிகமாக அடித்திருப்பேன்.

எனது மனைவி சங்கீதா என்னுடன் இருப்பதால் சரியாக ஆடவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது. கிரிக்கெட் வீரருக்கு ஏற்றத் தாழ்வு இருக்கும். அதற்காக சங்கீதாவைக் குறை சொல்லக் கூடாது.

கடந்த 2 வருடங்களாக என்னைப் பற்றித் தாறுமாறாக எழுதுகிறார்கள். இதனால் நான் மிகவும் பாதிக்கப்படுகிறேன். எனது தனிப்பட்ட வாழ்க்கையை விமர்சிப்பதை நான் விரும்பவில்லை. அமைதியாக வாழ விரும்புகிறேன். எனவே பேட்டி அளிப்பதைத் தவிர்த்து வருகிறேன்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## டைசனுக்கு கல்யாணம்

பிரபல குத்துச் சண்டை வீரர் மைக் டைசன், தனது காதலியான டாக்டர் மோனிகா டேர்னரை அண்மையில் திருமணம் செய்து கொண்டார்.

குத்துச் சண்டை உலகில் கொடி கட்டிப் பறந்தவர் முன்னாள் ஹெவி வெயிட் சாம்பியன் மைக் டைசன். அமெரிக்காவைச் சேர்ந்த இவருக்கும், ஜோர்ஜ் டவுன் பல்கலைக் கழக மருத்துவ மையத்தில் குழந்தைகள் டாக்டராகப் பணியாற்றும் மோனிகா டேர்னருக்கும் இடையே காதல் மலர்ந்தது.

கறுப்பு அழகி டிசிரி வோஷிங்டனைக் கற்பழித்த வழக்கில் டைசன் 3 வருடம் இன்டியானா சிறையில் தண்டனை அனுபவித்தபோது, டேர்னர் இவரை அடிக்கடி சந்தித்து வந்தார்.

இந்தத் திருமணம் மோனிகா டேர்னர் வீட்டில் எளிமையான முறையில் நடைபெற்றது. நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மட்டுமே திருமணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களது காதலுக்கு அடையாளமாக ஒரு வயதில் ஒரு குழந்தையும் உண்டு.

மைக் டைசன் ஏற்கனவே ரொபின் கிவ்வன்ஸ் என்ற தொலைக்காட்சி நடிகையைத் திருமணம் செய்து, விவாகரத்துச் செய்தவர்.

## சிந்தியா பதில்கள்

* மேற்கிந்தியத் தீவில் ஒருநாள் போட்டிகளில் இந்திய அணியின் தோல்வி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

எம். இல்யாஸ், கொழும்பு-09.

நான்கு ஒருநாள் போட்டிகளில் ஏதோ ஒன்றில் மட்டுமாவது வெற்றிபெற்றதே என்று ஆறுதல்பட்டுக் கொள்ளவேண்டியதுதான். இந்திய வீரர்களுக்கு போதுமென்ற மனது, போதுமென்ற அளவுக்கு மேலேயே இருக்கிறது.

○○○

* பிரிட்டனில் தொழிற்கட்சி மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறதே?

ஜே. ஆனந்தன், வவுனியா.

இளமை-புதுமை, வேகம். வேகம்! இன்றைய உலகம் விரும்புவது அதுவே! அதனால் பிரிட்டிஷ்காரர்களுக்கும் மேஜர் சலித்துப்போனார். டாட்டா காட்டிவிட்டார்கள்.

○○○

* தமிழ்நாட்டில் முதல்வர் கருணாநிதியும், த.மா.கா. தலைவர் மூப்பனாரும் மறுபடி சேர்ந்துவிட்டார்களே?

என். மணிவண்ணன், சிலாபம்.

கும்பிடும் கரத்துக்குள்ளும் கத்தி இருக்கும்! அதுதானே அரசியல் நட்பு. ஆனாலும் த.மா.கா. பட்ட சூட்டை மறக்காது. கலைஞரின் செந்தமிழ் விளக்கங்கள் காயத்துக்கு மருந்தாகாது. த.மா.கா. இப்போது அரசில் சேர்ந்திருப்பதுகூட தமிழ்நாட்டில் தன்னை நிலைப்படுத்தத்தான். ஒதுங்கியிருந்தால் தி.மு.க. தம்மை ஒதுக்கித் தள்ளிவிடும் என்று பயம்.

○○○

* பெண்களைப் பேதைகள் என்பவர்களை என்ன செய்யலாம்?

செல்வி சி. துஷ்யந்தி, மட்டக்களப்பு.

கண் டாக்டரைப் பார்க்கச் சொல்லலாம்.

பெண்களின் பருவத்திற்கு ஏற்ப பெயர்கள் மாறுபடும்.

5 முதல் 7 வயதுவரை - பேதை.
8 முதல் 12 வயதுவரை - பெதும்பை.
12 முதல் 13 வயதுவரை - மங்கை.
14 முதல் 19 வயதுவரை - மடந்தை.
20 முதல் 25 வயதுவரை- அரிவை.
26 முதல் 31 வயதுவரை - தெரிவை.
31 முதல் 40 வயதுவரை - பேரிளம்பெண்.

என்று தொடர்கிறது. ஆகவே உங்களைப் பேதையென்றால் கொஞ்சம் சந்தோஷப்படலாம். தப்பில்லை.

○○○

* யாழ்ப்பாண நிலவரம் இப்போது எப்படியிருக்கிறது?

ம. சிவஞானம், வத்தளை.

ஃபக்ஸ் செய்தியைக் கூட படையினர் பரிசோதித்தபின்னரே உரியவரிடம் கொடுக்கும் அளவுக்கு!

அவுஸ்திரேலியாவில் ஃபக்ஸ் மூலமே கிரிக்கெட் வீரர் மார்க் வோவ்வும் ஹாசல் பிள்ளை என்ற அழகியும் காதலித்து முடித்து கல்யாணத்தில் வந்து நிற்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் என்றால் இதெல்லாம் சாத்தியமா? சொல்லுங்கள். (பெருமூச்சுச் சத்தம் கேட்கிறதா?) அது சரி யார் அது ஹாசல் பிள்ளை? தமிழா என்று கேட்க உதடு துடிக்குமே! பூர்வீகம் தமிழ் என்றுதான் கேள்வி. தென் ஆபிரிக்காவில் குடியேறிய இந்தியப் பெண்ணாம். (என்ன தகவல் போதுமா?) நீங்கள் எறிந்தது ஒரு கல். யாம் தந்தது இரண்டு மாங்காய்கள்!

○○○

* டியர் சிந்தியா! யாரிடமெல்லாம் நாங்கள் விழிப்பாக இருக்க வேண்டும்?

சி. கிருஷ்ணகுமார், பசறை.

இனிக்க இனிக்கப் பேசுகிறவர்களிடம்.

○○○

* சமீபத்திய திரைப்படங்களில் கவர்ச்சி நாயகி யார்? ரம்பா, நக்மா, மீனா, சங்கவி?

பி. ராமச்சந்திரன், இரத்தினபுரி.

சந்தேகமேயில்லாமல் சங்கவிதான். நம்பிக்கையில்லாவிட்டால் 'தினமும் என்னைக் கவனி' வீடியோவில் பாருங்கள்.

○○○

* புரிந்துகொள்ள வேண்டியவற்றை புரிந்துகொள்ளவே முடியாத சாம்பிராணிகளை என்ன செய்வது?

எஸ். ஷாமினா, கற்பிட்டி.

கஷ்டம்தான் ஷாமினா. ஒரு குட்டிக்கதை கேட்கிறீர்களா?

டாக்டரிடம் சென்ற ஒருத்தர் தனக்கு 'அந்த' சமாச்சாரத்தில் ஆற்றல் கூட வேண்டும் என்று மருந்து கேட்டாராம்.

"தினமும் ஐந்து மைல் ஜாக்கிங் போ. இரத்தத்தில் சுறுசுறுப்பு வரும். மூன்று வாரம் சென்றபின்னர் உன் முடிவைச் சொல்லு!" என்றார் டாக்டர்.

மூன்றுவாரம் கழித்து அவனிடமிருந்து ஃபோன் வந்தது. உடனே டாக்டர் கேட்டார்:

"உன் அனுபவம் எப்படி இருந்தது சொல்லு?"

அதற்கு அவன் சொன்னான், "எனக்கு எப்படித் தெரியும்? நான் நீங்கள் சொன்னது போல, தினமும் ஐந்துமைல் தூரம் ஜாக்கிங் போய் இப்போது 105 மைல் தூரத்தில் இருக்கிறேன்," என்றான்.

டாக்டருக்குக் கெட்ட கோபம் வந்துவிட்டது. அதே சூட்டோடு டாக்டர் சொன்னது இது:

"நீ அங்கேயே இரு! உன் மனைவியும் சந்தோஷப்படுவாள்."

○○○

* விதி என்றால் என்ன? விளக்கம் சொல்லும்?

ஆர். மாலதி, கண்டி.

ஹஜ்ரத் அலி என்பவர் ஒரு ஞானி. அவரிடம் ஒரு யூதன் வந்தான்.

"பகுத்தறிவுள்ள மனிதன் விதியை நம்பலாமா? மதவாதிகள் தங்களைப் பகுத்தறிவாளர்கள் என்று கூறிக்கொண்டே விதியையும் நம்பச் சொல்கிறார்களே?" என்று கேட்டான்.

அதற்கு ஞானி, "உன்னுடைய வலது காலைத் தூக்கு!" என்று சொன்னார்.

அவனும் அப்படியே செய்தான்.

"சரி, நீ தூக்கிய காலை கீழே இறக்காமலேயே இடது காலையும் தூக்கு!" என்றார் ஞானி.

"அது எப்படி முடியும்?" என்றான் யூதன்.

உடனே ஞானி சொன்னது இது:

"உன்னால் ஒற்றைக் காலை மட்டும் தூக்க முடிந்ததே.... அது உன் பகுத்தறிவு. மற்றொரு காலைத் தூக்க முடியாமல் திண்டாடுகிறாயே; அதுதான் விதி!"

சில இயற்கை விதிகளை மாற்ற முடியாது.

○○○

* இந்தியப் பிரதமராக இன்னும் எத்தனை நாள் நீடிப்பார் குஜ்ரால்?

வி. பிரகாஷ், மட்டக்களப்பு.

முன்னாள் வெளியுறவு அமைச்சரும் இன்னாள் பிரதமருமான குஜ்ரால் எந்நாளும் காணாத கனவு இது. உள்ளுறவுகளை ஒழுங்காகக் கவனித்து எல்லோருக்கும் நல்லவராக இருந்தால் நாற்காலி ஆட நாளாகலாம்.

○○○

* கண்டதும் காதல் எல்லாம் வெற்றியில் முடிவதுண்டா சிந்தியா?

ஆர். ஜோசப், குருநாகல்.

விரக்தியில் முடிந்த கதை இது:

அவர்கள் இரண்டுபேரும் காதலர்கள்.

"எனக்கு எப்போதுமே உங்கள் நினைப்புத்தான். இப்போதும், எப்போதும்," என்றாள் அவள்.

"அப்படியா கண்ணே! ரொம்ப சந்தோஷம்!" என்று வாயெல்லாம் பல்லானான் காதலன்.

"நீங்கள் தான் அதுக்குக் காரணம். சாதாரண ஆளா நீங்கள்?"

"ஏன் அப்படிச் சொல்கிறாய்? என்னை அதிகமாகப் புகழாதே!" என்று நெளிந்தான் அவன்,

"நான் இதுவரைக்கும் கேட்டது எதையும் நீங்கள் மறுத்ததே கிடையாது. இன்னும் ஒரு வேண்டுகோள்.... இதனையும் மறுக்கக் கூடாது..."

"சொல் டியர் சொல்! என்ன செய்ய வேண்டும்?"

"அடுத்த மாதம் எனக்குக் கல்யாணம். அவசியம் நீங்கள் வந்து சேரவேண்டும்!"

○○○



* டியர் சிந்தியா! விசுவின் அரட்டை அரங்கம் பார்ப்பது உண்டா? 'இலக்கியங்கள் பெண்களை தரம் தாழ்த்துகிறதா? இல்லையா?' என்ற தலைப்பில் போகிறதே பார்த்தீரா?

செல்வி இ. ஜெசிந்தா, கொழும்பு-08.

தரம் தாழ்த்துகிறது என்ற ரீதியில் பேசுகிறவர்கள் நன்கு பேசினாலும் விசு இடையிலே புகுந்து சொல்லும் நியாயங்கள் சொதப்பலாக உள்ளன. விசுவும் பெண்கள் தொடர்பான சில பழைய கருத்துக்களின் பாதிப்பில் உள்ளவர்தான்!

'நாட்டுப்புற பாட்டு' படம் பெண்களை உயர்த்துவதாக விசு சொல்ல, ஒரு சிறுமி எழுந்து அந்த படத்திலேதான் 'ஒத்தை ரூபா தாரேன் வா' என்ற ரீதியிலே பாட்டும் இருக்கிறது என்று மடக்க, விசு அசடு வழிந்தார், பாருங்கள்.

பெண்களின் குளிப்புக் காட்சி இல்லாத படம் உண்டா? என்று சிறுமி பேசும்போது குறுக்கிட்ட விசு, "உன் ஆதங்கம் புரியுது, இனிமே ஆண்களையும் குளிக்க வைக்கச் சொல்கிறேன்!" என்றது விசுவின் தப்பான கோணத்தை தப்பாமல் காட்டிவிட்டதே! ■



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 82

இராமபிரான், இராவணன் தம்பியாகிய விபீடணனுக்கு அடைக்கலம் தருவதே சிறப்பானது என்று- அதற்கான பல காரணங்களையும் அனைவரிடமும் கூறினார். அபயம் என்று வந்துசேரும் எவருக்கும் அடைக்கலம் தருவதே சிறந்த பண்பு என்பதைப் பல கதைகளைக் கூறி விளக்கினார், அடைக்கலம் கோருபவர் எத்தகைய தீய எண்ணத்துடன் வந்தாலும், அதனால் பெரும் தீமையே நேரிட்டாலும் அதற்காகக் கவலை கொள்வது அழகல்ல என்று உறுதியாகக் கூறினார்.

பாற்கடலைக் கடையும்போது ஆலகால விஷம் தோன்றியது. இதனால் அஞ்சிய தேவர்கள் சிவபிரானிடம் அபயம் கோரிய போது, அப்பரம்பொருளே-ஆலகால விஷத்தின் கொடுமையை உணர்ந்தவராயினும்- தானே அவ்விஷத்தை அள்ளித் தன் வாயிலிட்டார். இராமபிரானின் முன்னோரான சிபிச்சக்கரவர்த்தியிடம், வேடுவனுக்குப் பயந்த புறாவொன்று பறந்தோடிச் சென்று அடைக்கலம் கோரியது. சிபிச்சக்கரவர்த்தி புறாவின் எடைக்கு எடை இறைச்சியைத் தன்னுடலிலிருந்தே வெட்டி எடுக்குமாறு வேடனிடம் வாக்களித்து, துலாபாரத்தில் ஏறிய கதையையும் இராமபிரான் கூறினார்.

கஜேந்திரன் எனும் யானையை ஒரு முதலை பிடித்திழுத்து நீரில் அமிழ்த்திக் கொல்ல முயன்றபோது, "ஆதிமூலமே! அடியேன் உனக்கு அடைக்கலம்" என்று அலறியதும் திருமாலே வந்து கஜேந்திரனைக் காத்த கதையையும் இராமபிரான் கூறினார்.

இத்தகைய கதைகளைக் கூறி வானரப் படைகளிடத்தில் ஏற்பட்ட அச்சத்தை இராமபிரான் தீர்த்து வைத்ததும் அவர்கள் அனைவரும் ஐயம் தெளிந்தவர்களானார்கள். விபீடணனைப்பற்றி ஆஞ்சநேயர் கூறிய கருத்துக்களும் மேலும் தெளிவினை ஊட்டியது. விபீடணனை தன்னிடம் அழைத்து வருமாறு, வானரர் தலைவன் சுக்கிரிவனையே இராமபிரான் கேட்டுக்கொண்டார்.

## அண்ணனுக்கே நன்றி

கடற்கரையில் வானரவீரர்களின் பாதுகாப்பு அரண் பலமுடன் விளங்க, நடுவில் விபீடணனும் அவனுடன் இலங்கையை விட்டு வந்தவர்களும் நின்றிருந்தனர். அவர்களை அணுகிய சுக்கிரீவன், விபீடணனிடம் சென்று இன் முகம் காட்டி இருகைகளாலும் அன்புடன் தழுவிக் கொண்டான். இராமபிரான் அடைக்கலம் அளித்துவிட்டதாகவும் தன்னுடன் வந்து இராமபிரானைக் காணுமாறும் விபீடணனை சுக்கிரீவன் அழைத்தான். உளம் மகிழ்ந்த விபீடணனும் அவர் தம் தோழரும் இராமபிரானிடம் சென்றனர். சாட்சாத் திருமாலாகவே விபீடணன் கண்களுக்கு இராமபிரான் காட்சி அளித்தார். இப்பேற்பட்ட தெய்வாம்சம் பொருந்திய மூர்த்தியைத் தரிசிக்கும் வாய்ப்பைத் தனக்களித்தமைக்காக தனது தமயனான இராவணனுக்கு மனதார நன்றி கூறிக்கொண்டான் விபீடணன்.

தன் பாதங்களில் விழுந்து வணங்கிய விபீடணனை தன் இருகைகளாலும் தொட்டு எழுப்பிய இராமபிரான், அவனைத் தன் மார்புறத் தழுவி தன் அன்பைத் தெரிவித்துக் கொண்டார்.

## "எழுவர் ஆனோம்"

விபீடணரையும் இராமபிரான், தனது சகோதரர்களுள் ஒருவராக ஏற்றுக்கொண்டதாக கவிச்சக்கர வர்த்தி செய்யுளில் இவ்வாறு காண்பிக்கிறார்:

**குகனொடும் ஐவர் ஆனேம்**
**முன்பு பின் குன்று சூழ்வான்**
**மகனொடும் அறுவரானேம்**
**எம்முழை அன்பின் வந்த**
**அகன் அமர் காதல் ஐய**
**நின்னொடும் எழுவர் ஆனேம்**
**புகல் அருங் கானம் தந்த**
**புதல்வரால் பொலிந்தான் நுந்தை.**

*(யுத்த காண்டம்-448)*

பொருள்:

***"ஏற்கனவே நாங்கள் சகோதரர்கள் நால்வராக இருந்தோம்; (கங்கைக்கரையில் ஓடம் செலுத்துபவனாக இருந்த) குகனோடு ஐவரானோம்; கிட்கிந்தையில் சூரியனின் மகனான சுக்கிரீவனுடன் ஆறு பேரானோம்; எம்முடன் நட்புக் கொள்வதற்காக எம்மிடம் வந்த உம்முடன் எழுபேர்களாகி விட்டோம். கானகத்தில் வாழும் பாக்கியத்தை எமக்கு அளித்த எம்தந்தையாகிய தசரதன் பெருமைக்குரிய புத்திரபாக்கியத்தைப் பெற்றவரானார்."***

இராமபிரானின் அன்புக்குப்பாத்திரமான சகோதரர்களுள் ஒருவன் என்ற அந்தஸ்தினைப் பெற்ற விபீடணன், தான் தன் பிறவிப்பயனை அடைந்துவிட்டதாகக் கருதினார். கண்கள் தாரைதாரையாகக் கண்ணீரைச் சொரிந்தன. தன்னைப் பற்றிய உண்மையான நிலையினை ஆஞ்சநேயரே இராமபிரானுக்கு எடுத்துக்கூறியிருக்க வேண்டும், என்று அவருடைய உள்ளுணர்வில் உதித்தது. இதனால் வாயு புத்திரன் நின்ற திசையைப் பார்த்து தனது கண்களினாலேயே நன்றி தெரிவித்தார்.

***

இராமபிரான், விபீடணனை தன் சகோதரர்களுள் ஒருவனாக ஏற்றுக் கொண்டதுடன் மட்டுமல்லாமல் இலங்காபுரியின் மாமன்னன் என்ற தகுதியையும் அளித்தார். இலக்குவனை அழைத்து, அதேபொழுதில் உள்ள சுபமுகூர்த்தத்தில் விபீடணனை இலங்கையின் வேந்தனாகப் பிரகடனப் படுத்தி, அதற்கான முடியினையும் சூடுமாறு பணித்தார். விபீடணன் சற்றும் எதிர்பாராத இப் பெருமை தன்னை வந்து சேர்ந்தமையினால் சற்றுத் திகைத்துத் தடுமாறிப்போனார். தனக்கு எம் முடியும் வேண்டாம்; தனக்கு அபயமளித்த அயோத்திமாநகரின் வேந்தன் இராமனின் திருப்பாதணிகளே தன் தலை மீது சூடப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார் விபீடணர். ஏற்கனவே தம்பி பரதனுக்குத் தன் பாதுகைகளை அளித்ததைப் போன்று, விபீடணனுக்கும் அளித்தார்.

## இலங்கைவேந்தன்

"இலங்கையின் வேந்தனான விபீடணனை வானர மன்னன் சுக்கிரீவனும் தம்பி இலக்குவனும் எமது வானரப்படைகளுக்கு அறிமுகப்படுத்திவிட்டு வாருங்கள்!" என்று இராமபிரான் கூறினார். உடனடியாக சந்தன மரத்தாலான ஓர் அழகிய சிவிகையில் ஏற்றி, வானர வீரர்கள் சுமந்து வர, வானர சேனை- படைகள் முகாமிட்டிருக்கும் பாசறைகளுக்கு விபீடணரை அழைத்துச் சென்றனர். வானர வீரர்கள் அளவிலா மகிழ்ச்சி ஆரவாரம் செய்து தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

# வேந்தரானார் விபீடணர்



விபீடணர் மட்டிலா மகிழ்ச்சியுடன் மீண்டும் வந்து இராமபிரானின் அடி தொழுதார். விபீடணருக்குரிய இருக்கையில் அமரச் செய்த இராமபிரானிடம் விபீடணர் ஒரு கோரிக்கையை விடுவித்தார். அரக்கர் குலமானாலும் அறம் பிறழாது வாழ்ந்த பரம்பரையில் மாபெரும் அதர்மங்களும் அக்கிரமங்களும் குடிகொள்ள இரணியன், இராவணன் போன்றோரே காரணகர்த்தாக்களாக இருந்தனர். அக்குலத்துக்கேற்பட்ட களங்கம் தன்னையும் வந்தடையாமல் பாதுகாத்துக் கொள்ள விரும்பியமையினால், "இராவணனுடன் பிறந்த தோஷத்தை நீக்கியருள வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்," என்று கேட்டுக் கொண்டார் விபீடணர். இராமரும் புன்முறுவல் பூத்தவராக அக் கோரிக்கைக்கு இணக்கம் தெரிவித்தார்.

## ஆழ்கடலைத் தாண்ட...

அன்றிரவு இராமபிரான், இளைய பெருமாளான இலக்குவன், சுக்கிரீவன், ஆஞ்சநேயர் போன்றோருடன் விபீடணரும் தோழர்களும் அமர்ந்து பல தரப்பட்ட பிரச்சனைகளையும் ஆராய்ந்தனர். இலங்கையின் பாதுகாப்பு நிலைகளையும் அரண்களையும் பற்றி விபீடணரே எடுத்துரைத்தார். இலங்கை முக்கியமாக எல்லாத்திசை களிலும் ஆழ்கடலே சூழ்ந்து அரண் செய்திருப்பதை விபீடணர் எடுத்துக்காட்டினார். இலங்கை நாட்டின் நான்கு திசைகளிலும் மாபெரும் வீரர்களடங்கிய படைகள் காவல்காத்து நிற்பதாகவும் அவற்றின் எண்ணிக்கைகளையும் விரிவாகக் கூறினார்.

படைகளின் எண்ணிக்கையயிட்டு விபரிக்கும் கவிஞர் பெருமான், கோடிக்கணக்காகவே காட்டுகிறார். கம்பர் காலத்தில் கோடி என்பதற்கான அர்த்தம் எத்தகையதாக இருந்ததோ தெரியவில்லை. இலங்கையின் வட திசைக்கான காவலர்கள் மட்டும் 'எண்ணிரு கோடி' என்கிறார். இதேபோல் ஏனைய திசைகளிலும் பலப்பல கோடி வீரர்கள் உள்ளனர் என்கிறார்.

பல இலட்சம் வானர வீரர்களை கடலரணைக் கடந்து எவ்வாறு இலங்கை கொண்டு சேர்ப்பது என்பதைப்பற்றிய சர்ச்சை தொடங்கியது. வாயு குமாரனான ஆஞ்சநேயர் கடலைக் கடக்க விஸ்வரூபமெடுத்து விண்தாவிச் சென்றார். அவ்வாறு செல்ல வல்லமையுடைய சிலர் இருக்கிறார்கள் எனினும் ஒரேதடவையில் அனைவரும் இலங்கைக் கரையினைச் சென்றடைய வேண்டும். இதற்கான வழி என்ன என்று இராமபிரான் விபீடணரை வினவினார்.

விபீடணர் இராமபிரானை வியப்புடன் பார்த்தார். 'தாங்களா இந்தச் சிறு விடயத்துக்கு என்னிடம் யோசனை கேட்கிறீர்கள்?' என்ற தோரணையில் அப்பார்வை இருந்தது. இருப்பினும் தனது கருத்தைக் கூறினார்:

"பிரபு! சாகரம் தோன்றக் காரணமாக இருந்த சகர மாமன்னர் வழி தோன்றியவர் தாங்கள். தாங்கள் கோரிக்கை விடுத்தால் வர்ண தேவனே விரைந்து வந்து, தங்கள் படையுடன் தாங்கள் செல்ல, கடலிலேயே ஒரு வழியை ஏற்படுத்தித் தர மாட்டாரா?"

இவ்வாறு விபீடணர் கூறியதும், இலக்குவனை அழைத்த இராமபிரான், வர்ண பகவானை வேண்டி விரதமிருப்பதற்கான ஆயத்தங்களைச் செய்யுமாறு பணித்தார். வானர வீரர்களின் உதவியுடன் விரைந்து இராமபிரானின் நோன்புக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. இராமபிரான் பூசைகளைச் செய்து உரிய முறையில் வர்ண பகவானை வந்திக்கும் மந்திரங்களை ஜெபிக்கலானார்.

நாட்கள் பலசென்றும் வருணபகவான் தோன்றவில்லை. இராமபிரான் அமைதி குலைந்தவராய், கோபம் பொங்க தன் வில்லை எடுத்து நாணேற்றி, கணையினை எய்ய ஆயத்தமானார். (தொடர்ந்து வரும்)

இராஜகுமாரன்

### இராமாயணப் போட்டி: 80
### சரியானவிடை:-பிரஹலாதன்

1. ஜே.ஷாம்மிகா.
   60,லேடி மக்கலம்ஸ டிரைவ், நுவரேலியா.
2. சீ.ஹோகுலவதனி.
   இல.84/59 சவீவபுரம், புத்தளம்.
3. ஃபாத்திமா சமீம்.
   604, எலமல்தெனிய, மருதஹாகமுல.
4. வீ.நகுலேஸ்வரன்.
   பட்டாபுரம், பெரியபோரதீவு.
5. செல்வி கே.யோபிக்கா., சேமன் வீதி, முறக்கொட்டாஞ்சேனை.

**போட்டி இல. 82** கேள்வி:- **இராமபிரானின் ஏழு சகோதரர்களின் பெயர்களை முறையாகத் தருக?**

மே. 17 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி– இல.82, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# மு.க. க.மூ. வும்

## காதிலைபூ கந்தசாமி

**கா.பூ.க:** வணக்கம் கலைஞரே!

**கலைஞர்:** வாரும், வாரும் ஏன் சுணக்கம்? முன்னரே எதிர்பார்த்தேன், சற்றே பின்னர் தான் வந்திருக்கிறீர்?

**கா.பூ.க:** வேட்டி கட்டிய தமிழர் பிரதமராவதை போட்டியாக நினைத்து தடுத்து விட்டீர்களாமே!

முத்துவேலர் கருணாநிதி நினைத்தார்
முரசொலி மாறன் முடித்தார்
கருப்பையா மூப்பனாரை தடுத்தார்
என்பதுபோல செய்திகள் வருகிறதே?

**கலைஞர்:** மு.க என்று சுருக்கமாக அழைத்தால் அது என்னைக் குறிக்கும்! க.மூ. என்று சுருக்கமாகச் சொன்னால் அது கருப்பையா மூப்பனாரை குறிக்கும்! எங்கள் பெயர்களைக் குறிக்கும் எழுத்துக்களிடையேகூட ஓசை நயம் ஒத்து வருகிற போது, மூப்பானாரின் ஆசை நிறைவேற ஒத்துழைக்க மறுத்திருப்பேனா என்று நீங்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும். எண்ணிப் பார்த்தாலும் சரி, ஏணி வைத்து ஏறி எட்டிப்பார்த்தாலும் சரி ராமர் முடி சூடுவதை தடுத்த கூனியாக நான் இருந்திடவில்லை என்பதை தெரிந்திடலாம்!




**கா.பூ.க:** பாராளுமன்றத்திலே கவுடா அரசு கவிழ்ந்த அன்றே, அடுத்த பிரதமர் குஜ்ரால் தான் என்று முரசொலிமாறன் சபையில் வைத்தே தன் சகாக்களுக்கு கூறினார், நாமும் அதை காதால் கேட்டோம் என்கிறார்களே தமிழ் மாநில காங்கிரஸ் எம்.பி.கள்.

**கலைஞர்:** அப்படி அவர்கள் சொல்லியிருக்கிற காரணத்தால் அவர்களுக்கும் நமக்கும் உள்ள ஒற்றுமையும், ஒரு பெரிய வேற்றுமையும் வெளிப்பட்டிருக்கிறதே அல்லாமல் வேறெதுவும் கிடையாது.

**கா.பூ.க:** ஒற்றுமை என்ன, வேற்றுமை என்ன?

**கலைஞர்:** காங்கிரஸ்காரர்களும் காதுகளால் தான் கேட்கிறார்கள், கழகத்தினரும் காதுகளால் தான் கேட்கிறார்கள் என்பது பிரிக்க முடியாத ஒற்றுமையைக் காட்டுகிறது. ஒட்டுக் கேட்கும் அளவுக்கு அவர்கள் நம் ஒற்றுமை எண்ணத்தை சந்தேகித்தது போல, கழகத்தினர் காதுகள் காங்கிரஸார் பேசுவதை ஒட்டுக் கேட்குமளவுக்கு நீள்வதில்லை என்பது வேற்றுமையைக் காட்டுகிறது! அதில் என் வேதனையும் இருக்கிறது!

**கா.பூ.க:** ஒட்டுக்கேட்டது தப்பாக இருக்கலாம், ஆனால் முரசொலி மாறன் ஏன் அப்படிச் சொன்னார்?

**கலைஞர்:** அவர் அதை ஒரு ஆருடமாகச் சொல்லியிருக்கலாம் ஆணித்தரமாக சொல்லியிருக்கமாட்டார்.

**கா.பூ.க:** ஆருடங்களில் உங்களுக்கு நம்பிக்கையிருக்கிறதா?

**கலைஞர்:** முத்துவேலர் கருணாநிதிக்கு நம்பிக்கையில்லை என்பதற்காக, முரசொலி மாறனுக்கும் நம்பிக்கை இருக்காது என்ற முடிவுக்கு வர முடியாது.

**கா.பூ.க:** மூப்பானார் பிரதமராவதை முரசொலி மாறன் விரும்பவில்லை என்றுதானே அர்த்தம்?

**கலைஞர்:** மூப்பனார் பிரதமராக வேண்டும் என்ற விருப்பம் மாறனுக்கு இருந்தாலும், அரசியல் திருப்பம் எப்படி இருக்கும் என்ற கருத்தைத்தான் அவர் கூறியிருப்பார்.

**கா.பூ.க:** அப்படி ஒரு திருப்பம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிந்தால், மூப்பனார் பிரதமராவதை ஆதரிப்போம் என்று நீங்கள் ஏன் கூறினீர்கள்?

**கலைஞர்:** அன்று மட்டுமல்ல, இன்று மட்டுமல்ல, இனி என்றுமே மூப்பனார் பிரமராவதை ஆதரிப்பது என்ற கொள்கையிலே மாற்றம் கிடையாது. அதற்காக வேறு ஒருவர் பிரதமராக தெரிவு செய்யப்படுவதை எதிர்க்க வேண்டும் என்று அர்த்தமல்ல. மூப்பனார் பிரதமராவதை ஆதரிப்போம், வேறுயாராவது பிரதமரானால் எதிர்க்கவும் மாட்டோம். அன்பு நிலை காரணமாக ஆதரிப்பது வேறு, அரசியல் சூழ்நிலை காரணமாக உருவாகும் பிரதமர்களை அங்கீகரிப்பது வேறு என்பதை நான் சொல்லித்தான் நாடு அறிய வேண்டுமென்பதில்லை!

**கா.பூ.க:** ஐக்கிய முன்னணிக்குள் நீங்கள் வாதாடியிருந்தால் மூப்பானார் பிரதமராவதை யாரும் தடுத்திருக்க முடியாதாமே?

**கலைஞர்:** வாள் எடுக்கவே வாய்ப்பில்லாத போது போரிடுவது எப்படி? அதனால்தான் என் எண்ணங்கள் எல்லாமே உறைவிட்டுக் கிளம்பாத வாள் போல உள்ளத்தில் அடைபட்டுக்கிடந்தன. என் கருத்துக்கள் ஏற்கப்படுமளவுக்கு அங்குள்ள சூழ்நிலை இருக்கவில்லை. அந்தச் சூழ்நிலைக்கு மாறாக மூப்பனாரை பிரதமராக்கியே தீருவேன் என்று சூளுரைத்திருந்தால் சூழ்ச்சிக்காரன் என்ற பட்டம்தான் கிடைத்திருக்கும். வாயாடி என்ற வசைதான் வாதாடியிருந்தால் வந்து சேர்ந்திருக்கும். அவ்வாறான அவப்பெயரை தமிழக மக்களுக்கு தேடித்தர நான் எண்ணவில்லை.

**கா.பூ.க:** இந்தி தெரியாதவர் பிரதமராகக் கூடாது என்று கம்யூனிஸ்டுக்கள் கூறியதை நீங்கள் கண்டிக்கவில்லையே?

**கலைஞர்:** இந்தி தெரியாத கவுடா பிரதமராக இருந்ததை ஆதரித்ததும் இதே கம்யூனிஸ்டுக்கள்தான் என்பதால் நான் உடனே கண்டிக்கவில்லை.

**கா.பூ.க:** முன்னர் இந்தியை எதிர்த்து தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்தீர்கள். இப்போது இந்தி தெரியாது என்ற ஒரே காரணத்துக்காக தமிழர் ஒருவர் பிரதமராவதை தடுப்பதற்கும் அதே தலையை ஆட்டி விட்டீர்களே?

**கலைஞர்:** 'தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ் நாட்டின் முதலமைச்சராக வரவேண்டும்' என்பதுதான் பேரறிஞர் அண்ணாவின் கொள்கையே தவிர, இந்தி தெரியாத தமிழன் தான் இந்தியாவின் பிரதமராக வேண்டும் என்று அண்ணா ஒருநாளும் சொன்னதில்லை.

**கா.பூ.க:** அப்படியானால் கம்யூனிஸ்ட்டுக்களின் கருத்தை ஏற்றுக்கொள்கிறீர்களா?

**கலைஞர்:** கழகம் கம்யூனிஸ்ட்டுக்களின் கருத்துகளோடு முரண்பாடு கொண்டதுமல்ல, அதற்காக அவர்களது சகல கருத்துக்களோடும் உடன்பாடு கொண்டதுமல்ல என்பதை நான் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறேன்.

**கா.பூ.க:** இந்தி தெரிந்த பிரதமர் வேண்டும் என்று கம்யூனிஸ்ட்டுக்கள் கூறுவதை ஆதரிக்கிறீர்களா?

**கலைஞர்:** இந்தி தெரிந்த பிரதமர் வேண்டும் என்று கேட்டது அவர்களது ஆதங்கம்! இந்தி தெரிந்த பிரதமர்தான் வேண்டும் என்று அவர்கள் கேட்டிருந்தால் அது ஆதிக்கம்! கம்யூனிஸ்ட்டுக்கள் ஆதங்கப்பட்ட காரணத்தால்தான், அதனை ஆதிக்க மனோபாவம் என்று கருதி ஆத்திரம் கொள்ள முடியாமல் இருக்கிறது!

**கா.பூ.க:** தமிழ் மாநில காங்கிரஸ்காரர்கள் உங்களுக்கு எதிராக சுவரொட்டி ஒட்டியிருக்கிறார்கள். மாறனின் கொடும்பாவியை எரித்திருக்கிறார்கள். இதனால் ஒற்றுமை பாதிக்கப்படுமா?

**கலைஞர்:** தேனிலவில் ஏற்பட்ட ஊடலாகத் தான் இதனை நினைக்கிறேன். காதலன் மார்பிலே காதலி தன் கைகளால் ஓங்கிக் குத்துகிறாள் என்றால், சற்றே நொந்தாலும் கூட காதலன் முகம் சுளிப்பதில்லை. கண்ணே, மணியே, என்றுதான் கனிவாக அழைப்பான். கரமதால் அணைப்பான். அந்தக் காதலன் நிலையிலே தான் கழகம் இருக்கிறது. ஊடல்கொண்ட காதலி நிலையிலே தான் காங்கிரஸ் இருக்கிறது!

**கா.பூ.க:** குஜ்ரால் பிரதமராக நீடிப்பாரா?

**கலைஞர்:** அது அவர் கையிலே இல்லை. *(கைவிரலை சொடுக்குப் போட்டு மேலே காட்டுகிறார்)*

**கா.பூ.க:** என்னங்க இது ரஜினி ஸ்டைலா? உங்களுக்கும் ஆண்டவன் நம்பிக்கையா? ஆண்டவன்தான் ஆட்சி நடத்துறாரா?

**கலைஞர்:** ஆண்டவன் எப்போதடா ஆட்சி நடத்தினான் முட்டாள்? நான் சொன்னது ஐக்கிய முன்னணியை! அவங்க நடத்துறாங்க, இவர் நடக்கிறாரு! ஐக்கிய முன்னணிக்காரங்க நினைக்கிறாங்க, ஐ.கே.குஜ்ரால் முடிக்கிறாரு! *(விரலை மீண்டும் சொடக்கி தலைக்கு மேல் உயர்த்தி காற்றைக் கிழிப்பது மாதிரி வீசுகிறார்)*

**கா.பூ.க:** மன்னிக்கணும் தலைவரே! ஒரு தனிப்பட்ட கேள்வி. இந்த மஞ்சள் துண்டை தோளில் போட்டிருக்கிறீர்களே, ஜோசியர்களின் அட்வைஸ் என்கிறார்களே உண்மையா?




**கலைஞர்:** மஞ்சள் என்பது மங்கலத்தைக் குறிக்கும் வண்ணம். எங்கும் மங்கலம் நிலை பெற வேண்டும் என்பதுதான் என் எண்ணம்!

**கா.பூ.க:** அப்படியானால் உங்கள் கட்சிக் கொடியில் மட்டும் கறுப்பும்-சிவப்பும் எதற்கு? நிறத்தை மாற்றுவீர்களா?

**கலைஞர்:** நிறம் மாற்றிக் கொள்ளும் பழக்கம் எங்களுக்கில்லை.

**கா.பூ.க:** தோள் துண்டின் நிறத்தை மட்டும் மாற்றலாமா?

**கலைஞர்:** மத நம்பிக்கையின்படியல்ல, மருத்துவ நம்பிக்கைப்படித்தான் மாற்றியிருக்கிறேன். கழுத்துப் பகுதிக்கு கதகதப்பாக இருப்பது மஞ்சள் நிறத்துண்டு என்பது மருத்துவ கண்டுபிடிப்பே தவிர, மதகுருமாரின் உத்தரவல்ல.

**கா.பூ.க:** மூடநம்பிக்கைதான் காரணம் என்று சொல்வோரின் வாயடைக்க ஒரு முறையாவது வேறு நிறத் துண்டுடன் பொது நிகழ்ச்சியில் கலந்து காட்டலாமே?

**கலைஞர்:** காட்டலாம். அது ஒன்றும் ஆகாத காரியம் அல்ல. ஆனால், எதிரிகளின் எதிர்ப்புக்கு கருணாநிதி பணிந்தான், ஏளனத்துக்கு பயந்தான் என்னும் இழுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்ற காரணத்தினால், மஞ்சள் நிறத்துண்டை தோளில் இருந்து இறக்க நான் தயாராக இல்லை என்பதை தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன். நன்றி வணக்கம். இத்தோடு போதும். நீர் புன்னகை முத்தோடு இடத்தை காலி பண்ணும்.

www.padippakam.com

அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
580230
பல வாடிக்கையாளர்களின் பெரு விருப்பத்தின் பேரில் வெள்ளவத்தையில் எமது புதிய கிளை:-
105 GALLE ROAD, COLOMBO 06
காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-




## சறுக்கல்

ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
323657
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

ரமீஸ் ராஜா தலைமையில் இலங்கை வந்த பாகிஸ்தான் அணி இரண்டு டெஸ்ட்டுக்களில் ஆடியது. இரண்டும் சமமாக முடிந்தது. டெஸ்ட் அனுபவமுள்ள பாகிஸ்தான் அணி, டெஸ்ட் அனுபவத்தில் இளம் பருவத்தில் உள்ள இலங்கையை வெல்ல முடியாதது ஒரு சறுக்கல்தான்.

மற்றொரு சறுக்கல் இஜாஸ் அஹமட் விவகாரம். இலங்கை அணிக் கப்டன் ரணதுங்காவை அநியாயமாக அவுட் கொடுத்து வெளியேற்றினார் நடுவர். சற்று ஆடுகளத்தில் ரணதுங்கா தாமதிக்க 'போதும் போ' பாணியில் கடுமையாய் அஹமட் ஏதோ சொல்ல ரணதுங்கா புகார் செய்தார். விளைவு, இலங்கையில் விளையாடியதால் வருமானத்தில் 20 சதவீதத்தை அபராதமாக கட்டி அழவேண்டியதாயிற்று.

இஜாஸ் அஹமட் சிறந்த துடுப்பாட்ட வீரர். ஏன் இப்படி நடந்து கொண்டார் என்பது புதிர்தான். மற்றொரு சிறந்த வீரரான சலீம் மாலிக் அவர்மீதான புகார்களால்தான் கப்டனாக முடியாமல் இருக்கிறது. இலஞ்சம் கொடுத்த புகார் போன்றவற்றால் வாசிம் அக்ரம் இல்லாத போதுகூட சலீம் மாலிக்கை அணிக்கு தலைமை தாங்க வைக்க பாகிஸ்தான் கிரிக்கெட் போர்ட் தயங்குகிறது. இஜாஸ் அஹமட்டுக்கும் அவ்வாறு நேர்ந்துவிடக்கூடாது.

இலங்கையில் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் சலீம் மாலிக் சிறப்பாக ஆடினார். இரண்டாவது டெஸ்ட்டில் 155 ஓட்டங்களை (24 பவுண்டரிகள் உட்பட) அதிவேகமாக குவித்தது மூலம் தனது 15வது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தது சலீம் மாலிக்குக்கு பூரிப்பான விஷயம். இரண்டாவது டெஸ்ட்டில் இஜாஸ் அஹமட்டுடன் மூன்றாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்தார் சலீம் மாலிக். இருவரும் இணைந்து 127 ஓட்டங்களை சேகரித்தனர். இஜாஸ் அஹமட் இந்த டெஸ்ட் தொடரில் சதம் அடித்தது மூலம் (113) தனது 7வது டெஸ்ட் சதத்தை எட்டியிருக்கிறார். ■

## தப்பாத தாளங்கள்




உலக சாதனைகள்தான் எத்தனை ரகம். இவர் பாத்திரத்துக்குள் நின்று என்ன செய்கிறார் தெரியுமா? நீர் விடப்பட்ட இப் பாத்திரத்துக்குள் இறங்கி நின்று இரு கால்களாலும் மாற்றி மாற்றி-அதாவது அணிவகுப்பில் லெப்ட், ரைட் போடுவது போல- உதைத்துக் கொண்டே இருந்தார். ப்பூ இவ்வளவுதானா என்று நினைக்கிறீர்களா? அங்கேதான் தப்பு செய்கிறீர்கள். மொத்தம் 10 இலட்சம் தடவைகள் அப்படி மாற்றி மாற்றி உதைத்திருக்கிறார். எடுத்துக் கொண்ட நேரம் 23 மணித்தியாலமும் 43 நிமிடங்களும். இச் சாதனை நடைபெற்றதுகூட கின்னஸ் உலக சாதனையாளர் கண்காட்சியில்தான். 1985 நவம்பர் 1ம் திகதி இந்த உலகசாதனை செய்யப் பட்டது. இவரது பெயர் றோய் காசில். பிரித்தானியர். 1992, 1993ல் பி.பி.சி.யில் சாதனையாளர் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கியவரும் இவர்தான். ■

## நீலப்புதிர்



ஒரு வியப்பான சமாச்சாரம் கேட்கிறீர்களா. ஊர் வாயிலைக் கும் படத்தைப் பார்த்துவிட்டு மேற்கொண்டு படியுங்கள். 'றாஸ்' எனப்படும் மீன்களுக்கும் சில வகைச் சிறிய ர மீன்களுக்குமிடையில் நெருங்கிய உறவு இருந்து வருகிறது. 'றாஸ்' மீன்களின் உடலிலும் கவாச அவயவமான செவுளிலும், வாயினுள்ளும் கூட அழுக்குச் சேர்ந்து விடும். இவ்வேளைகளில் 'றாஸ்' மீன்கள் பவளப்பாறைகளை நாடி ஓடும். அங்கே இவற்றின் வரவுக்காக சில சிறிய மீன்கள் காத்து நிற்கின்றன. [illegible] ■



## வண்ணச் சிறகினிலே

[illegible] ■

## என்றும் மோதலுடன்



கீரியும் பாம்பும் எப்போதும் ஒன்றுக்கொன்று எதிரிகளாகவே இருக்கின்றன. கீரியை ஒரே கொத்தில் கொத்தி தன் நஞ்சினால் அதனைக் கொன்றுவிடும் சக்தி நாகபாம்பிடம் இருக்கிறது. ஆனால் கீரி தந்திரசாலி. பாம்பின் விஷப் பல் தன்மீது பட்டுவிடாமல் தந்திரமாகத் தப்பிவிடும் வித்தை கீரிக்கு கைவந்த கலை. பாம்பின் வாய் கீரியின் வாயைவிட பெரிதாக விரிந்தாலும், கீரி பாம்பின் வாயை முத்தமிடுவதுபோல ஒரே கவ்வாகக் கவ்வி பாம்பை முறியடித்துவிடும்.

யுத்த நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லாத பகைதான். கீரியும்-பாம்பும் மோதும் அரிய காட்சி இது. போர்க்களத்தில் நின்று படம் எடுப்பதைப் போன்ற துணிச்சல் இந்த மாதிரியான புகைப்படங்களை எடுக்கவும் நிச்சயம் தேவை.

பாம்பு படமெடுத்தாலே நடுக்கம் வரும். இந்த இலட்சணத்தில் கீரியும்-பாம்பும் சண்டை போடுவதைப் படமெடுக்க துணிச்சல் வருவதென்றால் இதனை 'கிளிக்' செய்தவர் நூறு சதவீதமான கில்லாடிதானே! ■



இப்பத்திரிகை கொழும்பு ... இலக்கத்தில் தினமுரசு பதிப்பகத்தாரால் ... மே 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.